பழைய ஏற்பாடு

வினா-விடை

புனித பவுல் விவிலிய நிலையம்
பூந்தமல்லி

(For Private Circulation Only)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பழைய ஏற்பாடு

வினா-விடை

-- வெளியீடு --

புனித பவுல் விவிலிய நிலையம்

பூந்தமல்லி

நூல்	:	பழைய ஏற்பாடு : வினா-விடை.
உரிமை	:	புனித பவுல் விவிலிய நிலையம், பூந்தமல்லி.
முதல் பதிப்பு	:	மே 2001.
வெளியீடு	:	புனித பவுல் விவிலிய நிலையம் பூந்தமல்லி, சென்னை - 600 056.
பக்கம்	:	199.
அச்சிட்டோர்	:	வேளாங்கண்ணி அச்சகம், இராயப்பேட்டை சென்னை.

முன்னுரை

விவிலிய அன்பர்களே வணக்கம்,

கடவுள் வெளிப்படுத்திய மீட்புச் செய்தியை நாம் விவிலியத்தில் காண்கிறோம். விவிலியம் பல இலக்கிய வகைகளைக் கொண்டது. பல ஆசிரியர்களால் ஏறக்குறைய 1800 ஆண்டுகளாக உருவாக்கப்பட்டது. இதனைப் பல வழிகளில் நாம் படித்துப் புரிந்துகொண்டு நம் வாழ்வில் செயல்படுத்த முடியும். விவிலியச் செய்தியை கட்டுரைகளாகவும், பாடல்களாகவும், செபங்களாகவும் நாம் பயன்படுத்தி மக்களுக்குக் கடவுளின் வார்த்தையை எடுத்துரைக்க முடியும். வினா–விடை என்பது மற்றும் ஒரு முறை, அதாவது விவிலியம் முழுவதையும் கேள்வி பதில் மூலம் அமைத்து அதனை எளிய முறையில் படிப்பதனால் விவிலிய உண்மைகளைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. சிறு சிறு வினாக்கள் தயாரித்து அதற்கான பதிலையும் விவிலியத்திலிருந்தே நேரடியாக அளிப்பதனால் செய்திகள் நம் உள்ளத்தில் ஆழப் பதிகிறது.

இக்காலத்தில் வினாடி–வினா என்பது எல்லா நிலைகளிலும் மிகவும் புகழ்பெற்ற ஒரு வழியாகும். தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் பொது அறிவை வளர்க்கும் வினாடிவினா நிகழ்ச்சிகள் அதிகம் அமைந்துள்ளதை நாம் காண்கிறோம். அது போன்றே விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த நூல் வினா–விடை அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்தச் சிறு நூலில் பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் வினா–விடை அடிப்படையில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது. இதனைப் படிப்பதன் மூலம் விவிலியச் செய்தியைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். அத்துடன் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விவிலியம் கற்றுத்தரும்போதும் மற்றும் விவிலிய விடுமுறைப் பள்ளி, விவிலியக் கருத்தரங்குகள் போன்றவற்றிலும் இந்நூலைப் பயன்படுத்தி விவிலியச் செய்தியைத் தெளிவாக எடுத்துரைக்க இயலும்.

இதனைத் தயாரிக்க எமக்கு உதவியாக இருந்த விவிலிய நிலைய மாணவச் சகோதரிகள் (2000–2001) யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் எமது நிலையப் பணியாளர்களுக்கும், அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைவார்த்தையை ஊன்றிப் படிக்க இந்நூல் உதவும் என்று நம்புகிறேன்.

அன்புடன்

1.5.2001 (அருள்திரு அ. பீட்டர் அபீர்)

பூந்தமல்லி. இயக்குநர்

நன்றி

இந்நூலைத் தயாரிக்க உதவிய

1) எமது நிலைய மாணவச் சகோதரிகள் (2000-2001)

சகோ. அமலா மரகதம் (OSM), சகோ. கிளாரா மேரி (OSM)
சகோ. எல்சி லூர்க்காஸ் (Cluny), சகோ. பிரான்சிஸ்கா ரூதை (Sisters of Povidence)
சகோ. ஜெயா (SMA), சகோ. ஜெசிந்தா (CIC)
சகோ. ஜெயமேரி (FBS), சகோ. ஜெயராணி (Seva Missionary)
சகோ. ஜோனா அமலோற்பவமேரி(IHM),
சகோ. ஜான் மேரி (OSM), சகோ. கலைச் செல்வி (Sacred Heart),
சகோ. லூர்து மேரி (OSM), சகோ. மரிய புஷ்பம் (IHM),
சகோ. மரிய எமிலி (Cluny), சகோ. நிர்மலா தேவதாஸ் (Holy Cross),
சகோ. மேரின்பம் சேவியர் (Holy Cross),
சகோ. புஷ்பராணி (SMA), சகோ. ரோமானா (CTC)
சகோ. சோபியா வாஸ் (FBS), சகோ. சாலமோன் பிலோமினா (FMA)
சகோ. ஸ்டெல்லா (Sacred Heart)

2) நிலையப் பணியாளர்கள்

அருள்தந்தை. மரிய டெல்லஸ், சகோ. கேத்திரின்,
சகோ. ஆரோக்கியமேரி, திருமதி. ஜோஸ்பின்,
திரு. இருதயராஜ், திரு. பால்ராஜ்.

3) கணிப்பொறி வடிவமைப்பு : திருமதி. பிரியா தாமஸ்

4) அச்சிட்டோர்: வேளாங்கண்ணி அச்சகம்,
இராயப்பேட்டை, சென்னை.

உள்ளுறை

பழைய ஏற்பாட்டு நூல்கள்

பெயர்	*சுருக்கக் குறியீடு*	*பக்கம்*
தொடக்க நூல் (ஆதியாகமம்)	தொநூ	17
விடுதலைப் பயணம் (யாத்திராகமம்)	விப	32
லேவியர் (லேவியராகமம்)	லேவி	39
எண்ணிக்கை (எண்ணாகமம்)	எண்	41
இணைச் சட்டம் (உபாகமம்)	இச	47
யோசுவா	யோசு	49
நீதித் தலைவர்கள்	நீத	57
ரூத்து (ரூத்)	ரூத்	68
1 சாமுவேல்	1 சாமு	69
2 சாமுவேல்	2 சாமு	78
1 அரசர்கள்	1 அர	88
2 அரசர்கள்	2 அர	92
1 குறிப்பேடு	1 குறி	98
2 குறிப்பேடு	2 குறி	101
எஸ்ரா	எஸ்ரா	107
நெகேமியா	நெகே	109
எஸ்தர்	எஸ்	111
யோபு	யோபு	113
திருப்பாடல்கள்	திபா	117
நீதிமொழிகள்	நீமொ	120

பெயர்	சுருக்கக் குறியீடு	பக்கம்
சபை உரையாளர்	சஉ	122
இனிமைமிகு பாடல் (உன்னத சங்கீதம்/ பாட்டு)	இபா	123
சாயா	எசா	126
ரேமியா	எரே	136
லம்பல்	புல	142
சேக்கியேல்	எசே	143
னியேல்	தானி	146
சேயா	ஓசே	148
யாவேல்	யோவே	149
மோஸ்	ஆமோ	151
பதியா	ஒப	152
யானா	யோனா	153
க்கா	மீக்	154
கூம்	நாகூ	156
பக்கூக்கு	அப	158
ப்பனியா	செப்	159
காய்	ஆகா	160
க்கரியா	செக்	161
ாக்கி	மலா	163

இணைத் திருமுறை நூல்கள்

யர்	சுருக்கக் குறியீடு	பக்கம்
ாபித்து (தொபியாசு ஆகமம்)	தோபி	164
ித்து	யூதி	168

பெயர்	சுருக்கக் குறியீடு	பக்கம்
சாலமோனின் ஞானம் (ஞானாகமம்)	சாஞா	171
சீராக்கின் ஞானம் (சீராக் ஆகமம்)	சீஞா	174
பாரூக்கு (எரேமியாவின் மடல்)	பாரூ	182
1 மக்கபேயர்	1 மக்	185
2 மக்கபேயர்	2 மக்	196

பழைய ஏற்பாடு

வினா-விடை

பொது முன்னுரை

1. விவிலியத்தின் புதிய ஒன்றிப்பின் படி தமிழ் மொழிப் பெயர்ப்பில் என்ன பெயர் இடப்படுகிறது?

   – திருவிவிலியம்.

2. கத்தோலிக்க முறைப்படி பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை?

   – 46 நூல்கள்.

3. ஏற்பாடு என்பதன் பொருள் என்ன?

   – உடன்படிக்கை.

4. யூத முறைப்படி சட்ட நூல்கள் எத்தனை?

   – 5 நூல்கள் (தொடக்க நூல், விடுதலைப் பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம்).

5. யூதப்பிரிவு நூல்களின் பெயர் என்ன?

   – தோரா, நெபீம், கெத்தூபிம்.

6. தோரா என்றால் என்ன?

   – சட்ட நூல்கள்.

7. கெத்தூபிம் என்றால் என்ன?

   – அறிவுரை இலக்கிய நூல்கள்.

8. நெபீம் என்றால் என்ன?

   – இறைவாக்கினர் நூல்கள்.

9. யூதர் ஏற்காத இறைவாக்கினர் நூல் எது?

   – தானியேல்.

10. 70 பேர் இணைந்து மொழிப் பெயர்த்த பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப் பெயர்ப்பு யாது?

    – LXX செப்துவாஜிந்த் – எழுபதின்மர் நூல்.

11. பிரிவினை சகோதரர்கள் ஏற்காத நூல்கள் எவை?

- 1, 2 மக்கபேயர், யூதித், சீராக், சாலமோனின் ஞானம், பாரூக், தோபித்து.

12. கத்தோலிக்க பிரிவுபடி வரலாற்று நூல்கள் எத்தனை?

- 21 நூல்கள்.

13. அதிகார பிரிவினை செய்தவர் யார்? எப்போது?

- 1216 ல் ஸ்டீபன் லாங்டன்–கான்டர்பரி.

14. பாஸ்கா விழாவில் வாசிக்கப்படும் திருநூல் பகுதி எது?

- இனிமைமிகு பாடல்.

15. ஆலய அழிவு நினைவு நாளில் வாசிக்கப்படும் திருநூல் பகுதி எது?

–புலம்பல் திருநூல்.

16. பழைய ஏற்பாட்டில் எத்தனை மரபுகள் உள்ளன?

- 4 மரபுகள் – 1. யாவே 2.எலோகிம் 3. இணைச்சட்டம் 4. குருக்கள்.

17. நாம் காணும் விவிலியத்தின் மிகவும் பழைமையானது எது?

- ஆமோஸ் திருநூல்.

18. விவிலியம் முதன் முதலில் எவற்றில் எழுதப்பட்டது?

- தோல், பாப்பிரஸ் ஓலை, கல், செங்கல்.

19. கும்ரான் குகையில் முழுமையாக கிடைக்கப்பெற்ற திருநூல் எது?

- எசாயா திருநூல்.

20. உயிர் எழுத்து குறியீடு இட்டவர்கள் யார்?

- மசோராக்கள்.

21. பழைய ஏற்பாடு பெரும் பகுதி எம்மொழியில் எழுதப்பட்டது?

- எபிரேயம்.

22. வேறு சில பகுதிகள் எம்மொழியில் எழுதப்பட்டது?

- அரமேயம், கிரேக்கம்.

23. துர்கே மான்கள் என்றால் ...

- மொழிப் பெயர்ப்பாளர்கள்.

24. உல்காத்தா என்றால் என்ன?

- இலத்தீன் மொழி பெயர்ப்பு – பொதுவானது.

25. திருச்சபை எம்மொழியினை அதிகம் பயன்படுத்தியது?

- இலத்தீன்.

26. பழைய ஏற்பாடு + புதிய ஏற்பாடு நூலின் மொத்த எண்ணிக்கை என்னவு?

– 73.

27. விவிலியம் தமிழில் முதன்முதலில் எப்பொழுது வந்தது?

– புதிய ஏற்பாடு 1857 ல், பழைய ஏற்பாடு 1904ல்.

28. முழு விவிலியம் வெளிவந்த ஆண்டு...

– 1873ல்.

29. கும்ரான் சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு...

– 1947 ல்

30. வடிவ விமர்சனத்தை விவிலியத்திற்கு கொணர்ந்தவர் யார்?

– ஹெர்மான் குங்கல்.

31. விவிலியம் என்பது என்ன?

– மீட்புச் செய்தியினை தருவது. இறைவன் தம் மக்களுக்கு அனுப்பியிருக்கும் அன்புக் கடிதம்.

32. பழைய ஏற்பாட்டின் நிறைவு நூல் எது?

– புதிய ஏற்பாடு.

33. இந்திய முறை விளக்கத்தின் மறுபெயர் என்ன?

– தொனி முறை விளக்கம்.

34. ஆபிரகாம் வாழ்ந்த இடம் எது?

– ஊர்.

35. இஸ்ரயேலரின் முன்னோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

– குலமுதுவர்கள்.

36. இஸ்ரயேலரின் குலங்கள் எத்தனை?

– 12.

37. வேலைக்காரி மூலம் வாரிசு பெறும் செய்தியினை கூறும் ஏடுகள் யாவை?

– நூசி ஏடுகள்.

38. ஆபிரகாம் தந்தை பெயர் என்ன?

– தெராகு.

39. தெராகு தங்கியிருந்த இடம் எது?

– காரான்.

40. யோசேப்பின் காலத்தில் இஸ்ரயேலர் எங்கு தங்கினர்?

–எகிப்தில் – வளமான கோசேன் பகுதி.

41. சில குலங்கள் இணைந்து வாழ்ந்த பகுதி எது?

– கானான்.

42. இஸ்ரயேலர் என்றால் ....

– கடவுளோடும் மனிதரோடும் போராடுபவர்கள்.

43. எபிரேயர் எனப்படுபவர் ...

– ஆற்றை கடந்து வந்த மக்கள்.

44. இஸ்ரயேலர் எத்தனை கடவுள் உள்ளதாக எண்ணினர்?

– ஒரே கடவுள்.

45. குல முதுவர்களின் தொழில் என்ன?

– ஆடு மாடு மேய்த்தல்.

46. ஆபிரகாமின் இரு மனைவிகள் பெயர் என்ன?

– 1. சாராள். 2. கெற்றூரா.

47. ஈசாக்கின் மனைவி பெயர் என்ன?

– ரெபேக்கா.

48. யாக்கோபின் மறுபெயர் என்ன?

– இஸ்ரயேல்.

49. அம்மோன் குலத்தார் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

– அம்மோனியர்.

50. லாபானின் மகள்கள் பெயர் என்ன?

– 1. லேயா 2. ராகேல்.

51. யோசேப்பின் புதல்வர்கள் யார்?

– 1. மனாசே 2. எப்ராயீம்.

52. பாலைவனத்து அனுபவத்தால் தோன்றிய மதங்கள் யாவை?

– யூத மதம், இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதம்.

53. இஸ்ரயேலின் விடுதலை தலைவர் யார்?

– மோசே.

54. எகிப்தினை ஆட்சி செய்த மன்னன் யார்?

– 2ம் இராம்சே 1290 – 1224 கி.மு.

55. கானானில் யாருடைய தலைமையில் குடியேறினர்?

– யோசுவா.

56. யோசுவா என்றால்...

– கடவுள் மீட்கிறார்.

57. அம்மோனியரிடமிருந்து விடுதலை தந்தவர் யார்?

– இப்தா (நீத 11:5)

58. பிலிஸ்தியரிடமிருந்து விடுதலை தந்தவர் யார்?

– சிம்சோன் (நீத 16:30)

59. இறுதியாக பிலிஸ்தியரை முறியடித்தவர் யார்?

– தாவீது.

60. தாவீதின் சொந்த ஊர் எது?

– பெத்லகேம்.

61. இஸ்ராயேலின் உடன்படிக்கை பேழையை கைப்பற்றியவர் யார்?

– பிலிஸ்தியர்.

62. எலிக்கு அடுத்த இறைவாக்கினர் யார்?

– சாமுவேல்.

63. சவுல் எந்த கோத்திரத்தை சார்ந்தவர்?

– பென்யமீன்.

64. சாமுவேலால் அருட்பொழிவு செய்யப்பட்ட மன்னர்கள் யார்?

– சவுல், தாவீது.

65. தாவீது எவ்விடத்தில் மன்னராக அருட்பொழிவு செய்யப்பட்டார்?

– எபிரோனில்.

66. தாவீது செய்த முதல் செயல் யாது?

– எருசலேமைக் கைப்பற்றியது.

67. எருசலேம் யாருடைய நகராக இருந்தது?

– எபூசியரின்.

68. எருசலேமில் கோவில் கட்டிய அரசர் யார்?

– சாலமோன்.

69. தாவீதுக்கெதிராக கிளர்ச்சி செய்தவன் யார்?

– அப்சலோம்.

70. தாவீதுக்குப் பின் அரசாட்சி செய்ய எண்ணியவன் யார்?

– அதோனியா.

71. தாவீது தன் மரணப்படுக்கையில் அரசனாக்கியது யாரை?

– சாலமோனை.

72. சாலமோன் காலத்தில் கிளர்ச்சி செய்தவன் யார்?

– எரோபவாம்.

73. வடநாடு யாருடைய படையெடுப்பால் அழிந்தது?

– அசீரிய படையெடுப்பு – கி. மு. 722–21 ல்.

74. தென்னாடு வீழ்ச்சியுற்ற ஆண்டு எது?

– கி. மு. 587–86.

75. பன்னாட்டு வாணிகத்தை ஏற்படுத்தியவன் யார்?

– எரோபவாம்.

76. ஓசேயா மன்னனை ஆதரித்த நாட்டவர் யார்?

– அசீரியர்கள்.

77. சமாரியாவை 3 ஆண்டுகள் முற்றுகையிட்ட அரசன் யார்?

– சல்மனேசர்.

78. கி.மு. 612 ல் நினிவே யாரால் கைப்பற்றப்பட்டது?

– பாபிலோனியர்கள்.

79. கி.மு. 622 ல் யூதாவில் சீர்திருத்தங்களை கொணர்ந்தவர் யார்?

– யோசியா.

80. யோசியாவின் மகன் யார்?

– செதேக்கியா.

81. பாபிலோனுக்கு எதிராக கிளர்ச்சி செய்தவன் யார்?

– செதேக்கியா.

82. நெபுகத்னேசருக்கு பின் வந்த மன்னன் யார்?

– எபில் மெராதாக்கு.

83. எபில்மெரொதாக்கு யாரால் விடுதலை செய்யப்பட்டார்?

– யோயாக்கினால்.

84. சீருஸ் ஓலை வெளியிடப்பட்ட ஆண்டு எது?

– கி.மு. 538 ல்.

85. கி.மு. 522–486 வரை ஆட்சி செய்த பாரசீக மன்னன் யார்?

– முதலாம் தாரியு.

86. ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்ட ஆண்டு எது?

– கி.மு. 515 ல்.

87. **எருசலேம் தேவாலய மதில்களை கட்டியவர் யார்?**

– நெகேமியா.

88. **பாரசீகப் பேரரசின் ஆட்சி மொழி எது?**

– அரமேயம்.

89. **கி.மு. 198 ல் பாலஸ்தீனாவை கைப்பற்றியவர் யார்?**

– 3 ம் அந்தியோக்கு.

90. **கி.மு. 168 ல்– 4ம் அந்தியோக்கு கோட்டையை எங்கு அமைத்தார்?**

– எருசலேமில்.

91. **மக்கபேயர் புரட்சியினை தோற்றுவித்தவர் யார்?**

– மத்தத்தியா.

92. **தேவாலயம் தூய்மை பற்றிய நிகழ்ச்சி எவ்வாறு வழங்கப்படுகிறது?**

– ஹனுக்கா.

93. **கெர்சீம் மலையில் போட்டி ஆலயம் அமைத்தவர்கள் யார்?**

– ஜான் ஹிர்கானுஸ்.

94. **கி.மு. 63 ல் கோவிலில் நுழைந்து தீட்டுப்படுத்தியவன் யார்?**

– போம்பே.

95. **கி.மு.40ல் உரோமை பேரரசு யாரை யூதர்களின் அரசனாக அறிவித்தது?**

– அந்திபாஸ் மகன் ஏரோது.

96. **கத்தோலிக்க பிரிவுப்படி வரலாற்று நூல்கள் எத்தனை?**

– யூதர்கள் பயன்படுத்தும் 5 நூலை சேர்த்து மொத்தம் 21.

97. **வரலாற்று நூல்களை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம்? யாவை?**

– 3 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

– 1. யோசுவா, நீதித்தலைவர்கள், 1,2 சாமுவேல், 1,2 அரசர்கள், இணைச்சட்ட வரலாறு.

– 2. 1,2 குறிப்பேடுகள், எஸ்ரா, நெகேமியா.

– 3. அறிவுரை நூல்கள் – ரூத்து, எஸ்தர், தோபித்து, 1,2 மக்கபேயர், யூதித்து.

98. **யூதமதத்தின் மறுமலர்ச்சி வரலாற்று நூல் எது?**

– 1, 2 மக்கபேயர் நூல்கள்.

99. யூத வரலாற்று நூலோடு யோசுவா நூலையும் சேர்த்து ஆறு நூலாகப் படிக்க வேண்டுமெனச் சிலர் கூறக் காரணம் என்ன?

– ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி யோசுவா நூலில் நிறைவேறுகிறது.

100. எரிக்கோவின் அழிவைப் பற்றி கூறும் நூல் எது?

– யோசுவா நூல்.

101. யோசுவா நூல் தொகுக்கப்பட்ட காலம்...

– கி.மு. 622 க்கு பின்

102. யோசுவா எந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்?

– எப்ராயீம் கோத்திரம்.

103. திருமறைத் தந்தையர் யோசுவாவை யாருடைய முன்னோடி என்றனர்?

– இயேசுவின் முன்னோடி.

104. யோசுவா நூல் யாருக்காக எழுதப்பட்டது?

– நாடு கடத்தப்பட்ட நிலையிலிருந்த மக்களுக்காக கி.மு. 587 க்கு பின்.

பழைய ஏற்பாட்டு நூல்கள்

தொடக்க நூல்

கடவுள் முதன் முதலில் உலகப் படைப்பில் எதை படைத்தார்?

– ஒளி (1:3).

கடவுள் பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும் இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் படைத்தார்? அவை யாவை?

– சூரியன், சந்திரன் (நிலா) (1:16)

கடவுள் மண்ணுலகில் ஒளிதர உருவாக்கிய இரு சுடர்கள் யாவை?

– கடவுள் பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும் இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் உருக்கினார். (1:16)

கடவுள் மானிடரை தம் உருவில் படைத்தார். எத்தனையாவது நாளில் மனிதனை படைத்தார்?

– ஆறாம் நாள் (1:27).

ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்கு சுவையானதுமான இரு மரங்களை தோட்டத்தின் நடுவே வளர செய்தார்? அவை யாவை?

– வாழ்வின் மரத்தையும், நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் வளரச் செய்தார். (2:9).

தோட்டத்திற்குள் பாயும் நான்கு ஆறுகளின் பெயா?

– பீசோன், கீகோன், திக்ரீசு, யூப்பிரத்தீசு. (2:10–14).

இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள் யார்?

– பெண் என்று அழைக்கப்படுவாள். (2:23)

முதன் முதலில் உடுத்திய உடை எவற்றால் ஆனது? அவை எவை?

– அத்தி இலை. (3:7)

மனிதன் தன் மனைவிக்கு இட்ட பெயர் யாது?

– ஏவாள் (3:20)

தோட்டத்திலிருந்து வெளியே மனிதனை துரத்திவிட்டபோது பாதுகாப்பு தந்தது யாது?

– கெருபுக்கள் (3:24)

10. ஏவாள் பெற்றெடுத்த முதல் இரு மகன்களின் பெயர் என்ன?

– காயின், ஆபேல். (4:2)

11. காயின், ஆபேல் இவர்களுடைய காணிக்கைகளில் ஆண்டவர் ஏற்றுக்கொண்டது யாது? யாருடையது?

– ஆபேலின் கொழுத்த தலையீறுகளை. (4:4)

12. காயின் ஒரு நகரத்தை நிறுவி அதற்கு தன்மகன் பெயரை வைத்தார்? அவன் பெயர் யாது?

– ஏனோக் (4:7)

13. காயினுக்காக ஏழு முறை பழிவாங்கப்பட்டால் இலாமேக்கிற்காக எத்தனை முறை பழி வாங்கப்படும்?

– எழுபது முறை (4:24)

14. காயின் ஆபேலை கொன்றதால் அவனுடைய இடத்தில் இன்னொருவனை கடவுள் தந்தருளினார். அவன் பெயர் என்ன?

– சேத்து (4:25)

15. ஆதாம் வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை?

– தொள்ளாயிரத்து முப்பது ஆண்டுகள் (5:5)

16. ஆதாம், நோவா தலைமுறை அட்டவணையில் அதிக ஆண்டுகள் உயிர் வாழ்ந்தவர் யார்? எத்தனை ஆண்டுகள்?

– மெத்துசேலா. தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது (5:27).

17. ஆண்டவரின் சாபத்துக்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான கடின வேலையிலும் உழைப்பிலும் நமக்கு ஆறுதல் அளிப்பான் என்று யாரை சொன்னார்கள்?

– நோவா (5:29).

18. நோவா செய்த பேழையின் நீளம், அகலம், உயரம் எவ்வளவு?

– நீளம் – முந்நூறு முழம்.

– அகலம் – ஐம்பது முழம்.

– உயரம் – முப்பது முழம்.

19. வெள்ளப் பெருக்கின் போது நோவா பேழையினுள் தக்க விலங்குகள், தகாத விலங்குகளின் சோடிகள் எத்தனை?

– தக்க விலங்குகள் ஏழு சோடிகள், தகாத விலங்குகள் ஒரு சோடியும். (7:2)

20. வெள்ளப் பெருக்கின்போது தொடர்ந்து மழை பெய்த நாட்கள் எத்தனை?

– நாற்பது பகலும், நாற்பது இரவும். (7:12)

21. வெள்ளப் பெருக்கின் முடிவில் நோவா பேழை தங்கிய இடம் எது?

– அரராத்து மலைத் தொடர் (8:4)

22. மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வராது என்பதற்கு அடையாளம் யாது?

– மேகத்தின் மேல் இருக்கும் வில். (9:13).

23. நோவா வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை?

– தொள்ளாயிரத்து ஐம்பது ஆண்டுகள் (9:29)

24. நோவாவின் புதல்வர்கள் யார் யார்?

– சேம், காம், எப்பேத்து. (9:18)

25. ஆண்டவர் திருமுன் அவன் ஆற்றல்மிக்க வேடனாக இருந்தான்? அவன் யார்?

– நிம்ரோத். (10:9)

26. யாருடைய காலத்தில் உலக மக்கள் பிரிந்தனர்?

– பெலேக்கு. (10:25).

27. உலகம் முழுவதிலும் சிதறுண்டு போகச் செய்ததால் அவர்கள் நகரைத் தொடர்ந்து கட்டுவதை கைவிட்டனர்? அதற்கு என்ன பெயர்?

– பாபேல் (11:9)

28. ஆபிராம், நாகோர், ஆரான் இவர்களின் தந்தை பெயர் யாது?

– தெராகு (11:26)

29. ஆரானின் மகன் பெயர் என்ன? பிறந்த ஊர் எது?

– லோத்து, ஊர் என்ற கல்தேயர் நகரில். (11:27).

30. ஆபிராமின் மனைவி பெயர் யாது?

– சாராய். (11:29)

31. நாகோரின் மனைவி பெயர் யாது?

– மில்கா. (11:29ன)

32. ஆபிரகாம் கானான் நாட்டிலுள்ள செக்கேம் என்னுமிடத்தின் எந்த மரத்தை அடைந்தார்?

– மோரேயின் கருவாலி மரத்தை. (12:6)

33. ஆபிராம் கட்டிய முதல் பலிபீடம் எங்குள்ளது?

– செக்கேம். (12:6)

34. ஆபிராம் சகோதரி என்று யாரை சொன்னார்?

– சாராய். (12:13).

35. ஆபிராம், லோத்து பிரிந்த இடம் யாது?

- யோர்தான். (13:11)

36. ஆபிராம் லோத்து பிரிந்து சென்ற நாடுகள் எவை எவை?

- ஆபிராம் - கானான் நாடு.

- லோத்து - யோர்தான் சுற்றுப்பகுதி நகரங்கள். (11:12).

37. லோத்து பிரிந்த பிறகு ஆபிராமுக்கு கடவுள் எங்ஙனம் அவனை பெருகச் செய்வதாக கூறினார்?

- பூவுலகின் மண்ணைபோல. (13:16)

38. அரசன் செபோயிம் அரசன் செமேபர், பேலா அரசன் சோலார் ஆகியோர் போர் தொடுத்தபோது எங்கு ஒன்று கூடினர்?

- உப்புக் கடலாக இருக்கும் சித்திம் பள்ளத்தாக்கில். (14:3)

39. மிட்சுபாற்று ஊருணியின் பெயர் யாது?

- காதேசு. (14:7).

40. தம் உறவினர் கைதியாக கொண்டு செல்லப்பட்டதைக் கேள்வியுற்று ஆபிராம் முந்நூற்றுப் பதினெட்டு பேரை எங்கு வரை துரத்தி சென்றார்?

- தாண் வரை. (14:14).

41. அரசர் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்பட்ட பகுதி யாது?

- சாவே பள்ளத்தாக்கு. (14:17)

42. சாலேம் அரசனும் உன்னத கடவுளின் அரசராக இருந்தவர் யார்?

- மெல்கிசெதேக்கு (14:18).

43. ஆபிராம் வீட்டு மேற்பார்வையாளனின் மகன் யார்?

- தமஸ்கு நகர் எலியேசர் . (15:22)

44. சாராயின் பணிப் பெண் பெயர்?

- ஆகார் (16:1).

45. ஆகார் தன்னோடு பேசிய ஆண்டவருக்கு இட்ட பெயர் யாது,

- இறைவன் நீர். (16:13).

46. ஆகார் ஆண்டவரின் தூதருடன் பேசிய இடத்தில் ஒரு கிணறு இருந்தது. அதன் பெயர் யாது?

- பெயேர்லகாய்ரோயி.

47. ஆகார் ஆபிராமுக்கு ஒரு மகனை பெற்றெடுத்தாள். அவன் பெயர் என்ன?

- இஸ்மயேல் (16:15)

48. கடவுள் ஆபிராம் சாராயி இவர்களின் பெயரை எவ்வாறு மாற்றினார்?

– ஆபிரகாம். சாரா. (17:5,15)

49. உடன்படிக்கையின் அடையாளமாக ஆபிரகாமுக்கு கடவுள் செய்யச் சொன்னது எது?

– விருத்தசேதனம் (17:11)

50. மம்ரே என்ற இடத்தில் ஆபிரகாமுக்கு தோன்றியவர்கள் யார்?

– மூன்று மனிதர். (18:2)

51. சாரா ஆண்டவரிடம் பொய் கூறியது என்ன?

– நான் சிரிக்கவில்லை. (18:15)

52. ஆண்டவர் எந்த இரு நகரங்களின் பாவம் கொடியது என எண்ணி அழிக்க விரும்பினார்?

–சோதோம், கொமோரா (18:20)

53. சோதோம் அழிவுற்றதில் ஆண்டவரிடம் ஆபிரகாம் எத்தனை முறை கேள்விகள் கேட்டார்?

– ஆறு முறை.

54. சோதோம் அழிவுற்றபோது காப்பாற்றப்பட்டவர்கள் யார்?

– லோத்து, அவர் மனைவி, இரு புதல்வியர். (19:15)

55. நீ அங்கு சென்று சேரும் மட்டும் என்னால் ஒன்றும் செய்ய இயலாது. அந்த நகரின் பெயர்?

– சோவார். (19:22).

56. லோத்து குடும்பத்தை காப்பாற்றி நகரை விட்டு வெளியேற்றி அவர்களுக்கு கட்டளை இட்டது யாது?

– நீ உயிர்தப்புமாறு ஓடிப்போ. திரும்பிப் பார்க்காதே. (19:17)

57. ஆண்டவரின் கட்டளையை மீறியதால் லோத்தின் மனைவி என்ன ஆனாள்?

– உப்புத் தூணாக மாறினாள். (19:26).

58. சோதோம் கொமேரா நகர்களின் மேல் ஆண்டவர் பொழிய செய்தது என்ன?

– கந்தகமும் , நெருப்பும். (19:24).

59. லோத்தின் இரு புதல்வியர் பெயர் என்ன?

– மோவாபு, பென் அம்மி. (19:37,38).

60. என் இனத்தின் புதல்வன் யார்?

– பென் அம்மி (19:38).

61. கெரார் மன்னன் யார்?

– அபிமெலக்கு (20:2).

62. கெரார் மன்னன் சாராய்க்கு எவ்வளவு வெள்ளிக் காசுகள் கொடுத்தார்?

– ஆயிரம் வெள்ளிக் காசுகள் (20:16).

63. ஆண்டவர் வாக்குறுதியின் படி சாரா பெற்ற குழந்தையின் பெயர் என்ன?

– ஈசாக்கு. (21:3)

64. அபிமெலக்கின் படைத்தலைவன் யார்?

– பிக்கோ (21:22)

65. அபிமெலக் ஆபிரகாம் கிணறு குறித்து உடன்படிக்கை செய்த இடத்தின் பெயர் யாது?

– பெயேர் செபா (21:31)

66. ஆபிரகாம் ஈசாக்கிற்குப் பதிலாக எரி பலியாக்கிய இடம் எது?

– யாவேயிரே, ஆண்டவர் பார்த்துக் கொள்வார். (22:14).

67. ரெபேக்காவின் தந்தை யார்?

– பெத்துவேல் (22:23).

68. சாரா எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

– நூற்றிருபத்தேழு ஆண்டுகள் (23:1).

69. சாரா இறந்த இடம் யாது?

– எபிரோன் என்ற கிரியத்து அர்பா நகரில் (23:2)

70. எப்ரோன் இரட்டைக்குகை நிலத்தை எவ்வளவுக்கு ஆபிரகாம் வாங்கினார்?

– நானூறு வெள்ளிக் காசு . (23:16)

71. ஈசாக்கிற்கு பெண் பார்க்க எத்தனை ஒட்டகங்களில் சென்றனர்?

– பத்து ஒட்டகங்களில் (24;10)

72. ஆபிரகாமின் வேலைக்காரன் சென்ற இடம் யாது?

– மெசபொத்தாமியாவிலிருந்த நாகோர் நகர் (24:10)

73. ஒட்டகம் நீர் குடித்து முடிந்த பின் ஆபிரகாமின் வேலைக்காரன் கொடுத்தது என்ன?

– ஆறு கிராம் நிறையுள்ள பொன் மூக்கணி (24:22)

74. ரெபேக்காவின் சகோதரன் யார்?

– லாபான் (24:29).

75. ஆபிரகாமின் மற்றொரு மனைவி யார்?

– கெற்றூரா (25:1).

76. ஆபிரகாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

– நூற்றெழுபத்தைந்து ஆண்டுகள் (25:7)

77. சாராவும், ஆபிரகாமும் அடக்கம் செய்யப்பட்ட இடம் யாது?

– எப்ரோனுடைய நிலத்தில் இருந்த மக்பேலா குகையில் (25:9,10).

78. எத்தனை வயதில் ஈசாக் ரெபேக்காளை மணந்து கொண்டார்?

– நாற்பது வயதில் (25:20)

79. இஸ்மயேல் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

– நூற்றுமுப்பத்தேழு ஆண்டுகள். (25:17)

80. முதலாவது வெளிவந்த பிள்ளை செந்நிறமாகவும் அவன் உடல் முழுவதும் முடிமயமாக இருந்தவன் யார்?

– ஏசா (25:25)

81. தன் சகோதரன் ஏசாவின் குதிங்காலைக் கையால் பற்றிக் கொண்டே வெளிவந்தவன் யார்?

– யாக்கோபு (25:26).

82. கெராரில் இருந்த மேய்ப்பர்களும் ஈசாக்கின் மேய்ப்பர்களும் வாக்குவாதம் செய்து கிணறு தோண்டினர். அதன் பெயர் என்ன?

– ஏசேக்கு (26:20)

83. ஆண்டவர் நம் எல்லையை விரிவுபடுத்தியுள்ளார் என்று சொல்லி அந்த கிணற்றிற்கு இட்ட பெயர் யாது?

– இரகபோத்து (26:22)

84. கெரார் மன்னன் அபிமெலக்கு இவர்களின் உற்ற நண்பன் யார்?

– அகுசாத் (26:26)

85. ஈசாக்கின் வேலைக்காரர் தாங்கள் தோண்டிய கிணற்றில் தண்ணீரைக் கண்டோம் என்று சொல்லி அதற்கு என்ன பெயரிட்டார்?

– சிபா (26:33)

86. ஏசா நாற்பது வயதானபோது மணந்து கொண்ட இரு பெண்கள் யார்?

– பெயேரியின் மகள் யூதித்தையும், ஏலோனின் மகள் பாசமத்தையும். (26:34)

87. அவன் இருமுறை என்னை ஏமாற்றி விட்டான் என்று யாரை சொன்னார்?

– யாக்கோபு என்னும் பெயர் அவனுக்கு பொருத்தமே (27:36)

88. அப்பா உம்மிடம் ஒரே ஆசிதான் இருந்ததா என்று யார் யாரிட[ம்]
கூறியது?

– ஏசா தந்தை ஈசாக்கிடம் (27:34)

89. ரெபேக்கா ஏசாவுக்குப் பயந்து யாக்கோபை யாரிடம் எங்[கு]
அனுப்பினார்?

– காரானில் உள்ள சகோதரன் லாபானிடம் (27:34)

90. உடலில் அடர்ந்த உரோமம் உடையவன் யார்?

– ஏசா (27:11)

91. யாக்கோபு கனவு கண்ட இடம் யாது?

– இறைவனின் இல்லம் விண்ணுலகின் வாயில் (28:17)

92. யாக்கோபு நினைவுத்தூண் நாட்டிய லூசு என்று வழங்கப்பட்ட
நகருக்கு என்ன பெயர்?

– பெத்தேல் (28:19)

93. லாபானின் இரு புதல்விகள் யார்?

– லேயா, ராகேல் (29:16)

94. லேயாவுக்குப் பணிபுரிய தந்தை அனுப்பிய பணிப்பெண் யார்?

– சில்பா (29:24)

95. யாக்கோபு ராகேலை மணந்து கொள்ள எத்தனை ஆண்டுகள் வேலை
செய்து வந்தான்?

– ஏழு ஆண்டுகள் (29:18)

96. யாக்கோபு லேயாவை மணமுடித்த எத்தனை நாட்களுக்குப்பின்
ராகேலை மணமுடித்தான்?

– ஏழு நாள்களுக்குப்பின் (29:28)

97. ராகேலின் பணிப்பெண்ணின் பெயர் யாது?

– பில்கா (29:29)

98. இப்பொழுது என் கணவர் என்மீது அன்பு கூர்வார் என்பது உறுதி என்று
கூறி லேயா அவனுக்கு என்ன பெயரிட்டாள்?

– ரூபன் (29:32)

99. நான் வெறுப்புக்குள்ளானேன் என்பதை ஆண்டவர் கேட்டு
இவனையும் எனக்குத் தந்தருளினார் என்று சொல்லி லேயா
அவனுக்கு என்ன பெயரிட்டாள்?

– சிமியோன் (29:33)

100. லேயாவின் மூன்றாவது மகனின் பெயர்?

– லேவி (29:34)

101. இப்போது ஆண்டவரை நான் மாட்சிப்படுத்துவேன் என்று சொல்லி லேயா அவனுக்கு என்ன பெயரிட்டாள்?

– யூதா (29:35)

102. ராகேலின் பணிப்பெண் பெற்றெடுத்த இரு பிள்ளைகளின் பெயர்?

– தாண், நப்தலி (30:6,8)

103. லேயாவின் பணிப்பெண் பெற்றெடுத்த இரு பிள்ளைகளின் பெயர்?

– காத்து, ஆசேர் (30:11,13)

104. லேயா பெற்றெடுத்த 5வது 6வது பிள்ளைகளின் பெயர்?

– இசக்கார், செபுலோன் (30:18,20)

105. கடவுள் என் இழிவைப் போக்கினார் இன்னொரு மகனையும் எனக்குச் சேர்த்துத் தருவாராக என்று கூறி ராகேல் அவனுக்கு என்ன பெயரிட்டாள்?

– யோசேப்பு (30:24)

106. அர்மோன் என்னும் மரங்களின் பசிய கொப்புகளை நீர் ஆடுகளுக்கு யாக்கோபு எவற்றைப் போட்டு வைத்தான்?

– புன்னை, வாதுமை (30:37)

107. யாக்கோபு கானான் நாட்டிற்குப் போகும்போது எவ்விடத்தில் லாபான் அவனைச் சந்தித்தான்?

– கிலயாது மலை (31:32)

108. லாபான் தன் குலதெய்வச் சிலையைத் தேடும்போது ராகேல் அதனை எதன்கீழ் மறைத்து வைத்திருந்தாள்?

– ஒட்டகச் சேணத்தினுள் (31:34)

109. யாக்கோபு லாபானிடம் இருந்த ஆண்டுகள் எத்தனை?

– இருபது ஆண்டுகள் (31:4)

110. கற்குவியல் இன்று உனக்கும் எனக்கும் இடையே சான்றாக இருக்கட்டும் எனக்கூறி ஒரு கல்லை நாட்டி அதற்கு யாக்கோபு இட்ட பெயர் யாது?

– எகர்சகதுத்தா (31:47)

111. யாக்கோபு கடவுளின் படை என்று கூறி அந்த இடத்திற்கு இட்ட பெயர் யாது?

– மகனயிம் (32:2)

112. ஏசா வாழ்ந்து வந்த இடம் யாது?

– ஏதோம் நாட்டிலுள்ள சேயிர் (32:3)

113. நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய் என்று கூறி கடவுள் யாகோபுக்கு இட்ட பெயர் யாது?

– இஸ்ரயேல் (32:28)

114. நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி அந்த இடத்திற்கு யாக்கோபு என்ன பெயரிட்டார்?

– பெனியேல் (32:30)

115. யாக்கோபு தமக்கென்று ஒரு வீடும் மந்தைகளுக்கு குடில்களும் அமைத்து அந்த இடத்திற்கு என்ன பெயரிட்டார்?

– சுக்கோத்து (33:17)

116. கூடாரமடித்துத் தங்கிய அந்நிலப்பகுதியை செக்கேமின் தந்தை ஆமோரின் புதல்வரிடமிருந்து எத்தனை வெள்ளிக்காசுகளுக்கு வாங்கினார்?

– நூறு வெள்ளிக்காசுகளுக்கு (33:19)

117. ஆமோரின் புதல்வன் யார்?

– செக்கேம் (34:2)

118. லேயாவின் மகள் யார்?

– தீனா (34:1)

119. யாக்கோபு இரவிலேயே எழுந்து தம் இரு மனைவியரையும் இரு வேலைக்காரிகளையும் அழைத்துக்கொண்டு கடந்த ஆற்றின் பெயர் யாது?

– யாபோக்கு (32:22)

120. யாக்கோபு தம் சகோதரனை எத்தனை முறை தரையில் வீழ்ந்து வணங்கினார்?

– ஏழு முறை (33:3)

121. தீனாவைத் தூக்கிச் சென்றவன் யார்?

– செக்கேம் (34:2)

122. செக்கேம் நகரத்தை அழித்த யாக்கோபின் இரு புதல்வர்கள் யார்?

– சிமியோன், லேவி (34:25)

123. யாக்கோபு வேற்று தெய்வச் சிலைகளை எங்கு புதைத்தார்?

– செக்கேம் அருகிலிருந்த ஒரு கருவாலி மரத்தின் அருகே (35:11)

124. ரெபேக்காவின் பணிப்பெண்ணாகிய தெபோரா இறந்ததும் பெத்தேலின் அடிவாரத்திலிருந்த ஒரு கருவாலி மரத்தடியில் புதைக்கப்பட்ட இடத்தின் பெயர் யாது?

– அல்லோன்–பாகூத்து (35:8)

125. சாகக் கிடந்து உயிர் பிரியும் வேளையில் ராகேலுக்குப் பிறந்த புதல்வனின் பெயர் யாது?

– பென்–ஒனி (35:18)

126. பென்யமின் என்பதற்குப் பொருள் என்ன?

– என் வலக்கையின் மகன்.

127. தந்தையின் மறுமனைவியாகிய பில்காவுடன் உடலுறவு கொண்ட யாக்கோபின் மகன் யார்?

– ரூபன் (35:22)

128. கிரியத்து அர்பா என்ற நகரம் எது?

– மம்ரே (35:27)

129. ஏசாவின் மறு பெயர் யாது?

– ஏதோம் சேயிர் (36:8)

130. ஏதோமியர்களுக்குத் தலைவர் யார்?

– ஏசா (36:43)

131. யாக்கோபு யோசேப்புக்கு எப்படிப்பட்ட அங்கியைச் செய்து கொடுத்தார்?

– அழகு வேலைப்பாடுகள் நிறைந்த அங்கியை (37:32)

132. யோசேப்பு கண்ட கனவில் அவரை வணங்கக் கண்ட பதினொரு விண்மீன்களும் யார் யார்?

– யோசேப்பின் சகோதரர்கள் (37:10)

133. யோசேப்பு தம் சகோதரர்களை எங்கு கண்டார்?

– தோத்தானில் (37:17)

134. யோசேப்பை ரூபன் எங்ஙனம் தப்புவித்தான்?

– பாலை நிலத்திலுள்ள குழிக்குள் தள்ளிவிடுமாறு செய்து தப்புவித்தான். (37:22)

135. யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பை யாரிடம் விற்றனர்?

– மிதியான் நாட்டு இஸ்மயேலரிடம் இருபது வெள்ளிக் காசுக்கு (37:28)

136. மிதியானியர் யோசேப்பை எகிப்தில் யாரிடம் விற்றனர்?

– பார்வோனின் அதிகாரிகளுள் ஒருவனும் மெய்க்காப்பாளர் தலைவனுமான போத்திபாரிடம் (37:36)

137. யூதா தம் சகோதரர்களை விட்டுப் பிரிந்து எங்கு குடியிருந்தான்?

– ஈரா என்ற பெயருடைய அதுல்லாமியனிடம் (38:1)

138. யூதாவின் மனைவி யார்?

– சூவா (38:2)

139. யூதாவுக்குப் பிறந்த மூன்று புதல்வர் யார்?

– ஏர், ஓனான், சேலா (38:3–5)

140. ஏரின் மனைவி யார்?

– தாமார் (38:6)

141. தாமாருக்குப் பிறந்ததில் கருப்பையைக் கிழித்துக்கொண்டு வெளிவந்தவன் யார்?

– பெரேட்சு (38:29)

142. கையில் கருஞ்சிவப்பு நூல் கட்டப்பட்டிருந்தவன் யார்?

– செராகு (28:30)

143. போத்திபாரின் எபிரேயப் பணியாளன் யார்?

– யோசேப்பு (39:17)

144. எகிப்திய மன்னனுக்கு எதிராகக் குற்றம் செய்த இருவர் யார்?

– மது பரிமாறுவோனும் அப்பம் தயாரிப்போனும் (40:1)

145. மது பரிமாறுவோர் தலைவன் கண்ட கனவில் வரும் கருப்பொருள் ஏது?

– திராட்சைக் கொடியில் மூன்று கிளைகள் (40:10)

146. அப்பம் தயாரிப்போரின் தலைவன் கண்ட கனவில் வரும் கருப்பொருள் யாது?

– மூன்று அப்பக் கூடைகள் (40:16)

147. பார்வோன் கண்ட கனவில் வரும் கொழுத்த ஏழு பசுக்கள், நிறைந்த மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களின் பொருள் யாது?

– ஏழு வளமான ஆண்டுகளைக் குறிக்கும் (41:26)

148. பார்வோன் கனவில் வரும் நலிந்து மெலிந்த ஏழு பசுக்கள், விளையாத ஏழு கதிர்கள் எதைக் குறிக்கிறது?

– பஞ்சம் நிறைந்த ஏழு ஆண்டுகளைக் குறிக்கிறது (41:27)

149. பஞ்சத்தைத் தவிர்க்கக் கொள்முதல் செய்யுமாறு யோசேப்பு எவ்விதம் சேர்த்து வைக்கவேண்டுமெனக் கூறினார்?

– விளைச்சலில் ஐந்திலொரு பங்கை (41:34)

150. யோசேப்பின் மனைவி யார்?

– ஆசினத்து (41:50)

151. எல்லாத் துன்பங்களையும் என் தந்தையின் வீட்டையும் கடவுள் மறக்கச்செய்தார் என்று சொல்லி யோசேப்பு தம் தலைமகனுக்கு என்ன பெயரிட்டார்?

– மனாசே (41:51)

152. நான் துன்புற்ற இந்த நாட்டில் கடவுள் என்னைப் பலுகச் செய்தார் என்று சொல்லி யோசேப்பு அடுத்தவனுக்கு என்ன பெயரிட்டார்?

– எப்ராயிம் (41:52)

153. தானியம் வாங்கிக் கொண்டுவர யாக்கோபு ஒருவனை மட்டும் எகிப்துக்கு அனுப்பவில்லை அவன் யார்?

– பென்யமின் (42:4)

154. யோசேப்பின் சகோதரர்கள் ஒற்றர்கள் என எண்ணி எத்தனை நாள்கள் காவலில் வைக்கப்பட்டனர்?

– மூன்று நாள்கள் (42:17)

155. தன் சகோதரர்களைப் பார்த்து இதோ அவனது இரத்தம் நம்மிடம் ஈடு கேட்கிறது என்று யார் கூறியது?

– ரூபன் (42:22)

156. இளைய சகோதரனுக்குப் பதிலாக எகிப்தில் இருந்தவன் யார்?

– சிமியோன் (42:24)

157. யாக்கோபிடம் பென்யமின் உயிருக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவன் யார்?

– யூதா (43:8)

158. யாக்கோபின் புதல்வர்கள் எகிப்துக்குக் கொண்டுசென்ற பொருட்கள் யாவை? [இரண்டு மட்டும்]

– வெள்ளைப் போளம், தேவதாருக் கொட்டைகள் (43:11)

159. எகிப்தில் தன் சகோதரர்களுடன் யோசேப்பு உண்ணாதது ஏன்?

– எகிப்தியர் எபிரேயரோடு உண்பதில்லை. அப்படி உண்பதை எகிப்தியர் அருவருப்பாகக் கருதினர் (43:32)

160. மற்ற சகோதரர்களைக் காட்டிலும் யோசேப்பின் வீட்டில் பென்யமினுக்குப் பரிமாறப்பட்ட உணவு எவ்வளவு?

– ஐந்து மடங்கு மிகுதியாக (43:34)

161. யோசேப்பு வைத்துக் கட்டச் சொல்லிய வெள்ளிக் கோப்பை யாருடைய கோணிப்பையில் காணப்பட்டது?

– பென்யமின் (44:12)

162. கடவுளின் திருவுளத்தால் எகிப்து முழுவதற்கும் ஆளுநராகவும் ஏற்படுத்தியுள்ளார் என யார் யாரிடம் கூறியது?

– யோசேப்பு தன் சகோதரரிடம் (45:8)

163. பார்வோன் கட்டளையின்படி யோசேப்பு தந்தைக்குக் கொடுத்தனுப்பியது என்ன?

– முந்நூறு வெள்ளிக் காசுகளும் ஐந்து ஆடைகளும்.(45:22)

164. யாக்கோபு எகிப்துக்குப் பயணமாகிப் போகும் வழியில் கடவுளுக்கு ஒரு பலியை ஒப்புக்கொடுத்த இடம் எது?

– பெயேர்செபா (46:1)

165. எகிப்தில் குடி புகுந்த யாக்கோபின் குடும்பத்தார் எத்தனைப் பேர்?

– எழுபது பேர் (46:27)

166. யோசேப்பும் யாக்கோபும் சந்தித்த பகுதி எது?

– கோசேன் (46:28)

167. யோசேப்பு பார்வோன் கட்டளைப்படி கொடுத்த வளமான நிலப்பகுதி எது?

– இராம்சேசு (47:11)

168. யாக்கோபு எகிப்தில் வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை?

– பதினேழு ஆண்டுகள் (47:28)

169. ராகேல் அடக்கம் செய்யப்பட்ட இடம் எது?

– எப்ராத் (48:7)

170. யாக்கோபு யோசேப்பின் மக்களை எங்ஙனம் ஆசீர்வதித்தார்?

– வலக்கையை இளையவன் எப்ராயிமின் தலைமீதும் இடக்கையைத் தலைமகன் மனாசேயின் தலைமீதும் மாற்றி வைத்து ஆசிர்வதித்தார் (48:14)

171. போராட்டத்தின் கருவிகள் யாவை?

– சிமியோன், லேவி (49:5)

172. யூதாவுக்குரிய விலங்கு எது?

– சிங்கக்குட்டி (49:9)

173. தாணுக்குரிய விலங்கு எது?

– பாம்பு (49:17)

174. பென்யமினுக்குரிய விலங்கு எது?

– ஓநாய் (49:27)

175. யாக்கோபு இறந்தபோது எகிப்தியர் அவருக்காக எத்தனை நாட்கள் துக்கம் கொண்டாடினர்?

– எழுபது நாட்கள் (50:3)

176. எகிப்தியர் அழுகை எனப்படும் இடம் எது?

– யோர்தான் நதிக்கு அப்பால் இருந்த கோரேன் அத்தத்து (50:10)

177. மாக்கிரின் யார் மகன்?

– மனாசேயின் மகன் (50:23)

178. யோசேப்பின் வாழ்நாள் எவ்வளவு?

– 110 ஆண்டுகள் (50:22)

179. யோசேப்பு இறந்தபின் செய்யச் சொன்னது யாது?

– என் எலும்புகளை இங்கிருந்து எடுத்துச்செல்லுங்கள் (50:25)

விடுதலைப் பயணம்

1. யாக்கோபோடு எகிப்தில் குடியேறியவர்கள் எத்தனை பேர்?

– எழுபது பேர் (1:5)

2. கடும் வேலையால் இஸ்ரயேலரைத் துன்புறுத்த பார்வோன் யாரை நியமித்தான்?

– அடிமை வேலைவாங்கும் அதிகாரிகள் அவர்கள்மேல் நியமிக்கப்பட்டனர் (1:11)

3. இஸ்ரயேல் பார்வோனுக்காக எந்த எந்த நகரங்களைக் கட்டி எழுப்பினார்கள்?

– பித்தோம், இராம்சேசு (1:11)

4. இஸ்ரயேல் மக்களுக்கு வாழ்க்கை ஏன் கசப்பானது?

– எகிப்தில் அவர்களைக் கொடுமைப்படுத்தியதால் (1:14)

5. எகிப்திய மன்னன் எபிரேயப் பெண்களுக்கு மருத்துவப் பெண்களாக யாரை நியமித்தான்?

– சிப்ரா, பூவா (1:15)

6. எகிப்திய மன்னன் இவர்கள் இருவருக்கும் கொடுத்த கட்டளை என்ன?

– ஆண் மகவு என்றால் அதைக் கொன்றுவிடுங்கள்; பெண் மகவு என்றால் வாழட்டும் (1:16)

7. மோசே யாரிடமிருந்து தப்பியோடி மிதியான் நாட்டில் குடியிருக்க நேரிட்டது?

– பார்வோன் (2:16)

8. லேவி குலப் பெண் கோரைப்புல்லால் ஆன பேழையை எதனால் பூசி வைத்தாள்?

– நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள் (2:3)

9. லேவி குலப் பெண் பேழைக்குள் குழந்தையை வைத்து அதை எங்கே போட்டாள்?

– நைல் நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் விட்டுவைத்தாள் (2:3)

10. பேழையை யார் பார்த்துக்கொண்டு இருந்தது?

– குழந்தையின் சகோதரி மிரியாம். (2:4)

11. அங்கே யார் யார் நீராட நைல் நதிக்கு வந்தார்கள்?

– பார்வோனின் மகளும், அவளுடைய தோழியரும் வந்தார்கள் (2:5)

நைல் நதியில் மிதந்த பேழையிலிருந்த குழந்தையை எடுத்தது யார்?
– பார்வோனின் மகள் தன் தோழி ஒருத்தியை அனுப்பி குழந்தையை எடுத்தாள் (2:5)

மோசே என்பதன் பொருள் என்ன?
– நீரிலிருந்து எடுக்கப்பட்டவன் என்பது பொருள் (2:10)

மோசே யாரை வெட்டி வீழ்த்தி மண்ணில் புதைத்தான்?
– எகிப்தியனை (2:12)

மிதியான் நாட்டு அர்ச்சகருடைய புதல்வியர் எத்தனை?
– ஏழு புதல்வியர்கள் (2:16)

மோசேவுக்கு ஆண்டவரின் தூதர் எங்கே தோன்றினார்?
– ஒரேபு மலையில்.

17. மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் என்ன தெரிவித்தார்கள்?
– "பாலை நிலத்தில் எனக்கொரு விழா எடுக்குமாறு என் மக்களைப் போகவிடு என இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைத்துள்ளார்'' என்று அறிவித்தனர் (5:1)

இஸ்ரயேலின் தலைமகன் யார்?
– ரூபன் (6:14)

19. ரூபனின் புதல்வர்கள் யார் யார்?
– அனோக்கு, பல்லூ, எட்சரோன், கர்மி ஆகியோர் (6:14)

20. எங்கே ஆண்டவர் மோசேக்கு திருவாக்கு அருளினார்?
– எகிப்து நாட்டில் (6:28)

21. பார்வோன் முன்னிலையில் மோசேயின் கோல் என்னவாக மாறியது?
– பாம்பாக மாறியது (7:10)

22. எகிப்தியருக்குச் சொந்தமான மிருகங்கள் எப்படி மடிந்தன?
– கொள்ளை நோயில் மடிந்தன (9:3)

23. எகிப்து நாட்டில் தொடர்ந்து எத்தனை நாள் காரிருள் உண்டாகியது?
– மூன்று நாள்கள் (10:22)

24. இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டுப் போகுமுன் மோசே என்ன கூறினார்?
– ஒவ்வொருவரும் அடுத்திருப்பவரிடம் வெள்ளி அணிகலன்களையும், தங்க அணிகலன்களையும் கேட்டு வாங்கிக்கொள்ளட்டும் என்றார் (11:2)

25. புளிப்பற்ற அப்பங்களை இஸ்ரயேல் மக்களுக்கு எத்தன நாட்களுக்கு உண்ணும்படிக் கூறினார்?

– ஏழு நாள் (12:15)

26. எத்தனை இஸ்ரயேலர் இராம்சேசிலிருந்து சுக்கோத்துக்கு இட பெயர்ந்து சென்றனர்?

– குழந்தைகள் தவிர ஆடவர் மட்டும் ஆறு லட்சம் பேர் (12:37)

27. இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் குடியிருந்த காலம் எவ்வளவு?

– நானூற்று முப்பது ஆண்டுகள் (12:40)

28. ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு எங்கு கூடாரம் அடித்தார்?

– சுக்கோத்திலிருந்து பயணமாகிப் பாலை நிலத்தின் எல்லையோரமாயுள் எத்தாமில் கூடாரம் அடித்தார் (12:20)

29. இஸ்ரயேல் மக்களுக்கு வழி காண்பிக்க எந்த வகையில் பால நிலத்தில் ஆண்டவர் உதவினார்?

– பகலில் அவர்களை வழிநடத்த மேகத் தூணிலும், இரவில் ஒளிகா நெருப்புத் தூணிலும் இருந்தார். பகலிலும், இரவிலும் அவர்கள் பயண செய்வதற்காக அவர் அவர்கள்முன் சென்றுகொண்டிருந்தார் (1:21)

30. மோசே எந்த இடத்திற்கு மாரா அதாவது கசப்பு என்று ஏன்பெ இட்டான்?

– மாராவிலிருந்த தண்ணீரைப் பருக அவர்களால் இயலவில்லை. அ கசப்பாக இருந்ததால் (15:23)

31. இஸ்ரயேல் மக்கள் ஏன் மோசேக்கு எதிராக முறுமுறுத்தனர்?

– நாங்கள் எதைத்தான் குடிப்போம் என்று கூறி மோசேக்கு எதிரா முறுமுறுத்தனர் (15:24)

32. இஸ்ரயேல் மக்கள் ஏலிம் சென்றவுடன் அங்கே கண்டது என்ன?

– பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தன (15:27)

33. இஸ்ரயேல் மக்கள் அனைவரும் ஏலிமைவிட்டுப் பயணமாகிய எப்போது?

– எகிப்து நாட்டினின்று இரண்டாம் மாதம் பதினைந்தாம் நாள் அது (16:1)

34. இஸ்ரயேல் மக்கள் ஏன் உணவிற்கு மன்னா என்று பெயரிட்டனர்?

– கொத்தமல்லிபோன்று வெண்ணிறமாயும் தேன் கலந்து ஆக்கிய பணியா போன்று சுவையாகவுமிருந்ததால் (16:31)

35. இஸ்ரயேல் மக்கள் எவ்வளவு நாள் மன்னாவை உண்டனர்?

– நாற்பது ஆணடுகள் (16:35)

36. யார் வீரர்களைத் தெரிந்துகொண்டு போராடும்படிக் கூறியவர்?

– மோசே. (17:10)

37. ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு இட்ட கட்டளை என்ன?

– உங்களில் எவரும் மலைமேல் ஏறாதபடியும் அதன் அடிவாரத்தைக் கூட தொடாதபடியும் எச்சரிக்கையாயிருங்கள். (19:12)

38. ஆண்டவர் சீனாய் மலையில் இறங்கியபோது என்ன நிகழ்ந்தது?

– சீனாய் மலை முழுவதும் புகைந்துகொண்டிருந்தது. ஏனெனில் அதன்மீது நெருப்பில் இறங்கிவந்தார். அதன் புகை தீச்சூளையிலிருந்து எழும் புகைபோலத் தோன்றியது. மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது (19:18)

39. ஆண்டவர் எத்தனையாவது நாளை புனிதப்படுத்தினார் அல்லது ஓய்வு நாளாக ஆசி வழங்கினார்?

– ஏழாம் நாளை (20:11)

40. ஒரு ஆண்டிற்கு எத்தனை முறை விழா எடுக்குமாறு ஆண்டவர் கட்டளையிட்டார்?

– மூன்று முறை (23:14)

41. முப்பெரும் விழாக்கள் யாவை?

– புளிப்பற்ற அப்ப விழா, அறுவடை விழா, சேகரிப்பு விழா (23:15–16)

42. மோசே கோத்திரங்களுக்கு நினைவாக என்ன நிறுத்தினார்?

– பன்னிரண்டு தூண்களை எழுப்பினார் (24:4)

43. மோசே மலையில் எவ்வளவு காலம் தங்கியிருந்தார்?

– நாற்பது பகலும், நாற்பது இரவும் தங்கியிருந்தார் (24:18)

44. சந்திப்புக் கூடாரம் எதனால் செய்யப்பட்டது?

– சித்திம் மரத்தால் (26:26)

45. ஆண்டவர் குருத்துவப் பணி புரிவதற்காக யாரை அழைத்தார்?

– ஆரோனையும் அவன் புதல்வர் நாதாபு, அபிகூ, எலயாசர், இத்தாமர் ஆகியோரையும் (28:1)

46. ஆண்டவர் திருமுன் ஆரத்திப் பலி செய்தது யார்?

– ஆரோன் (29:24)

47. ஆரோன் அணிந்திருக்கும் திருவுடைகளை அவனுக்குப் பின் யார் அணிவார்?

– அவனின் புதல்வர்கள் (29:29)

48. பலிபீடத்தில் காலையிலும் மாலையிலும் என்ன பலியிடக் கூறினார்?

– செம்மறி ஆட்டுக்குட்டிகளை (29:39)

49. நறுமணப் பொருள் எரிக்குமாறு செய்யப்பட்ட பீடம் எந்த மரத்தாலானது?

– சித்திம் மரம் (30:1)

50. ஆண்டவர் மோசேயிடம் வெண்கலத்தில் என்ன செய்து வைக்க கூறினார்?

– வெண்கல நீர்த்தொட்டி (30:17)

51. ஆரோனும், அவன் புதல்வரும் வெண்கல நீர்த்தொட்டியிலிருந்து என்ன செய்ய வேண்டும்?

– கைகளையும் பாதங்களையும் கழுவ வேண்டும் (30:19)

52. அகிசமாக்கின் மகன் யார்?

– ஒகொலியாபு (31:6)

53. ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு என்ன அறிவிக்க வேண்டும் என்று மோசேயிடம் கூறினார்?

– ஓய்வுநாள்களைக் கருத்தாய்க் கடைப்பிடியுங்கள் (31:13)

54. சீனாய் மலையில் ஆண்டவர் மோசேயுடன் பேசி முடித்தபின் என்ன கொடுத்தார்?

– கடவுளின் விரலால் எழுதப்பட்ட கற்பலகைகளாலான உடன்படிக்கைப் பலகைகள் இரண்டையும் கொடுத்தார் (31:18)

55. மோசே மலையினின்று இறங்கிவரத் தாமதித்ததைக் கண்ட மக்கள் ஆரோனிடம் என்ன கூறினார்கள்?

– நீர் முன்வந்து எங்களை வழிநடத்தும். தெய்வங்களை எங்களுக்கு உருவாக்கிக் கொடும் (32:1)

56. மோசே வந்து என்ன செய்தார்?

– கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாகும் மட்டும் அதை இடித்துத் தண்ணீரில் தூவி, இஸ்ரயேல் மக்களைக் குடிக்கச் செய்தார் (32:30)

57. லேவியர் செயலால் எத்தனை பேர் மடிந்தனர்?

– மூவாயிரம் பேர் (32:28)

58. இஸ்ரயேல் மக்கள் செய்த பெரிய பாவம் என்ன?

– பொன்னால் தெய்வங்களைச் செய்தனர் (32:31)

59. இஸ்ரயேல் மக்களை ஆண்டவர் தண்டித்தாரா?

– ஆண்டவர் அவர்களைத் த்ண்டித்தார் (32:35)

60. இஸ்ரயேல் மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்று ஆண்டவர் மோசேயிடம் கூறினார்?

- வணங்காக் கழுத்துள்ள மக்கள், நொடிப் பொழுதில் நான் உங்களிடையே வந்து உங்களை அழித்தொழிக்கப் போகிறேன் (32:5)

61. இஸ்ரயேல் மக்கள் எங்கே தங்கள் அணிகலன்களை கழற்றினார்கள்?

- ஓரேபு மலையை விட்டுப் புறப்பட்டபின் (33:6)

62. மோசே எந்த கூடாரத்தை பாளையத்திற்கு வெகு தூரத்தில் அடிப்பது வழக்கம்?

- சந்திப்புக் கூடாரம் (33:7)

63. ஆண்டவர் மோசேயிடம் எதை எடுத்துக்கொண்டு சீனாய் மலைக்கு வரக் கூறினார்?

- இரு கற்பலகை (34:1)

64. ஆண்டவர் கூறிய பயங்கரமான செயல் என்ன?

- எமோரியர், கானானியர், இத்தியர்,பெரிசியர், இவ்வியர், எபூசியர் ஆகியோரை துரத்திவிடுவேன் என்றார் (34:11)

65. மோசே எத்தனை நாள் உண்ணாமலும் குடியாமலும் இருந்தார்?

- நாற்பது நாள் (34:28)

66. மோசே எந்த நாளை ஓய்வு நாள் என்று கூறினார்?

- ஏழாம் நாளை 'சாபாத்து' என்று (35:2)

67. ஏப்போது என்றால் என்ன?

- குருவின் மேலாடை.

68. ஆண்களும், பெண்களும் ஆண்டவருக்கு கொண்டு வந்த பொருட்கள் எவை?

- காப்புகள், காதணிகள், மோதிரங்கள், அணிகலன்கள் ஆகிய பொன்கலன்கள் (35:22)

69. ஆண்டவர் யாரைப் பெயர் சொல்லி அழைத்தார்?

- பெட்சலேலைப் பெயர் சொல்லி அழைத்தார் (35:30)

70. கூடாரம் செய்வதற்கு என்ன என்ன பயன்படுத்தினார்கள்?

- ஐம்பது வெண்கல கொக்கிகள், செந்நிறமாகப் பதனிட்ட செம்மறி ஆட்டுகிடாய் தோல், வெள்ளாட்டுத் தோல், கூடாரத்துக்கு ஒரு மேல்விரிப்பு. (36:18,19)

71. கூடாரத்தை எந்த மரத்தால் செய்தனர்?

- சித்திம் மரத்தால் (36:20)

72. கூடாரத்தில் எந்த பொருட்கள் ஒன்றிணைந்தன?

– பசும் பொன்னால் ஒரு விளக்குத் தண்டு செய்து, அதை அடிப்பு வேலையாக செய்தனர். அதன் அடித்தண்டு, கிளைகள், கிண்ணங்கள், குமிழ்கள், மலர்கள் ஆகியவை ஒன்றிணைந்ததாக இருந்தன. (37:17)

73. மோசே கட்டளைப்படி கூடாரத்தை செய்தவன் யார்?

– யூதா குலத்தைச் சார்ந்த கூரின் மகன் ஊரியின் புதல்வரான பெட்சலேல் (38:22)

74. கூடார வேலைக்கு கொடுக்கப்பட்ட காணிக்கை எவ்வளவு?

– 1170 கிலோ கிராம் செக்கேல் நிறைப்படி கொடுக்கப்பட்டது. (38:24)

75. இதைக் கொடுத்தவர்கள் எத்தனை பேர்?

– ஆறு இலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேர் (38:26)

76. ஆரத்திக் காணிக்கையாக வந்த வெண்கலம் எவ்வளவு?

– இரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்து ஐந்து கிலோகிராம்.

77. எத்தனை செக்கேல் கொடுக்கப்பட்டது?

– நாலாயிரத்து இருபது கிலோகிராம். (38:25)

78. இஸ்ரயேல் புதல்வரின் நினைவுக் கற்கள் எங்கு வைக்கப்பட்டது?

– ஏப்போதின் தோள்பட்டை மேல் (39:7)

79. எப்போது திருஉறைவிடம் எழுப்பப்பட்டது?

– இரண்டாம் ஆண்டில், முதல் மாதம், முதல் தேதியன்று (40:17)

லேவியர்

1. ஆண்டவர் எரிபலியாக எதை செலுத்தக் கூறினார்?

– செம்மறி ஆடு, அல்லது வெள்ளை ஆடு (1:10)

2. எந்தப் பறவைகளை எரிபலிக்கு நேர்ச்சையாக செலுத்தக் கூறினார்?

– காட்டுப் புறா, மாடப்புறா (1:14)

3. இஸ்ராயேல் செய்த பாவத்திற்கு என்ன பரிகாரம் செய்தனர்?

– ஓர் இளங்காளையை பாவம் போக்கும் பலியாக கொடுத்தனர். (4:14)

4. இஸ்ராயேல் மக்கள் உண்ணக் கூடாதவை எவை?

– மாடு, ஆடு வெள்ளாடு இவற்றின் கொழுப்பை (1:23)

5. மோசே ஆட்டுக்கிடாய் இரத்தத்தை எதன்மேல் சுற்றிலும் தெளித்தார்?

– பலிபீடத்தின் மேல் (8:18)

6. மோசே யாரை திருப்பொழிவு செய்தார்?

– ஆரோனையும், அவன் புதல்வரையும் (8:2)

7. ஆரோனும், அவன் புதல்வரும் சந்திப்பு கூடாரத்தில் ஆண்டவருக்காக எத்தனை நாள் காவல் காத்தனர்?

– ஏழு நாள்கள் 8:35)

8. ஆண்டவர் எந்த மிருகங்களை இஸ்ரயேல் மக்களுக்கு உண்ண உத்தரவு இட்டார்?

– கால்நடைகளில், குளம்புகள் இரண்டாகப் பிளந்திருக்கிற விரிசல் குளம்புள்ள, அசை போடுபவற்றை நீங்கள் உண்ணலாம். (11:3)

9. எதை உண்ண வேண்டாம் என்றார்?

– அசைபோடும் கால்நடைக்கு விரிகுளம்பில்லையெனில் அதனை நீங்கள் உண்ணலாகாது. (11:4)

10. நீர் வாழும் உயிர்களில் எது உண்ணத்தக்கவை?

– கடல், குளம், ஆறு ஆகியவற்றில் வாழும் துடுப்பும் செதிலுமுள்ளவை அனைத்தும் நீங்கள் உண்ணத்தக்கவை.

11. நிலத்தில் செறிந்திருக்கும் ஊர்வனவற்றில் உங்களுக்கு தீட்டானவை எவை?

– எலி, சுண்டெலி, ஆமை இனம், உடும்பு, அழுங்கு, ஓணான், பல்லி, பச்சோந்தி. (11:29)

12. உங்கள் உணவுப்பொருளான கால்நடை ஒன்று சாக அதன் சடலத்
தொட்டவர் எப்படிப்பட்டவர்?

– மாலைவரை தீட்டுடையவர் (11:39)

13. ஒழுக்கு நின்று தீட்டு அகன்றால் எந்த நாளில் ஆண்டவனுக்
காணிக்கை கொடுக்க வேண்டும்?

– எட்டாம் நாள், இரு காட்டுப் புறாக்களை அல்லது புறாக் குஞ்சுகள
கொடுக்க வேண்டும்.

14. உண்ணத் தக்க ஒரு விலங்கை, அல்லது பறவையை வேட்டையாடி
பிடித்தால், அவர் தன் குருதியைத் தரையில் சிந்திவிட்டு எ
மண்ணால் மூடவேண்டும்?

– அனைத்து உடலுக்கும் அதுவே உயிர். அதன் குருதி உயிர் போன்றது. (17:1

15. நீங்கள் புனிதமாய் கடைப்பிடிக்க வேண்டிய ஆண்டவருக்குரி
பண்டிகை நாள் எது?

– 7 ஆம் நாள் புனித சபை கூடும் நாள், அது ஆண்டவருக்கான ஓய்வு நாள்
(23:3)

16. ஆண்டவர் எப்போது ஓய்வுநாளாக கடைபிடிக்க வேண்டும் என்
கூறினார்?

– அந்த மாதத்தின் ஒன்பதாம் நாளினை மாலை முதல் மறுநாள் மாலை வ
ஓய்வுநாளாகக் கடைப்பிடிக்க வேண்டும். (23:32)

17. ஆண்டவரின் கூடாரப் பெருவிழா எப்போது தொடங்குகிறது?

– ஏழாம் மாதம் பதினைந்தாம் நாளன்று. (23:34)

18. ஆண்டவர் யாருடன் உடன்படிக்கை செய்தார்?

– யாக்கோபு, ஈசாக்கு, ஆபிரகாம். (26:42)

எண்ணிக்கை

1. ஆண்டவர் சீனாய்ப் பாலைநிலத்தில் எந்தக் கூடாரத்தில் மோசேயுடன் பேசினார்?

– சந்திப்புக் கூடாரத்தில் (1:1)

2. யூதா குலத்தில் தலைவனாய் இருந்தவன் யார்?

– அம்மினதாபின் மகன் நகுசோன் (1:7)

3. இஸ்ரயேலில் போருக்குப் போக எத்தனை வயதுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

– இருபது வயதுக்கு மேல் (1:20)

4. இஸ்ரயேலின் தலைப்பேறான மகன் யார்?

– ரூபன் (1:20)

5. இஸ்ரயேலில் போருக்குப் போகத்தக்க வீரர் எண்ணிக்கை என்ன?

– நாற்பத்தாறாயிரத்து ஐந்நூறு பேர் (1:21)

6. கூடாரத்தை கண்காணிக்கும் பொறுப்பு எந்த குலத்துடையது?

– லேவியர் குலம் (1:50)

7. பென்யமின் குலத்தின் தலைவன் யார்?

– கிதயோனியின் மகன் அபிதான் (2:22)

8. மோசேவால் எண்ணப்படாத குலம் எது?

– லேவி குலம் (1:49)

9. ஆரோனின் புதல்வர்கள் யார்?

– தலைமகன் நாதாபு, அபிகூ, எலயாசர், இத்தாமர் (3:2)

10. குருக்களாக நியமிக்கப்பட்ட ஆரோனின் புதல்வர்கள் யார்?

– எலயாசர், இத்தாமர் (3:4)

11. ஆண்டவர் திருமுன் வேற்று நெருப்பைப் கொண்டு வந்ததால் கொல்லப்பட்டவர் யார்?

– நாதாபு, அபிகூ (3:4)

12. இஸ்ரயேலின் தலைமைக் குரு யார்?

– ஆரோன் (3:6)

13. தூயகத்துக்கு பொறுப்பானவர்களை மேற்பார்வை செய்தவன் யார்?

– எலயாசர் (3:32)

14. ஒரு செக்கேல் அளவிற்கு எவ்வளவு கேரா?

– இருபது (3:47)

15. சந்திப்பு கூடாரத்தில் பணி செய்த குடும்பம் எது?

– கோகாத்தியர் (4:37)

16. பாளையத்தினின்று புறம்பாக்கப்பட்டவர் யார்?

– தொழுநோயர், வெட்டையுள்ளோர், பிணத்தால் தீட்டுப் பட்டோர். (5:2)

17. குற்றத்தை நினைவூட்டக் கூடிய சினத்தின் உணவுப் படையல் எவ்வளவு?

– பத்தில் ஒரு ஏப்பா வாற்கோதுமை (5:15)

18. ஆண்டவருக்காக ஒப்புக் கொடுக்கப்பட்ட நாசீர் கடைப்பிடிக்க வேண்டியவை என்ன?

– மது அருந்தக்கூடாது. சவரக்கத்தி தலையில் படக்கூடாது, பிணத்தருகே போகக் கூடாது. (6:3,5,6).

19. இரு கெருபுகளிடையே உடன்படிக்கை பேழையின் மேல் இருந்தது எது?

– இரக்கத்தின் அரியணை (7:89)

20. சந்திப்பு கூடாரத்தில் பணி செய்யும் லேவியர்களின் வயது என்ன?

– இருபத்தைந்தும், அதற்கு மேல் (8:24)

21. எவற்றை ஊதுவதன் மூலம் மக்கள் மோசே முன் கூடினார்கள்?

– இரண்டு வெள்ளி எக்காளங்கள் (10:2)

22. எக்காளங்களை ஊதக்கூடியவர்கள் யார்?

– ஆரோனின் புதல்வரான குருக்கள் (10:8)

23. இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலையிலிருந்து புறப்பட்டவுடன் மேகம் எந்தப் பாலையில் தங்கிற்று?

– பாரான் பாலை (10:12)

24. இசக்கார் மக்கள் குலத்தின் படைத் தலைவன் யார்?

– சூவாரின் மகன் நெத்தனியேல். (10:15)

25. அனைத்து பாளையங்களுக்கும் பின்காவலாக எந்த குலம் இருந்தது?

– தாண் குலம் (10:25)

26. மோசே மாமனார் யார்?

– இரகுவேல் (10:29)

27. இரகுவேல் எந்த நாட்டைச் சார்ந்தவர்?

– மீதியான் நாட்டைச் சார்ந்தவர் (10:29)

28. ஆண்டவரின் நெருப்பு பற்றியெரிந்த இடத்தின் பெயர் என்ன?

– தபேரா (11:3)

29. இஸ்ரயேலில் எத்தனைப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு மோசேயின் ஆவி அளிக்கப்பட்டது?

– எழுபது பேர் (11:16)

30. எழுபது பேர் பெயர்ப் பட்டியலில் எழுதப்பட்டிருந்தும் பாளையத்தில் தங்கியவர் எத்தனை பேர்?

– இரண்டு எல்தாது, மேதாது (11:26)

31. எல்தாது மேதாது இவர்களின் இறைவாக்கை தடுத்து நிறுத்தும்படி கூறியவன் யார்?

– யோசுவா (11:28)

32. மக்களுக்கு இறைச்சிக்காக அனுப்பப்பட்ட பறவை எது?

– காடைகள் (11:31)

33. ஆண்டவர் மாபெரும் வாதையால் மக்களைச் சாகடித்தார். அந்த இடத்திற்கு பெயர் என்ன?

– கிப்ரோத்து அத்தாவா (11:34)

34. மோசேவுக்கு எதிராக பேசியவர் யார்?

– மரியா, ஆரோன் (12:1)

35. மரியாளுக்கு ஏற்பட்ட தண்டனை என்ன?

– பனிபோன்ற வெண்மையான தொழுநோய் (12:10)

36. நூனின் புதல்வனுக்கு வேறு பெயரென்ன?

– நூனின் மகன் ஓசேயாவை 'யோசுவா' என்று பெயரிட்டு அழைத்தனர். (13:16)

37. திராட்சைக் குலையை வெட்டிய இடத்திற்கு என்ன பெயர்?

– எசுக்கோல் பள்ளத்தாக்கு (13:24)

38. கானான் நாட்டில் வாழும் குலங்கள் யாவை?

– அமலேக்கியர், இத்தியர், எபூசியர், எமோரியர், கானானியர். (13:29)

39. கானான் நாட்டை எத்தனை நாட்கள் உளவுப் பார்த்தனர்?

– நாற்பது நாள் (13:25)

40. கானான் நாட்டில் உளவுப் பார்த்தவர்களில் உயிர் தப்பியவர் யார்?

– யோசுவா, காலேபு.

41. எரிபலிக்கான எண்ணெயுடன் பிசைந்த மாவின் அளவென்ன?

– பத்திலொரு மரக்கால் மெல்லிய மாவைக் கால்படி எண்ணெயில் பிசைந்தனர்.

42. மோசேக்கு எதிராக கலகம் செய்த லேவியின் புதல்வர்கள் யார்?
– கோராகு, தாத்தான், அபிராம், ஓனும் (16:1)

43. இஸ்ரயேலின் பன்னிரண்டு கோல்களில் யாருடைய கோல் துளிர்விட்டது?
– ஆரோனின் கோல் (17:8)

44. உடன்படிக்கை கூடாரத்தில் உதவி செய்பவர்கள் யார்?
– ஆரோன் மற்றும் அவன் புதல்வர்கள் (18:2)

45. பாவம் நீக்குவதற்காக பயன்படும் மிருகம் எது?
– கிடாரி.

46. மனித பிணத்தைத் தொடுகிறவன் எத்தனை நாள் தீட்டுப் பட்டிருப்பான்?
– ஏழு நாள் (19:11)

47. பிணத்தினால் தீட்டுப்பட்டவன் என்ன செய்ய வேண்டும்?
– மூன்றாம் நாளிலும், ஏழாம் நாளிலும் அவன் தன்னைத் தண்ணீரால் தூய்மையாக்கி கொள்வான் (19:12)

48. மிரியாம் எங்கு அடக்கம் செய்யப்பட்டாள்?
– காதேசில் (20:1)

49. எங்கு இஸ்ரயேல் மக்கள் வாதாடினர்?
– மெரிபாவின் தண்ணீரில் (20:13)

50. இஸ்ரயேலுக்கு வழி தர மறுத்தது யார்?
– ஏதோம் (20:21)

51. ஓர் என்ற மலைக்கு ஏறிச் சென்றவர்கள் யார்?
– ஆரோனும் அவனுடைய மகன் எலயாசர் (20:25)

52. ஆரோனின் உடைகளை உரிந்து யாருக்கு உடுத்தினார்கள்?
– எலயாசர் (20:28)

53. ஆரோன் எங்கு இறந்து போனான்?
– ஓர் என்னும் மலையுச்சியில் (20:28)

54. இஸ்ரயேல் கானானியர் நகரை அழித்து அதற்கு என்ன பெயர் கொடுத்தனர்?
– ஓர்மா (21:3)

55. மக்கள் கடவுளுக்கும், மோசேக்கும் எதிராக பேசியபோது ஆண்டவர் எப்படி தண்டித்தார்?

– கொள்ளி வாய்ப் பாம்புகளை அனுப்பி, அவை கடிக்கவே இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர் (21:6)

56. பாம்பினால் கடியுண்டவர்கள் எப்படி உயிர் பிழைத்தனர்?

– வெண்கலப் பாம்பைப் பார்த்து (21:9)

57. இஸ்ரயேலர் தன் நாட்டின் வழியாகச் செல்ல அனுமதி கொடுக்காத எமோரிய மன்னன் யார்?

– சீகோன் (21:21)

58. சிப்போர் மகன் யார்?

– பாலாக்கு (22:10)

59. பிலயாமை அழைத்து வரத் தூதரை அனுப்பியவன் யார்?

– பாலாக்கு (22:4)

60. பிலயாம் கழுதையில் போனபோது அவருக்கு எதிரியாக நின்றவர் யார்?

– ஆண்டவரின் தூதர் (22:22)

61. கித்திம் யாரை துன்புறுத்துவான்?

– ஆசியாவையும் ஏபேரையும் துன்புறுத்துவான் (24:25)

62. பாலாக்கு இஸ்ரயேலை எத்தனை முறை ஆசீர்வதித்தான்?

– மூன்று முறை (24:10)

63. இஸ்ரயேல் மக்கள் வழிபட்ட அந்நிய தெய்வத்தின் பெயர் என்ன?

– பாகால்பெகோர் (25:23)

64. மதியானியப் பெண்ணுடன் சேர்த்துக் கொல்லப்பட்ட இஸ்ரயேலன் பெயர் என்ன?

– சிம்ரி (25:14)

65. கொல்லப்பட்ட மதியானியப் பெண்ணின் பெயர் என்ன?

– கோசுபி (25:15)

66. பெகோரை முன்னிட்டு ஏற்பட்ட நோய் எது?

– கொள்ளை நோய் (25:18)

67. சீனாய்ப் பாலைநிலத்தில் எண்ணப்பட்டவர்களில் காப்பாற்றப்பட்டவர் யார்?

– காலேபு, யோசுவா (26:65)

68. செலொபுகாதின் புதல்வியர் யார்?

– மக்லா, நோகா, ஒக்லா, மில்கா, திர்சா. (27:1)

69. மோயீசனுக்குப் பின் மக்களை வழிநடத்த நியமிக்கப்பட்டவர் யார்?

– யோசுவா.

70. ஆண்டவருடைய பாஸ்கா எந்நாளில் வந்தது?

– முதல்மாதத்தின் பதினான்காம் நாள் (28:16)

71. எக்காளம் முழங்கும் நாள் எப்போது?

– ஏழாம் மாதம் முதல் நாளன்று (29:1)

72. மிதியானியரிடம் போரிட எத்தனைப் பேர் ஆயத்தமானார்கள்?

– பன்னீராயிரம் (31:5)

73. மதியானுக்கு எதிரான புனிதப்போர் நடந்தபோது தலைவராக இருந்தவர் யார்?

– குரு எலயாசர் (31:13)

74. மாக்கிர் புதல்வர் எங்கு சென்ற எமோரியரை துரத்திவிட்டார்?

– கிலயாதுக்கு (32:39)

75. ஆரோன் இறந்தபோது அவருக்கு வயது எவ்வளவு?

– நூற்று இருபத்து மூன்று (33:39)

76. கானான் நாடு இஸ்ரயேலுக்கு எப்படி பங்கிடப்பட்டது?

– திருவுளச் சீட்டு மூலம் (34:13)

77. கொலையாளி தஞ்சம் புகும் நகர் எது?

– அடைக்கல நகர் (35:6)

78. மேய்ச்சல் நிலங்கள் உட்பட லேவியருக்குக் கொடுக்கும் மொத்த நகர்கள் எத்தனை?

– நாற்பத்தெட்டு. (35:7)

இணைச் சட்டம்

1. மோசே எந்தெந்த அரசர்களை முறியடித்திருந்தார்?

– எமோரிய அரசன் சீகோன், பாசானின் அரசன் ஓகை (1:4)

2. ஏசா உடைமையாக கொடுக்கப்பட்ட இடம் எது?

– சேயிர் (2:5)

3. அம்மோனியர் அரக்கர்களை எவ்வாறு அழைத்தனர்?

– சம்சுமியர் (2:20)

4. இஸ்ரயேல் மக்கள் பாசானுக்குச் செல்லும் வழியில் அவர்கள் எதிரே யார் போரிட புறப்பட்டு வந்தான்?

– பாசானின் மன்னன் ஒகு (3:1)

5. ஒகு மன்னனின் இரும்புக் கட்டில் எந்த நகரத்தில் இருந்தது?

– இரப்பா நகரில் (3:11)

6. அரக்கர் நாடு என்று அழைக்கப்பட்ட நாடு எது?

– பாசான் நாடு. (3:13)

7. மனாசேயின் மகன் யாயிர் பாசான் என்னும் பகுதியை எவ்வாறு பெயரிட்டு அழைத்தான்?

– தனது பெயராலேயே அவ்வோத்து யாயீர் என்றழைத்தான் (3:14)

8. மோசே யோர்தானுக்கு கிழக்கே அமைத்த மூன்று நகரங்கள் யாவை?

– பெட்சேர், இராமோத்து, கோவான் (3:43)

9. ஆண்டவர் எந்த மலையில் இஸ்ரயேல் மக்களோடு உடன்படிக்கைச் செய்தார்?

– ஓரேபு (5:2)

10. ஆண்டவர் எந்த நாட்டின்மீது மாபெரும் அடையாளங்களையும் அச்சுறுத்தும் அருஞ்செயல்களையும் செய்தார்?

– எகிப்து, பார்வோன் (6:22)

11. பாலைநிலத்தில் மக்களை ஆண்டவர் எத்தனை ஆண்டுகள் வழி நடத்தினார்?

– நாற்பது ஆண்டுகள் (8:4)

12. கடவுளாகிய ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை எவ்வாறு பெருகச் செய்வதாக கூறுகிறார்?

– வானத்து விண்மீன்கள் போல் (10:22)

13. **எந்த மரத்தினால் மோசே பேழை செய்தார்?**

– சித்திம் மரத்தால் (10:3)

14. **நிலம் தன் வாயைத்திறந்து யாரை விழுங்கியது?**

– தாத்தானையும், அபிராமையும், அவர்களுடைய குடும்பங்கள், கூடாரங்கள், அவர்களைப் பின்பற்றிய எல்லா உயிரினங்களையும் நிலம் தன் வாயைப் பிளந்து விழுங்கியது.

15. **இரத்தத்துடன் கூடிய சதையை உண்ணக் கூடாது ஏன்?**

– இரத்தமே உயிர் (12:23)

16. **கூடாரத் திருவிழா எத்தனை நாட்கள் கொண்டாடுவதாக கூறப்பட்டுள்ளது?**

– ஏழு நாள்கள் (16:13)

17. **இஸ்ரயேல் மக்களிடையே பங்கும் சொத்துரிமையும் இல்லாதவர்கள் யார்?**

– குருக்களும், லேவிய குலத்தாரும் (18:1)

18. **ஆண்டவர் கொடுத்த கட்டளைக் கற்களை எந்த மலைமீது நாட்டும்படி மோசே மக்களுக்குக் கட்டளையிட்டார்?**

– ஏபால் மலைமீது (27:4)

19. **எஸ்போன் நாடும், பாசான் நாடும் கைப்பற்றப்பட்டு யாருக்குப் பங்கிடப்பட்டது?**

– ரூபானிருயக்கும், காத்தியருக்கும், மனாசேயின் பாதிக் குலத்தாருக்கும் (29:8)

20. **ஆண்டவர் தன் சினத்திலும் சீற்றத்திலும் வேரறுத்த நகரங்கள் யாவை?**

– சோதோம், கொமோரா, அத்மா, செபோயிம். (29:23)

21. **மோசே எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?**

– நூற்று இருபது (31:2)

22. **மோசேக்குப் பின் இஸ்ரயேலரை வழி நடத்தியவர் யார்?**

– நூனின் மகனாகிய யோசுவா (31:23)

23. **மோசே எங்கு இறந்தார்?**

– நேபா மலையில் உள்ள பிஸ்காவின் உச்சியில் (34:1a, 34:5b)

24. **ஆண்டவர் மோசேயை எங்கு அடக்கம் செய்தார்?**

–பெத்பகோருக்கு எதிரே உள்ள பள்ளத்தாக்கில். (34:6)

யோசுவா

மோசே இறந்த பின் இஸ்ரயேலரை வழிநடத்த ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியன் யார்?

- யோசுவா (1:1)

யோசுவா இடும் கட்டளைக்கு கீழ்ப்படியாதவருக்கு தண்டனையாக மக்கள் கூறியது என்ன?

- கொல்லப்பட வேண்டும் (1:18)

யோசுவாவின் தந்தையின் பெயர் என்ன?

- நூன் (1:1)

யோசுவா முதன்முதலில் வேவு பார்க்க ஒற்றர்களை எங்கு அனுப்பினார்?

- எரிக்கோ நகருக்கு (2:1)

யோசுவா அனுப்பிய ஒற்றர்கள் எரிக்கோ நகரில் எங்கே தங்கினர்?

- இராகாபு வீட்டில் (2:1)

இராகாபு என்பவர் யார்?

- விலைமாது. (2:1)

இராகாபுவின் வீடு எதனோடு ஒட்டியிருந்தது?

- கோட்டைச் சுவரோடு (2:15)

ஒற்றர்கள் இராகாபின் வீட்டை அடையாளம் காண சாளரத்தில் கட்டச் சொன்னது எதை?

- சிவப்புக் கயிற்றை (2:18)

பயணத்தின்போது உடன்படிக்கைப் பெட்டிக்கும் மக்களுக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்?

- இரண்டாயிரம் அடி. (3:4)

மக்கள் யோர்தானைக் கடக்கும்போது என்ன காலம்?

- அறுவடைக் காலம் (3:15)

அறுவடைக் காலத்தில் யோர்தான் நதியின் நீர்மட்டம் எப்படியிருக்கும்?

- கரைபுரண்டு ஓடும். (3:15)

இஸ்ரயேல் மக்கள் யோர்தானைக் கடக்கும்போது சாரத்தானின் அருகிலிருந்து ஆதாம் வரை கண்டதென்ன?

- நீர் மேலெழும்பி நின்றது. (3:16)

13. படைக்கலன்கள் தாங்கியவர்களாய் இஸ்ரயேல் மக்கள் முன் செ
இஸ்ரயேலர்கள் யாவர்?

– ரூபன், காத்தின் மக்களும், மனாசேயின் அரைக் குலமும். (4:12)

14. யோர்தானைக் கடந்த மக்கள் எங்கே தங்கினர்?

– கில்காலில் (4:19)

15. யோர்தானைக் கடந்ததன் நினைவுச் சின்னமாக யோசுவா என்
செய்தார்?

– பன்னிரு கற்களையும் யோசுவா கில்காலில் நாட்டினார். (4:20)

16. இஸ்ரயேலர் யோர்தானைக் கடக்க, ஆண்டவர் அற்புதமாய் வற்
செய்தார் என்று கேள்வியுற்று இதயம் கலக்கமுற்றவர்கள் யார்?

– எமோரிய நாட்டு அரசுகளும், கனானியா மன்னர்களும். (5:1)

17. கில்காலில் இருந்த இஸ்ரயேலர் எரிக்கோச் சமவெளியி
கொண்டாடிய விழா என்ன?

– பாஸ்கா கொண்டாடினர் (5:10)

18. மன்னாப் பொழிவது எப்போது நின்றது?

– நிலத்தின் விளைச்சலை உண்ட மறுநாளிலிருந்து. (5:12)

19. யோசுவா, தம் கண்களை உயர்த்திப் பார்த்தபோது, உருவிய கத்தியுட
நிற்கக் கண்டவர் யார்?

– ஆண்டவரின் படைத்தலைவன் (5:14)

20. யாருக்கு அஞ்சி எரிக்கோ கோட்டை அடைக்கப்பட்டிருந்தது?

– இஸ்ரயேல் மக்களுக்கு அஞ்சி. (6:1)

21. எரிக்கோவைப் பிடிக்கும் முன் [கைப்பற்று முன்] உடன்படிக்கை
பேழைக்குமுன் குருக்களால் பயன்படுத்தப்பட்ட எக்காளம் எந்
காலத்திற்குரியது?

– ஜுபிலி காலத்திற்குரியது (6:4)

22. மக்கள் ஆரவாரம் செய்ய கடவுளால் தகர்க்கப்பட்ட மதில் எது?

– எரிக்கோ மதில் (6:20)

23. எரிக்கோ நகர் அழிக்கப்படும்போது காப்பாற்றப்பட்ட ஒரே குடும்ப
எது?

– விலைமாது இராகாபின் குடும்பமும், உடைமைகளும் (6:22)

24. விலக்கப்பட்ட பொருள்களை [அழிவுக்குரியவற்றிலிருந்
சிலவற்றைக்] கவர்ந்தவன் யார்?

–ஆக்கான் என்பவன் (7:1)

25. ஆயி நகருக்குப் போரிட அனுப்பப்பட்ட போர் வீரர்கள் எத்தனை பேர்?

- இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் பேர். (7:3)

26. இஸ்ரயேலர் ஆயி நகரில் தோல்வியுறக் காரணம் என்ன?

- ஆக்கான் அழிவுக்குரியவற்றை மறைத்து (புதைத்து) வைத்ததால். (7:20–21)

27. ஆக்கான் கூடாரத்தில் புதைத்து வைத்தது என்ன?

- மேலாடை, வெள்ளி, தங்கக் கட்டி. (7:21)

28. ஆக்கானைக் கொன்று கற்குவியலால் மூடப்பட்ட இடம் எது?

- ஆக்கோர் பள்ளத்தாக்கு. (7:26)

29. ஆயி நகரைப் பிடித்தபோது இஸ்ரயேலரால் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

- பன்னிரண்டாயிரம் பேர் (8:25)

30. யோசுவா ஆயி மன்னனை எவ்வாறு கொன்றார்?

- தூக்கிலேற்றினார் (8:29)

31. யோசுவா ஆயி நகரைப் பிடித்த பின்பு எங்கே ஆண்டவருக்குப் பீடம் எழுப்பி பலி செலுத்தினார்?

- ஏபால் மலையில் (8:30)

32. யோர்தானுக்கு இப்பக்கம் வாழ்வோர் அனைவரும் போர் தொடுக்கத் திரண்டும் ஏன் இஸ்ரயேலருடன் சூழ்ச்சியாய் சமாதானம் மேற்கொண்டனர்?

- எரிக்கோவுக்கும், ஆயிக்கும் யோசுவா செய்ததைக் கேள்வியுற்றதால். (9:3)

33. கிபயோன் மக்கள் நெடுந்தூரம் பயணம் மேற்கொண்டதாகக் காட்டும் அடையாளங்கள் யாது?

- திராட்சை ரசத் தோல் பைகள், ஆடைகள், மிதியடிகள். (9:13)

34. யோர்தானுக்கு இப்பக்கம் வாழ்ந்த கிபயோனியரோடு ஏன் போரிடவில்லை?

- கடவுளாகிய ஆண்டவர் பெயரால் வாக்குறுதி அளித்துவிட்டதால் (9:19)

35. கிபயோனியர் போரினின்று தப்பினாலும், யோசுவா கொடுத்த தண்டனை யாது?

- மரம் வெட்டுபவர்களாகவும், கடவுளின் இல்லத்திற்குத் தண்ணீர் எடுப்பவர்களாகவும் பணிக்கப்பட்டனர் (9:23)

36. யோசுவா காலத்தில் எருசலேமின் மன்னன் யார்?

- அதோனியா செசுக்கு. (10:1)

37. கிபயோன் யோசுவாவுடன் சேர்ந்ததைக் கேட்ட எருசலேம் மன்ன
செய்ததென்ன?

– ஐந்து மன்னர்களும் ஒன்றுகூடி, கிபயோனுக்கு எதிராகப் போ
தொடுத்தார்கள். (10:5)

38. தப்பி ஓடிய எமோரியரை ஆண்டவர் எவ்வாறு முறியடித்தார்?

– பெரும் கற்களை வானத்திலிருந்து பொழிந்தார் (10:11)

39. இஸ்ரயேலர் எமோரியரை முறியடிக்கும் வரை[வஞ்சம் தீர்க்கும் வ
வானில் அசையாமல் நின்றவை எவை?

– கதிரவனும், நிலாவும் (10:13)

40. ஐந்து எமோரிய மன்னர்களும் தப்பியோடி எங்கே ஒழிந்தனர்?

– மக்கேதாவில் ஒரு குகையில் (10:16)

41. மக்கேதாவிலிருந்து யோசுவா எங்கே சென்று போர் புரிந்தார்?

– லிப்னாவில் (10:29)

42. இஸ்ரயேலர் இலாக்கீசுடன் போர் புரிகையில் இலாக்கீசுக்கு உத
வந்த கெசேர் மன்னன் யார்?

– ஓராம் (10:33)

43. யோசுவா எக்லோனிலிருந்து சென்று கைப்பற்றிய முக்கிய கோட்
எது?

– எபிரோன் (10:36)

44. யோசுவாவின் பல வெற்றிகளுக்குக் காரணம் என்ன?

– இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் இஸ்ரயேலுக்காகப் போரிட்ட
(10:42)

45. அரசுகளுக்கெல்லாம் தலை நகராக இருந்த நகர் எது?

–ஆட்சோர் (11:10)

46. யோசுவா விட்டு வைத்த நகரங்கள் எது?

– காசா, காத்து, அஸ்தோது. (11:22)

47. தாம் கைப்பற்றிய நாடுகளை யோசுவா என்ன செய்தார்?

– இஸ்ரயேலருக்கு அவர்களின் குலப் பிரிவின்படி உடைமையாக அளித்த

48. யோசுவா முறியடித்த மன்னர்கள் எத்தனை பேர்?

– முப்பத்தொரு மன்னர்கள். (12:24).

49. ஐந்து மன்னர்களின் நாடு எது?

– கானான் நாடு (13:3)

50. யோசுவாவால் எத்தனை குலங்களுக்கு நாடு பிரித்துக் கொடுக்கப்பட்டது?

- ஒன்பது குலங்களுக்கும் மனாசேயின் பாதி குலத்திற்கும் (13:7)

51. மோசேயால் யோர்தானின் கிழக்குப் பகுதியில் நாடுகள் பெற்ற குலங்கள் யாது?

- ரூபன், காத்து மக்களுக்கும், மனாசேயின் பாதி குலத்திற்கும். (13:8)

52. இரபாத்யிம் இனத்தில் எஞ்சி இருந்தவன் யார்?

- ஓக் (13:12)

53. இரபாத்தியரில் ஓகின் பகுதி முழுவதும் தாக்கிக் கைப்பற்றியவர் யார்?

- மோசே (13:12)

54. இஸ்ரயேலரில் பன்னிரு குலங்களில் நாடு கொடுக்கப்படாத குலம் எது?

- லேவியர் குலம். (13:14)

55. யோர்தான் நதியை எல்லையாகக் கொண்ட குலம் எது?

- ரூபன் குலம் (13:23)

56. யோசுவா காலத்து குரு யார்?

- எலயாசர் (14:1)

57. எந்த குலத்திற்கு உடைமை அளிக்கவில்லை?

- லேவியர். (14:3)

58. யூதாவின் கெனிசியனும் எபுன்னேயின் மகனும் என்பவர் யார்?

- காலேபு (14:6)

59. காலேபு யோசுவாவின் ஆசியுடன் பெற்ற இடம் எது?

- எபிரோன் (14:13)

60. எபிரோனுக்கு மற்றொரு பெயர் என்ன?

- கிர்யத்து அர்பா (14:15)

61. யூதா குல எல்லை எதுவரையிருந்தது?

-சாக்கடலின் தென்முனை வளைவு வரை. (15:2)

62. ஆனாக்கியருள் பெருமை மிக்கவனாக மதிக்கப்பட்டவன் யார்?

- அர்பே (14:15)

63. ஆனாக்கின் மூன்று புதல்விகள் யார்?

- சேசாய், அகிமான், தல்மாய். (15:14)

64. ஆனாக்கின் வழித்தோன்றலை அங்கிருந்து துரத்தியவர் யார்?

– காலேபு. (15:14)

65. காலேபு அறிவித்தபடி கிரியத்து சேபேரைத் தாக்கி அதைக் கைப்பற்றி மகள் அக்சாவை மனைவியாக்கிக் கொண்டவர் யார்?

– ஒத்னியேல் (15:17)

66. மேல் ஊற்றுகளையும், கீழ்ஊற்றுகளையும் பெற்றவர் யார்?

– காலேபு மகன் அக்சா. (15:19)

67. யூதா குலத்திற்குக் கிடைத்த நகர்கள் எத்தனை?

– இருபத்தொன்று நகர்களும், அவற்றின் சிற்றூர்களும். (15:32)

68. யூத புதல்வர்களால் எருசலேமை விட்டு வெளியேற்ற முடியாத மக்கள் யார்?

– எபூசியரை (15:63)

69. சூசையின் புதல்வர்கள் யார்?

– மனாசேயும், எப்ராயிமும். (16:4)

70. எப்ராயிம் குலத்தார் அழித்தொழிக்காத இனம் யாது?

– கெசேரில் வாழ்ந்து வந்த கானானியரை (16:10)

71. மனாசேயின் முதல் மகனும் கிலயாதின் தந்தையுமானவர் யார்?

– மாக்கீர் (17:1)

72. இஸ்ரயேலர் சந்திப்புக் கூடாரத்தை எங்கே அமைத்தனர்?

– சீலோவில். (18:1)

73. லேவியரின் உரிமைச் சொத்து யாது?

– ஆண்டவருக்கு குருத்துவப் பணி புரிவதே அவர்கள் உரிமைச் சொத்து (18:7)

74. லூசின் வேறு பெயர் என்ன?

– பெத்தேல். (18:13)

75. பென்யமின் குலக் குடும்பங்களின் எல்லைகளில் ஒன்று கொலிவேத்துப் பக்கம் திரும்பிச் செல்லும் பக்கம் எது?

– ரூபனின் மகன், போகனின் கல்பக்கம் (18:17)

76. ஆசேர் குல குடும்பத்தினருக்கு விழுந்த சீட்டு எத்தனையாவது?

– ஐந்தாவது சீட்டு (19:24)

77. யோசுவாவுக்கு இஸ்ரயேலர் கொடுத்த இடம் யாது?

– திம்னத்செரா (19:50)

78. அறியாமல் தவறுதலாக ஒருவனைக் கொன்றவர் இரத்தப்பழி வாங்குவோரிடமிருந்து தப்பி ஓடித் தஞ்சம் புகும் நகரத்தி ்ா பெயர் என்ன?

– அடைக்கல நகர் (20:3, 20:9)

79. எஞ்சி இருந்த லேவியர் யார்?

– மெராரியர் (21:34)

80. இஸ்ரயேல் மக்களுக்குரிய நிலப்பகுதியில் லேவியருக்கு விடப்பட்டவை எத்தனை நகர்கள்?

– நாற்பத்து எட்டு (21:41)

81. கிழக்கே குடியேறிய இரண்டரைக் குலத்தார் யார்?

– ரூபன், காத்து குலம், மனாசேயின் பாதிக்குலம் (22:9)

82. இரண்டரைக் குலத்தார் கிலயாத்திற்குத் திரும்பும் போது யோர்தான் அருகில் கட்டியது என்ன?

– மிகப்பெரிய பலிப்பீடம் (22:10)

83. ரூபன் மக்கள், காத்து மக்கள், மனாசேயின் பாதி குலத்தாரும் கட்டிய பலிபீடத்திற்கு என்ன பெயரிட்டனர்?

– கிலயாது . (22:34)

84. யோசுவா மக்களுடன் செய்துகொண்ட இறுதி உடன்படிக்கை எங்கே? எதைக் கொடுத்தார்?

– செக்கேமில். விதிமுறைகளையும், ஒழுங்குமுறைகளையும் கொடுத்தார் (24:25)

85. யோசுவா இறந்தபோது அவருக்கு வயது எத்தனை?

– நூற்றுப் பத்து (24:29)

86. யோசுவா எங்கே அடக்கம் செய்யப்பட்டார்?

– திம்னத்செராவில் (22:30)

87. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து கொண்டு வந்த யோசேப்பின் எலும்புகளை எங்கே புதைத்தனர்?

– செக்கேமில் (24:32)

88. ஆரோனின் மகன் எலயாசர் எங்கே அடக்கம் செய்யப்பட்டார்?

– கிபயாவில் (24:33)

89. யோசுவா 23, 24 அதிகாரங்களில் வருவது என்ன?

– யோசுவாவின் இறுதி அறிவுரைகள்.

பிற்சேர்க்கை

1. ஏழாவது சீட்டு இஸ்ரயேல் குலத்தில் யாருக்கு விழுந்தது?

– தாண் குலத்துக் குடும்பங்களுக்கு (19:40)

2. லேவியரின் முதுபெரும் தலைவர்கள், தாங்கள் வாழ நகரங்களையு கால்நடைகள் மேய நிலங்களையும் தரும்படி யாரிடம் கேட்டனர்?

– குரு எலயாசரையும், நூனின் மகன் யோசுவாவையும், முதுபெரு தலைவர்களையும். (21:1)

3. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து கொண்டு வந்து செக்கேமி புதைத்த எலும்பு யாருடையது?

– யோசேப்பின் எலும்புகள் (24:32)

நீதித் தலைவர்கள்

பொது:

1. நீதித் தலைவர்கள்நூலின் ஆசிரியர் யார்?

– ராபிக்கள் மரபுபடி சாமுவேல்.

2. வடநாடு மரபில் உருவான தலைவர்கள் யார்?

– ஆவோத், தெபோரா, கிதியோன், இப்தாகு, ஒத்னியேல்.

3. சாலமோனின் அரியணையேற்றம் எப்போது?

– கி.மு. 962 ல்.

4. பெரிய நீதித் தலைவர்கள் யார் யார்?

– ஒத்னியேல், சிம்சோன், ஆவோத், பாராக், தெபோரா, கிதியோன், இப்தாகு, ஏகூது.

5. சிறிய நீதித் தலைவர்கள் யார் யார்?

– யாயீர், சம்கார், தோலா, ஏலோன், இப்சான், அப்தோன்.

6. இந்நூல் வரலாற்று நூல்களுள் எந்நூல்களுக்கு தொடர்பை ஏற்படுத்துகிறது?

– சாமுவேல், அரசர் நூல்கள்.

7. தலைமுறை அட்டவணையில் யார் வம்சத்தில் ரூத்து இடம் பெறுகிறார்?

– தாவீது வம்சத்தில்.

8. எபிரேய விவிலியத்தில் ரூத்து நூல் எந்த இடத்தை பெறுகிறது?

– அறிவுரை நூல்கள் பிரிவில்.

நூலிலிருந்து:

1. யோசுவா இறந்தபின் இஸ்ரயேல் மக்கள் கனானியருக்கு எதிராகச் சென்று எங்கள் சார்பாகப் போரிடுவர் என்று ஆண்டவரிடம் கேட்டுப் பெற்றவர் யார்?

– யூதா (1:2)

2. யூதாவின் மக்கள் கனானியரோடு போரிட, உதவிக்கு யாரை அழைத்தனர்?

– சிமியோனின் மக்களை (1:3)

3. யூதா வென்ற கனானியத் தலைவர்கள் யாவர்?

– சேசாய், அகிமான், தல்மாய். (1:10)

4. யூதா மக்கள் தம் சகோதரர் சிமியோனின் மக்களுடன் என்று செப்பாத்தில் வாழும் கனானியரைக் கொன்றதால் அவ்வூருக்கு எப்பெயர் விளங்கிற்று?

– ஓர்மா என்று அழைத்தனர் (1:17)

5. யோசேப்பு வீட்டாரின் கை ஓங்கியதால் அடிமை ஆனவர்கள் யார்?

– எமோரியர் (1:35)

6. ஆண்டவரின் தூதர் கில்காவிலிருந்து எங்கு சென்றார்?

– பொக்கிம் என்ற இடத்திற்கு (2:1)

7. நூனின் மகன் யோசுவா எந்த வயதில் இறந்தார்?

– நூற்றுப் பத்து (2:8)

8. இஸ்ரயேல் மக்கள் மேல் ஆண்டவருக்குக் கோபம் வரக் காரணம் என்ன?

– அவர்கள் ஆண்டவரைக் கைவிட்டுப் பாகாலுக்கும், அஸ்தரோத்துக்கும் ஊழியம் செய்தனர்.

9. ஆண்டவர் இஸ்ரயேலின் மேல் கோபங்கொண்டு அவர்களை யாருடைய கையில் ஒப்படைத்தார்?

– கொள்ளையடிப்போரிடம் (2:14)

10. இஸ்ரயேலரை [துன்புறுத்தியவர்] கொள்ளையடித்தவர்களின் கைகளிலிருந்து மீட்க ஆண்டவர் யாரை எழச் செய்தார்?

– நீதித் தலைவர்களை. (2:16)

11. இஸ்ரயேலர் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட, ஆண்டவர் அவர்களுக்கு விடுதலை அளிக்க யாரை எழச் செய்தார்?

– ஒத்தனியேல் (3:9)

12. கெனாசின் மகன் ஒத்தனியேல் இஸ்ரயேலரை எத்தனை ஆண்டுகள் அமைதிப் பாதையில் நடத்தி வந்தார்?

– நாற்பது ஆண்டுகள் (3:11)

13. இஸ்ரயேல் மக்களை பதினெட்டு ஆண்டுகள் அடிமைப்படுத்தியிருந்த மன்னன் யார்?

– எக்லோன் (3:14)

14. இடக்கை மனிதர் யார்?

– ஏகூது (3:15)

15. ஏகூது காலத்தில் இஸ்ரயேலர் எத்தனை ஆண்டுகள் அமைதியில் வாழ்ந்தனர்?

- எண்பது ஆண்டுகள். (3:30)

16. ஏகூத்துக்குப் பின் வந்தவரும், அனாத்தின் மகனும் அறுநூறு பெலிஸ்தியரைக் கலப்பைக் கொம்பால் கொன்றவர் யார்?

- சம்கார். (3:31)

17. ஏகூது இறக்கும்போது ஆட்சோர் நகரை ஆண்ட கனானிய மன்னன் யார்?

- யாபீன் (4:2)

18. கானான் நாட்டு மன்னன் யாபினுடைய படைத்தலைவன் யார்?

- சீசரா (4:2)

19. யாபின் மன்னன் எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேலரை ஒடுக்கினான்?

- இருபது ஆண்டுகள் (4:3)

20. பெண் இறைவாக்கினராக இருந்த இலப்பிதோத்தின் மனைவியின் பெயர் என்ன?

- தெபோரா (4:4)

21. தெபோரா இஸ்ரயேலருக்கு நீதி வழங்குகையில் எம்மரத்தின் கீழ் அமர்வார்?

- பேரீச்சை மரம். (4:5)

22. பெண் இறைவாக்கினர் தெபோரா யாரை வரவழைத்து இறைவாக்குரைத்தார்?

- பாராக். (4:6)

23. கேனியரான எபேரின் மனைவி பெயர் என்ன?

- யாவேல்.

24. யாவேலின் கூடாரத்திற்கு அடைக்கலம் தேடி வந்து பெண்ணால் கொல்லப்பட்டவர் யார்?

- சீசரா. (4:17, 21.)

25. சீசராவை யாவேல் எவ்வாறு கொன்றார்?

- நெற்றிப் பொட்டில் கூடார முளை தரையில் இறங்கும் வரை சுத்தியலால் அடிக்க அவன் மடிந்தான். (4:21)

26. தெபோராவின் பாடலில் ஆண்டவருக்கு அன்பு செய்வோர் எப்படி இருக்கும்படிக் கூறுகிறார்?

- கதிரவன்போல் வாழட்டும். (5:31)

27. இஸ்ரயேலர் மிதியானியரிடம் எத்தனை ஆண்டுகள் துன்புற்றனர்?

– ஏழு ஆண்டுகள். (6:1)

28. ஆண்டவரின் தூதரால் வலிமை மிக்க வீரனே என்று அழைக்கப்பட்டவர் யார்?

– கிதியோன். (6:11. 12)

29. கிதியோன் கட்டிய பலிபீடத்திற்கு என்ன பெயரிட்டார்?

– நலம் நல்கும் ஆண்டவர். (6:24)

30. கிதியோனின் தந்தை யார்?

– யோவாசு. (6:11)

31. தன் பலிபீடத்தைத் தகர்த்தெறிந்த இந்த மனிதனோடு பாகாலே போராடிக் கொள்ளட்டும் என்று கூறினதால் கிதியோனுக்கு இட்ட வேறு பெயர் என்ன?

– எருபாகால். (6:32)

32. கிதியோன் ஆண்டவரிடம் கேட்ட இரு அடையாளங்களில் இடம்பெற்றது என்ன?

– ஆட்டுக் கம்பளி, பனி, (6:37, 40)

33. மிதியானியரை முறியடிப்பதில் இஸ்ரயேலர் தற்பெருமை கொள்ளாதிருக்க ஆண்டவர் எத்தனை பேரை போருக்குத் தேர்ந்தெடுத்தார்?

– முந்நூறு பேர் (7:2,7)

34. வெட்டுக்கிளி போன்று ஏராளமாகப் பள்ளத்தாக்கில் தங்கியிருந்தவர்கள் யார்?

– மிதியானியரும் அமலேக்கியரும். (7:12)

35. யோர்தானுக்கு அப்பாலிருந்து கிதியோனிடம் இரு மிதியானியர் தலைகள் கொண்டுவரப்பட்டன. அவர்களின் பெயர் என்ன?

– ஒரேபின், செயேபின் (7:25)

36. களைப்படைந்திருந்த போர் வீரர்களுக்கு கிதியோன் முதலில் யாரிடம் உணவு கேட்டார்?

– சுக்கோத்து மக்களிடம் (8:5)

37. மிதியானியர் கையிலிருந்த இஸ்ரயேலரை மீட்டது யார்?

– கிதியோன். (8:22)

38. கிதியோனை இஸ்ரயேலர்கள் தங்களை ஆளும்படிக் கேட்டபோது என்ன கூறினார்?

– ஆண்டவர் உங்களை ஆள்வார். (8:23)

39. இஸ்ரயேலரிடமிருந்து காதணிகளைப் பெற்று கிதியோன் என்ன செய்தார்?

– ஏப்போதைச் செய்தார் (8:24)

40. கிதியோன் ஏப்போதை செய்து தம் நகராகிய ஒபிராவில் அதை நிறுவிய பின் இஸ்ரயேலர்.... என்ன செய்தனர்?

– வேசித்தனம் (8:27)

41. கிதியோனுடைய சொந்த மக்கள் எத்தனை பேர்?

– எழுபது பேர். (8:30)

42. கிதியோன் இறந்தபின் இஸ்ரயேலர் மீண்டும் யாரிடம் திரும்பினர்?

– பாகாலிடம் (8:33)

43. செக்கேம் மற்றும் பெத்மில்லோவின் குடிமக்கள் யாரை தங்கள் அரசனாக தேர்ந்தெடுத்தனர்?

– அபிமெலக்கை.

44. அபிமெலக் தன் சகோதரர்கள் எழுபது பேரை ஒரே கல் மீது வைத்து கொல்லும்போது தப்பிச் சென்றவர் யார்?

– எருபாகாலின் கடைசி மகன் யோத்தாம். (9:5)

45. தம் சகோதரன் அபிமெலக்குக்கு அஞ்சி யோத்தாம் எங்கே ஓடிப்போனார்?

– பெயேருக்கு. (9:21)

46. இஸ்ரயேலரை அபிமெலக் எத்தனை ஆண்டுகள் ஆண்டான்?

– மூன்று ஆண்டுகள். (9:22)

47. அபிமெலக்கிற்கு எதிராக எழுந்த செபூல் எபேதின் மகன் பெயர் என்ன?

– ககால் (9:30)

48. எந்தக் கல்லினால் அபிமெலக் மண்டை உடைக்கப்பட்டது?

– அரைக்கும் கல். (9:53)

49. அபிமெலக்கிற்குப்பின் இஸ்ரயேலை விடுவிக்க எழுந்தவர் யார்?

– தோலா (10:1)

50. தோலா எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேலரை வழிநடத்தினார்?

– இருபத்து மூன்று ஆண்டுகள். (10:2)

51. தோலாவுக்குப் பின் இஸ்ரயேல் மக்களுக்கு நீதித் தலைவராய் எழுந்தவர் யார்?

– யாயீர். (10:3)

52. யாயீருக்கு எத்தனை புதல்வர்கள்?

– முப்பது (10:4)

53. யாயீரின் புதல்வர்களுக்கு இருந்த முப்பது நகர்கள் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

– அவ்வோத்து யாயிர் என்று. (10:4)

54. யூத பென்யமின், எப்ராயிம் வீட்டுடன் போரிட யோர்தானைக் கடந்து வந்தவர்கள் யாவர்?

– அம்மோனியர். (10:9)

55. இஸ்ரயேலர் மிகவும் அல்லலுறக் காரணம் என்ன?

– பாகாலுக்கு ஊழியம் செய்ததால். (10:9–10)

56. அம்மோனியருக்கு எதிராக இஸ்ரயேலர் எங்கே பாளையம் இறங்கினர்?

– மிஸ்பாவில் (10:17)

57. வலிமை மிக்கப் போர்வீரனாய் கிலயாத்துக்கு ஒரு விலைமாது பெற்ற மகன் பெயர் என்ன?

– இப்தா. (11:1)

58. இப்தா தம் சகோதரர்களிடமிருந்து தப்பி ஓடி எந்த நாட்டில் வாழ்ந்தார்?

– தோபு நாட்டில் (11:3)

59. இப்தாவை முதன்முதலில் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் யார்?

– கிலயாதின் மக்கள். (11:11)

60. இப்தாவை கிலயாதின் மக்கள் தங்கள் தலைவராக்கிய போது எவ்விடத்தில் ஆண்டவர் திருமுன் தம் காரியங்கள் அனைத்தையும் பற்றிக் கூறினர்?

– மிஸ்பாவில். (11:11)

61. எத்தனை ஆண்டுகளுக்குப் பின் அம்மோனியர் தங்கள் நாட்டை அடைய முற்பட்டனர்?

– முன்னூறு ஆண்டுகளுக்குப் பின். (11:26, 27)

62. ஆண்டவர் அம்மோன் மக்களை இப்தாவிடம் கையளித்ததால் ஆண்டவருக்கு யாரை எரிபலியாக்குவேன் என்று நேர்ச்சை செய்தார்?

– வீட்டு வாயிலிலிருந்து புறப்பட்டு வருகின்றவரை. (11:30–31).

63. இப்தா மிஸ்பாவிலிருந்து 'தம் வீடு திரும்புகையில் எதிர் கொண்டு வந்தவர் யார்?

– அவருடைய ஒரே மகள்.

64. இப்தாவின் மகள் எத்தனை மாதங்கள் தன் கன்னிமைக்காகக் கதறியழ அனுமதி கேட்டாள்?

- இரண்டு மாதங்கள் (11:37)

65. இப்தாவின் மகளுக்காக இஸ்ரயேல் மகளிர் ஆண்டுதோறும் எத்தனை நாள்கள் துக்கம் கொண்டாடுவர்?

- நான்கு நாள்கள். (11:40)

66. இப்தாவுடன் கலகம் செய்தவர்கள் யார்?

- எப்ராயிம் மக்கள் (12:1)

67. இப்தா எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேலில் நீதித் தலைவராக விளங்கினார்?

- ஆறு ஆண்டுகள் (12:7)

68. இப்தாவுக்குப் பின் இஸ்ரயேலருக்கு நீதி வழங்க வந்தவர் யார்?

- இப்சான். (12:8)

69. இப்சான் எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேலருக்கு நீதி வழங்கினார்?

- ஏழு ஆண்டுகள் (12:90)

70. இப்சா இறந்தபின் 10 ஆண்டுகள் இஸ்ரயேலருக்கு நீதி வழங்கியவர் யார்?

- செபுலோனைச் சார்ந்த ஏலோன். (12:11)

71. ஏலோனுக்குப் பின் நீதிபதியாய்த் தோன்றிய இல்லேலின் மகன் யார்?

- அப்தோன் (12:13)

72. இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதை மீண்டும் செய்ததால் பிலிஸ்தியர் கையில் அடிமைப்பட்டது எத்தனை ஆண்டுகள்?

- நாற்பது ஆண்டுகள். (13:1)

73. அப்தோன் இஸ்ரயேலில் எத்தனை ஆண்டுகள் நீதித்தலைவராக விளங்கினார்?

- எட்டு ஆண்டுகள். (12:14)

74. பையன் பிறப்பிலிருந்தே கடவுளுக்கென நாசீர் ஆக இருப்பான் என்று ஆண்டவரின் தூதர் முன்னறிவித்தவர் யார்?

- சிம்சோன் (13:3.5.24)

75. சிம்சோனின் தந்தை பெயர் என்ன?

- மனோவாகு. (13:22)

76. எங்கே இருக்கும்போது ஆண்டவரின் ஆவி சிம்சோனைத் தூண்டத் தொடங்கியது?

– சோராவுக்கும், எசுத்தாவேலுக்குமிடையே அவன் இருக்கும்போது. (13:25)

77. யாருடைய புதல்வியை தனக்கு மணம்முடித்து வைக்கும்படி கேட்டார்?

– பெலிஸ்தியர் மகளிர் ஒருத்தியை. (14:1)

78. திமினோத்தின் திராட்சைத் தோட்டத்தை வந்தடைந்தபோது எதிர்ப்பட்டது என்ன?

– சிங்கக் குட்டி. (14:5)

79. தனக்குப் பிடித்த பெண்ணை கூட்டிச் செல்ல மீண்டும் வந்தபோது அவர் கொன்ற சிங்கத்தின் பிணத்தில் என்ன கண்டார்?

– தேன் கூடும் தேனும். (14:8)

80. சிம்சோன் சொன்ன விடுகதைக்கு பரிசுப் பொருள் என்ன?

– முப்பது நார்ப்பட்டாடைகள், முப்பது மேலாடைகள். (14:12)

81. சிம்சோன் அஸ்கலோனுக்கு சென்று எத்தனை பேரைக் கொன்று அவர்களின் உடைகளை உரிந்து விடுகதைக்கு விடை கூறியவர்களுக்குக் கொடுத்தார்?

– முப்பது பேரை (14:19)

82. நீ அவளை உண்மையாக வெறுப்பதாக நினைத்து அவளை உம்.... யாருக்குக் கொடுத்து விட்டேன்?

– தோழனுக்கு. (15:2)

83. பெலிஸ்தியரின் முற்றிய பயிர்களிடையே அனுப்பியது எவைகள்?
– நரிகள். தீ. (15:5)

84. சிம்சோன் பெலிஸ்தியரின் பயிர்களை தீ வைத்து அழிக்க எத்தனை நரிகளை அனுப்பினார்?
– முந்நூறு நரிகள். (15:4)

85. தம் மனைவியையும், மாமனையும் தீயிட்டுக் கொன்ற பிலிஸ்தியரை வெட்டி வீழ்த்தியபின் எங்கே போய் தங்கினார்?

– ஏற்றாமின் பாறைப் பிளவில். (15:8)

86. சிம்சோன் தாடை எலும்பை வீசி எறிந்த இடத்தை எவ்வாறு அழைத்தார்?

– இராமேத்து இலேகி. (15:15)

87. கழுதையின் பச்சைத் தாடை எலும்பைக் கொண்டு எத்தனை பேரைக் கொன்றார் சிம்சோன்?

– ஆயிரம் பேர் (15:15)

88. இராமேத்து இலேகி என்பதன் பொருள் என்ன?

– தாடை எலும்பின் மலை. (15:17ம் அடிக்குறிப்பு)

89. சிம்சோனின் மிகுந்த தாகத்தைத் தணிக்க ஆண்டவர் செய்ததென்ன?

– இலேகியில் ஒரு (நிலப்) பிளவைத் தோற்றுவித்தார். (15:19)

90. சிம்சோன் தாகம் தணியப் பெற்ற அவ்விடத்தை எப்படி அழைத்தார்?

– ஏன்ககோரே என அழைத்தார். (15:19)

91. பெலிஸ்தியரின் காலத்தில் சிம்சோன் எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேலுக்கு நீதி வழங்கினார்?

– இருபது ஆண்டுகள். (15:20)

92. காசாவில் சிம்சோன் சென்ற வீடு யாருடையது?

– ஒரு விலைமாதுடையது. (16:1)

93. சிம்சோன் நள்ளிரவில் தம் தோள்களின் மீது சுமந்து சென்றது என்ன?

– நகர் வாயிலின் கதவுகளையும், இரு கதவு நிலைகளையும் (16:3)

94. சோரேக்கு பள்ளத்தாக்கில் சிம்சோன் காதலித்த பெண்ணின் பெயர் என்ன?

– தெலீலா. (16:4)

95. சிம்சோனின் பெரும் வலிமை எதில் உள்ளது கண்டுபிடித்துச் சொன்னால் எத்தனை வெள்ளிக் காசு தருவதாக அவளின் காதலியிடம் பெலிஸ்தியர் கூறினர்?

– ஒவ்வொருவரும் ஆயிரத்து நூறு. (16:5)

96. சிம்சோன் எப்போது தன் ஆற்றலை இழந்தார்?

– அவர் தலையின் ஏழு மயிர்க்கற்றைகளையும் மழித்தவுடன். (16:19)

97. ஆற்றலை இழந்த சிம்சோனை பெலிஸ்தியர் என்ன செய்தனர்?

– அவரின் கண்களைத் தோண்டி எடுத்து அவரை காசாவுக்குக் கொண்டு சென்றார்கள். (16:21)

98. சிம்சோன் பெலிஸ்தியரை எப்போது அதிகம் கொன்றார்?

– அவர் சாகும்போது. (16:30)

99. செதுக்கிய உருவமாகவும், வார்ப்புச் சிலையாகவும் செய்து யார் வீட்டில் வைக்கப்பட்டது?

– மீக்காவின் வீட்டில் (17:4)

100. ஏபோத், தொராபிம் இவ்விரு சொற்களுக்கும் பொருள் என்ன?

– ஏபோத் – குருவுக்குரிய உடை. தொராபிம் – சிலை. (17:5)

101. எந்தக் குலம் உரிமைப் பகுதி இல்லாமலிருந்தது?

– தாண். (18:1)

102. தாண் குலத்தார் கிரியாத்து எயாரிமில் பாளையம் இறங்கியத அவ்விடத்திற்கு என்ன பெயர் வழங்கப்பட்டது?

– மகனே தாண். (18:11,12)

103. இலாயிசு நகரைக் கட்டியெழுப்பி தாணின் புதல்வர்கள் என் பெயரிட்டனர்?

– தாண். (18:29)

104. ஒரு லேவியனின் மனைவியை இழிவுபடுத்திய நகர் எது?

– கிபயா. (19:14,25)

105. எக்குலத்தார் லேவியனின் மனைவியை இழிவுபடுத்திக் கொன்றது

– பென்யமின் மக்கள். (19:14. 16)

106. லேவியன் தன் மனைவியை இழிவுபடுத்திக் கொன்றதை எல்ல குலங்களுக்கும் எவ்வாறு தெரிவித்தார்?

– உடலை பன்னிரு துண்டுகளாக வெட்டி, இஸ்ரயேலின் எல்லா நி பகுதிக்கும் அனுப்பி வைத்தார். (19:29)

107. எல்லாக் கோத்திரங்களும் இணைந்து பென்யமின் கோத்திரத் அழித்தபோது பாலைவனத்திற்குத் தப்பி ஓடிய அறுநூறு பென்யமி எங்கே நான்கு மாதம் தங்கினர்?

– ரிம்மோன் பாறையில் (20:48)

108. நம்மில் எவனும் தன் மக்களைப் பென்யமின் புதல்வருக்கு கொடுப்பதில்லை என்று இஸ்ரயேல் மக்கள் எங்கே ஆணையிட் கூறினர்?

– மிஸ்பாவில் (21:1)

109. பென்யமினர் தங்கள் மனைவியாக யாருடைய புதல்வியரைக் கவர் சென்றனர்?

– சீலோவின் மகளிரை. (21:21,23)

110. ஏன் இஸ்ரயேலர் தனக்கு நேர்மையாகத் தோன்றினபடி நடந் வந்தனர் என்று நீதித்தலைவர்கள் நூல் குறிப்பிடுகின்றது?

– ஏனெனில் இஸ்ரயேலுக்கு அரசர் கிடையாது. (21:24)

பிற்சேர்க்கை

1. கிழக்கே வாழ்ந்த மிதியானியருக்கு, அமலேக்கியருக்கும் கடற்கரை மணலைப் பலுகியிருந்து விலங்கு எது?

– ஒட்டகங்கள். (7:12)

2. கிதியோன் ஒரு ஏபோதைச் செய்யப் பெற்றுக்கொண்ட காதணிகளின் எடை எவ்வளவு?

– ஆயிரத்து எழுநூறு செக்கேல் ஆகும். (8:26)

3. யாயிர் இறந்து அடக்கம் செய்யப்பட்ட இடத்தின் பெயர் என்ன?

– காமோன். (10:5)

4. ஆண்டவருக்கு ஊழியம் செய்த இஸ்ரயேல் மக்கள் குறித்து அவர் வருத்தமுற்றது எதற்காக?

– அம்மக்களின் துன்பம் குறித்து. (10:16)

5. மனோவாகு ஆண்டவரின் தூதரிடம் உமது பெயர் என்ன என்று கேட்டதற்கு தூதர் சொன்ன பதில் என்ன?

– அது, வியப்புக்கு உரியது. (13:18)

6. இலாயிசு நாட்டை வேவு பார்க்கச் சென்றிருந்தவர்கள் எத்தனை பேர்?

– ஐவர். (18:14)

7. வேவு பார்க்கச் சென்ற ஐவர் மீக்காவின் வீட்டருகே இருந்தபொழுது அவர்கள் கண்டுகொண்ட குரல் யாருடையது?

– லேவியரான இளைஞரின் குரல். (18:3)

8. மீக்காவின் வீட்டுக்குள் சென்ற ஐவரும் குருவிடம் கேட்டதென்ன?

– எது உனக்கு நலம்? ஒரு தனி மனிதனின் வீட்டிற்கு குருவாயிருப்பதா? இஸ்ரயேலின் ஒரு குலத்திற்கு, ஒரு குடும்பத்திற்கு குருவாயிருப்பதா?

9. லேவியர் ஒரு மறு மனைவியாகக் கொண்டிருந்த அப்பெண்ணின் நாடு, ஊர் எது?

– யூதா நாடு, பெத்லகேம். (19:1)

10. நடனமாட வரும் சிலோ மகளிரைக் கவர்ந்து செல்ல பென்யமின் புதல்வர்கள் ஒளிந்து கொண்டிருந்த இடம் எது?

– திராட்சைத் தோட்டம். (21:21)

11. இஸ்ரயேலருக்கு அரசன் அல்லாததால் அவர்கள் என்ன நோக்கில் செயல்பட்டனர்?

– அவரவர் பார்வையில் நேர்மையெனப்பட்டதைச் செய்து கொண்டிருந்தனர். (21:25)

ரூத்து

1. மோவாபு நாட்டிற்குப் பிழைக்கச் சென்ற மனிதனின் பெயர் என்ன
– எலிமலேக்கு (1:2)
2. எலிமலேக்கின் மனைவி பெயர் என்ன?
– நகோமி (1:2)
3. எலிமலேக்கின் இரு புதல்வர்களின் பெயர் என்ன?
– மக்லோன், கிலியோன் (1:2)
4. நகோமியுடைய மருமகள்கள் பெயர் என்ன?
– ஓர்பா, ரூத்து (1:4)
5. தன் வீடு திரும்பிய மருமகளின் பெயர் என்ன?
– ஓர்பா (1:4)
6. பெத்லகேம் பெண்கள் பேசிக்கொண்டதென்ன?
– 'இவள் அந்த நகோமிதானே' (1:19)
7. மாரா என்றால் என்ன?
– கசப்பு (1:20)
8. நகோமி பெத்லகேமுக்குத் திரும்பி வந்தது எந்த காலத்தில்?
– வாற்கோதுமை அறுவடைக் காலம் (1:22)
9. பெரும் செல்வந்தனின் பெயர் என்ன?
– போவாசு (2:1)
10. ரூத்தின் போர்வையில் போட்ட வாற்கோதுமையின் அளவு எவ்வள
– ஆறு மரக்கால்கள் (3:15)
11. இஸ்ரயேலில் தொன்றுதொட்டு இருந்த வழக்கத்தின் அடையாள என்ன?
– தன் காலணியைக் கழற்றி மற்றவருக்குக் கொடுப்பர் (4:7)
12. 'நகோமிக்கு ஒரு மகன் பிறந்தான்' என்று அவனை வாழ்த் அவனுக்கு இட்ட பெயர் யாது?
– ஓபேது (4:17)
13. ஓபேதுவின் மகன் பெயர் என்ன?
– ஈசாயி (4:22)
14. ஈசியின் மகன் பெயர் என்ன?
– தாவீது (4:22)

சாமுவேல் நூல்கள்

பொது:

1. செப்துவாஜிந்த் [LXX] முறையில் இந்நூலின் பெயர் என்ன?

– அரசுகள் பற்றிய நூல்கள்.

2. சாமுவேல் யார்?

– நீதித் தலைவர்களின் குரு, இறைவாக்கினர்.

1 சாமுவேல்

1. எல்கானா எந்த ஊரைச் சார்ந்தவன்?

– இராமாத்தயிம் (1:1)

2. எல்கானாவின் இரு மனைவிகளின் பெயர் என்ன?

– அன்னா, பெனின்னா (1:2)

3. எல்கானா ஆண்டவரை வழிபட எங்கு செல்வான்?

– சீலோவுக்கு (1:3)

4. ஏலியின் புதல்வர்கள் பெயர் என்ன?

– ஒப்னி, பினகாசு (1:3)

5. அன்னாவுக்கு அன்பு செய்து வந்ததைப் பற்றி எல்கானா ஏன் வருந்தினான்?

– ஆண்டவர் அவளை மலடியாக்கியிருந்தார் (1:5)

6. அன்னா அழும்போதெல்லாம் எல்கானா அவளைப் பார்த்து என்ன கூறுவார்?

– அன்னா ஏன் அழுகிறாய்? ஏன் உண்ணவில்லை? ஏன் மனவருத்தம் அடைகிறாய்? நான் உனக்குப் பத்துப் புதல்வரைவிட மேலானவன் அன்றோ? என்பார் (1:8)

7. அன்னா கருவுற்று ஒரு மகனைப் பெற்றபோது அவனுக்கு என்ன பெயரிட்டாள்?

– சாமுவேல் (1:20)

8. பால்குடி மறந்தபின் அன்னா எதை எடுத்துக்கொண்டு ஆண்டவரி[illegible] இல்லத்திற்குப் போனாள்?

– மூன்று காளை, இருபது படி அளவுள்ள ஒரு மரக்கால் மாவு, ஒரு தோல் [illegible] திராட்சை இரசம் (1:24)

9. சாமுவேல் என்ன செய்து வந்தான்?

– ஆண்டவர் திருமுன் ஏலி என்ற குருவின் முன்பாக ஊழியம் செய்துவந்தா[illegible] (2:11)

10. ஏலியின் புதல்வர்கள் எப்படி வாழ்ந்தார்கள்?

– ஆண்டவர்மீது அக்கறை கொள்ளவில்லை. கீழ்த்தரமானவரா[illegible] வாழ்ந்தார்கள் (2:12)

11. ஆண்டவர் சாமுவேலைக் கூப்பிட்டபோது அவன் என்ன கூறினான்[illegible]

– இதோ அடியேன் (3:4)

12. சாமுவேல் ஏலியின் அருகில் ஓடி என்ன சொன்னான்?

– "என்னை அழைத்தீர்களா" என்று கேட்டான் (3:5)

13. ஏலி என்ன கூறினார்?

– "நான் அழைக்கவில்லை. திரும்பிச் சென்று படுத்துக்கொள்" என்றார் (3:5)

14. ஆண்டவர் சிறுவனை அழைக்கிறதை ஏலி கண்டறிந்து சாமுவேலை நோக்கி என்ன கூறினார்?

– "சென்று படுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ 'ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன்' என்று பதில் சொல்" என்றார். (3:9)

15. சாமுவேல் எல்லாவற்றையும் மறைக்காது சொன்னபோது ஏலி என்ன கூறினார்?

– அதற்கு அவர், "அவர் ஆண்டவர்தான்! அவரது பார்வையில் எது நல்லதோ அதை அவர் செய்யட்டும்" என்றார் (3:18)

16. நகர் முழுவதும் அழுதது. அழுகையின் குரல் கேட்ட ஏலி, என்ன வினவினார்?

– ஏன் இந்தக் கூக்குரல் என்று வினவினார் (4:14)

17. ஏலிக்கு அப்போது வயது எத்தனை?

– தொண்ணூற்று எட்டு (4:15)

18. ஏலி எப்படி இறந்தார்?

– அவர்தம் இருக்கையினின்று பின்புறம் கதவருகே விழுந்து கழுத்து முறிந்து இறந்தார் (4:18)

ஏலி எத்தனை ஆண்டுகளாக இஸ்ரயேலுக்கு நீதி வழங்கினார்?

- நாற்பது ஆண்டுகள் (4:18)

ஏலியின் மருமகள் தன் குழந்தைக்கு என்ன பெயரிட்டாள்?

- இக்கபோது (4:21)

மருமகள் தன் மகனுக்கு பெயரிட்டபின் வேறு என்ன சொன்னாள்?

- "இஸ்ரயேலினின்று மாட்சி அகன்றுவிட்டது. ஏனெனில் கடவுளின் பேழை கைப்பற்றப்பட்டது" என்றாள். (4:22)

பெலிஸ்தியர் கடவுளின் பேழையைக் கைப்பற்றி எடுத்துக்கொண்டு போய் எங்கு வைத்தனர்?

- தாகோன் கோவிலுக்குத் தூக்கிக்கொண்டுவந்து, தாகோன் சிலை அருகில் வைத்தனர். (5:2)

ஆண்டவருடைய பேழை பெலிஸ்தியர் நாட்டில் எத்தனை மாதம் இருந்தது?

- ஏழு மாதம் (6:1)

பேழை அடங்கிய வண்டி யாருடைய வயலுக்குள் வந்து நின்றது?

- பெத்சமேசைச் சார்ந்த யோசுவாவின் வயலுக்குள் வண்டி வந்து நின்றது. (6:14)

பெலிஸ்தியர் குற்றத்திற்காக எந்தெந்த நகர்கள் பொன் உருவங்களைச் செலுத்தின?

- அஸ்தோது, காசா, அஸ்கலோன், எக்ரோன் ஆகியன (6:17)

ஆண்டவருடைய பேழையைக் காத்துக்கொள்ளும்படி யாரைத் திருநிலைப்படுத்தினார்கள்?

- அபினதாபின் மகன் எலயாசாரை (7:1)

சாமுவேல் எங்கு இஸ்ரயேல் மக்களுக்கு நீதி வழங்கினார்?

- மிஸ்பாவில் (7:6)

சாமுவேல் ஒரு கல்லை எடுத்து மிஸ்பாவுக்கும் சொனாவுக்கும் நடுவில் நிறுத்தி வைத்து அந்த இடத்திற்கு என்ன பெயரிட்டார்?

- எபனேசர் (7:12)

சாமுவேலுடைய வீடு எங்கிருந்தது?

- இராமாவில் (7:17)

சாமுவேலின் புதல்வர்கள் பெயர் என்ன?

- தலைமகன் யோவேல், இளையவனின் பெயர் அபியா (8:2)

31. **சாமுவேல் வயது முதிர்ந்தபோது என்ன செய்தார்?**

– தம் புதல்வர்களை இஸ்ரயேலின்மீது நீதித்தலைவர்களாக அமர்த்தினார் (8:

32. **இஸ்ரயேலின் பெரியோர் அனைவரும் இராமாவுக்கு வந்து சாமுவேலிடம் என்ன கூறினர்?**

– எமக்கு நீதி வழங்க, அனைத்து வேற்றினங்களிடையே இருப்பதுபோன்ற ஓர் அரசனை நியமித்தருளும் என்ற கேட்டுக்கொண்டனர் (8:4–5)

33. **சவுலின் தந்தை பெயர் என்ன?**

– கீசு (9:1)

34. **சவுல் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்?**

– பென்யமின் குலத்தை (9:1)

35. **சவுலின் தந்தை கீசு என்பவனின் கழுதைகள் காணாமல் போனபோது அவன் சவுலை நோக்கி என்ன கூறினான்?**

– பணியாளன் ஒருவனை உன்னோடு கூட்டிக்கொண்டு, கழுதைகளைத் தேடிப்போ என்றார் (9:3)

36. **தமக்கு வழிகாட்டும்படி கடவுளின் அடியாருக்கு எதைக் கொடுப்போம் என்று பணியாளன் கூறினான்?**

– மூன்று கிராம் அளவுள்ள வெள்ளியை (9:8)

37. **இன்று இறைவாக்கினர் என்று சொல்லப்படுகிறவர் அக்காலத்தில் எப்படி அழைக்கப்பட்டார்?**

– திருக்காட்சியாளர் (9:9)

38. **சாமுவேல் சவுலைக் கண்டபோது ஆண்டவர் அவருக்கு என்ன சொன்னார்?**

– "இதோ நான் உனக்குச் சொன்ன மனிதன்! இவனே என் மக்கள்மீது ஆட்சி புரிவான்" என்றார் (9:17)

39. **சவுல் வாயிலின் நடுவே சாமுவேலை நெருங்கி என்ன கேட்டான்?**

– "திருக்காட்சியாளரின் வீடு எங்கே? தயைகூர்ந்து சொல்லும்" என்று கேட்டார் (9:18)

40. **சாமுவேல் சவுலை எவ்வாறு திருப்பொழிவு செய்தார்?**

– தைலக் குப்பியை எடுத்து அவர் தலைமீது வார்த்து, அவரை முத்தமிட்டுக் கூறியது, "ஆண்டவர்தம் உரிமைச் சொத்துக்குத் தலைவனாக இருக்கும்படி உன்னைத் திருப்பொழிவு செய்துள்ளார் அன்றோ". (10:1)

41. **ராகேலின் கல்லறை எங்குள்ளது?**

– பென்யமின் எல்லையாம் செல்குவில் (10:2)

42. சாமுவேல் அனைத்து இஸ்ராயேல் குலத்துக்கெல்லாம் சீட்டுப்போட்டபோது சீட்டு எந்த கோத்திரத்தின்மீது விழுந்தது?

– பென்யமின் குலத்தின்மீது விழுந்தது (10:20)

43. சவுலை மக்கள் எங்கே அரசனாக்கினார்கள்?

– கில்கலாவில் (11:15)

44. சாமுவேல் கில்கலாவுக்கு வராததால் சவுல் என்ன செய்தார்?

– எரிபலி செலுத்தினார் (13:9)

45. சாமுவேல் சவுலைப் பார்த்து என்ன கூறினார்?

– "நீர் அறிவீனமாய்ச் செயல்பட்டீர். உம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படி நீர் நடக்கவில்லை. இல்லையேல் ஆண்டவர் இஸ்ரயேல்மீது உமது அரசை என்றென்றும் நிறுவியிருந்திருப்பார். ஆனால் உமது அரசு நிலைக்காது. (3:13)

46. சவுலின் புதல்வியர் பெயர் என்ன?

– மூத்தவள் மேராபு, இளையவள் மீக்கால் (14:49)

47. சவுலின் புதல்வர்கள் பெயர் என்ன?

– யோனத்தான், இஸ்வி, மிக்கிசுவா (14:49)

48. சவுலின் மனைவி பெயர் என்ன?

– அகினோவாம் (14:50)

49. சவுலின் படைத்தலைவன் பெயர் என்ன?

– அப்னேர் (14:50)

50. அமலேக்கியரின் அரசர் யார்?

– ஆகாகை (15:8)

51. சாமுவேல் சவுலிடம் வந்தபோது சவுல் என்ன செய்து கொண்டிருந்தார்?

– "சவுல் அவரை நோக்கி நீர் ஆண்டவரால் ஆசி பெற்றவர்! ஆண்டவரின் வார்த்தையை நான் நிறைவேற்றிவிட்டேன்" என்றார் (15:13)

52. எது சிறந்தது? எது மேலானது என்று சாமுவேல் சவுலுக்குக் கூறுகிறார்.

– கீழ்ப்படிதல் பலியைவிடச் சிறந்தது. கீழ்ப்படிதல் ஆட்டுக்கிடாய்களின் கொழுப்பைவிட மேலானது (15:22)

53. கலகம் செய்வதும், முரட்டுத்தனமும் எதற்குச் சமம்?

– கலகம் சூனியத்திற்கு நிகரான பாவம். முரட்டுத்தனம் சிலை வழிபாட்டுக்கு ஒப்பான குற்றம் (15:23)

54. அமலேக்கியருடைய அரசர் ஆகாகை துண்டு துண்டாய் வெட்டியவர் யார்?

– சாமுவேல் (15:33)

55. பெத்லகேமின் பெரியோர்கள் சாமுவேலிடம் வந்து என்ன கேட்டார்கள்?

– உங்கள் வருகையின் நோக்கம் சமாதானம்தானே (16:4)

56. ஈசாயுக்கு எத்தனை புதல்வர்கள்?

– எட்டு (16:10)

57. சாமுவேல் ஈசாயிடம் உன் பிள்ளைகள் இத்தனை பேர்தானா? என்று கேட்க அவர் என்ன பதில் கூறினார்?

– இன்னொரு சிறுவன் இருக்கிறான் என்று பதிலளித்தார் (16:11)

58. சிறுவன் எப்படிப்பட்டவன்?

– சிவந்த மேனியும் ஒளிரும் கண்களும் கொண்டு அழகிய தோற்றமுடன் இருந்தான். (6:12)

59. சாமுவேல் என்ன செய்தார்?

– எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார். (16:13)

60. சவுல் தாவீதின் மீது அன்பு கொண்டு என்ன செய்தார்?

– அவனை படைக்கலன் தாங்குவோனாக நியமித்தார். (16:21)

61. கோலியாத்து எந்த நகரைச் சேர்ந்தவன்?

– காத்து நகரை சார்ந்தவன். (17:4)

62. அவன் உயரம் எவ்வளவு?

– ஆறரை முழம். (17:4)

63. அவனுடைய ஈட்டிக்கோல் எப்படியிருந்தது?

– தறி கட்டைபோல் பெரிதாயிருந்தது. (17:7)

64. சவுலுடன் போருக்குப் போன ஈசாவின் பிள்ளைகள் பெயர் என்ன?

– எலியாபு, அபினதாபு, சம்மாகு. (17:13)

65. தாவீது சவுலை விட்டுத் திரும்பி சென்று என்ன செய்து கொண்டிருந்தான்?

– தன் தந்தையின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். (17:15)

66. தாவீது சவுலை நோக்கி என்ன கூறினான்?

– கோலியாத்தின் பொருட்டு யாருடைய இதயமும் கலங்க வேண்டியதில்லை. உம் அடியானாகிய நானே சென்று அந்த பெலிஸ்தியனோடு போரிடுவேன் என்றான். (17:32)

67. அதற்கு சவுல் என்ன கூறினார்?

– இந்த பெலிஸ்தியனை எதிர்த்துப் போரிட உன்னால் இயலாது. நீயோ இளைஞன். ஆனால் அவனோ தன் இளவயது முதல் போரில் பயிற்சியுள்ளவன் என்றார். (17:33)

68. பெலிஸ்தியன் தாவீதிடம் என்ன கூறினான்?

– நீ கோலுடன் என்னிடம் வர நான் என்ன நாயா? என்று சொல்லித் தன் தெய்வங்களின் பெயரால் தாவீதைச் சபிக்கத் தொடங்கினான். (17:43)

69. தாவீது பெலிஸ்தியனை எவ்வாறு கொன்றான்?

– கையில் வாளேதும் இன்றிக் கவணும் கல்லும் கொண்டு பெலிஸ்தியன் மீது வெற்றி கொண்டு அவனை வீழ்த்திக் கொன்றான். (17:50)

70. சவுல் தாவீதை நோக்கி இளைஞனே, நீ யாருடைய மகன்? என்று கேட்க தாவீது என்ன கூறினான்?

– நான் பெத்லகேம் ஊரைச் சார்ந்த உம் அடியான் ஈசாயின் மகன் என்று பதிலளித்தார். (17:58)

71. யோனத்தான் தாவீதை எப்படி அன்பு செய்தான்?

– தம் உயிரெனக் கருதி அவர்மீது அன்பு கொண்டிருந்தார். (18:1)

72. சவுல் ஏன் சினமுற்றார்?

– சவுல் ஆயிரம் பேரைக் கொன்றார். தாவீதோ பதினாயிரம் பேரைக் கொன்றார் என்று பெண்கள் பாடினர்.

73. தாவீதின் மனைவியின் பெயர் என்ன?

– மீக்கால். (18:27)

74. மீக்கால் தாவீதை எதன் வழியாக இறக்கி விட்டாள்?

– பலகணி வழியாக இறக்கி விட்டாள். (19:12)

75. தாவீது தப்பியோடி எங்கு சென்றான்?

– இராமாவில் இருந்த சாமுவேலிடம். (19:18)

76. நோபில் ஊரிலிருந்தவர் யார்?

– அகிமெலக்கு என்ற குரு. (21:1)

77. குரு தாவீதுக்கு என்ன கொடுத்தார்?

– தூய அப்பத்தை. (21:6)

78. அந்நாளில் ஆண்டவரின் கூடாரத்துக்குள் இருந்த சவுலின் பணியாளன் யார்?

– தோயேகு என்ற ஏதோமியன். சவுலின் இடையர்களுக்குத் தலைவன். (21:7)

79. தாவீது எழுந்து எந்த மன்னனிடம் போய்ச் சேர்ந்தான்?

– காத்தின் மன்னன் ஆக்கிசிடம் (21:10)

80. தாவீதுடன் யாரெல்லாம் சேர்ந்து கொண்டார்கள்?

– ஒடுக்கப்பட்டோர், கடன்பட்டோர், சோர்வுற்றோர். (22:2)

81. இறைவாக்கினர் காது என்பவன் தாவீதை நோக்கி என்ன கூறினான்?

– நீ குகையில் தங்காதே! யூதா நாட்டுக்குப் புறப்பட்டுப் போ! என்றார்.

82. தாவீது கெயிலாவுக்கு வந்துள்ளான் என்று சவுலுக்கு தெரிவிக்கப்பட்டபோது சவுல் என்ன கூறினான்?

– கதவுகளும் தாழ்ப்பாள்களும் உள்ள நகரில் நுழைந்து அவன் மாட்டிக் கொண்டான். கடவுள் அவனை என்னிடம் ஒப்புவித்துள்ளார். (23:7)

83. சாமுவேலை எங்கு அடக்கம் செய்தனர்?

– இராமாவில் உள்ள அவரது இல்லத்தில். (25:1)

84. நாபாலின் மனைவியின் பெயர் என்ன?

– அபிகாயில் (25:3)

85. நாபாலிடம் எத்தனை ஆடுகள் இருந்தன?

– மூவாயிரம் ஆடுகளும், ஆயிரம் வெள்ளாடுகளும். (25:2)

86. தாவீதுக்கு யார் யார் மனைவியானார்கள்?

– அபிகாயில், அகினோவா.

87. தாவீது அபிசாயியை நோக்கி என்ன கூறினார்?

– அவரைக் கொல்லாதே! ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் மேல் கைவைத்துவிட்டுக் குற்றமற்று இருப்பவன் யார்? (26:9)

88. சவுலின் கூடாரத்தில் தாவீது எதை எடுத்துக் கொண்டு சென்றார்?

– தலைமாட்டில் இருந்த ஈட்டியையும், தண்ணீர்க் குவளையையும். (26:12)

89. தாவீது பெலிஸ்தியர் நாட்டில் எவ்வளவு காலம் தங்கியிருந்தான்?

– ஓர் ஆண்டும் நான்கு மாதங்களும். (27:7)

90. சவுல் எவ்வாறு இறந்தார்?

– சவுல் தம் வாளை எடுத்துத் தாமே அதன்மீது வீழ்ந்து மடிந்தார்.

91. சவுலின் புதல்வர்கள் யார் யார் இறந்தனர்?

– யோனத்தான், அபினதாபு, மல்கிசுவா. (31:2)

92. சவுலும் அவருடைய மூன்று புதல்வர்களும் எங்கே மடிந்து கிடந்தனர்?
– கில்போவா மலையில் (31:8)

93. சவுலின் உடலை என்ன செய்தனர்?
– பெத்சான் சுவரில் தொங்கவிட்டனர். (31:10)

94. இதை யாபேசுக் குடிகள் கேள்விப்பட்டு என்ன செய்தனர்?
– சவுலின் சடலத்தையும் அவர் தம் புதல்வர்களின் சடலங்களையும் பெத்சான் சுவரிலிருந்து இறக்கி யாபேசுக்கு கொண்டு வந்து அங்கே அவற்றை எரித்தனர் (31:12)

2 சாமுவேல்

1. தாவீது எபிரோனைச் சேர்ந்த நகர்களில் குடியேறிய போது யூதாவில் மக்கள் வந்து என்ன செய்தார்கள்?

– தங்கள் குலத்தின் அரசராகத் தாவீதைத் திருப்பொழிவு செய்தனர். (2:4)

2. சவுலின் மகனான இஸ்பொசேத்தை அரசனாக ஏற்படுத்தியவன் யார்?

– சவுலின் படைத்தலைவனாகிய நேரின் மகன் அப்னேர் (2:8–9)

3. இஸ்பொசேத்தை இஸ்ரயேல் மீது அரசாளத் துவக்கியபோது அவனுக்கு எத்தனை வயது?

– நாற்பது வயது. (2:10)

4. தாவீது எபிரோனில் யூத குலத்தின் மீது ஆட்சி புரிந்த காலம் எவ்வளவு?

– ஏழு ஆண்டும், ஆறு மாதங்களும் (2:1)

5. செருயாவின் புதல்வர்கள் யார் யார்?

– யோவாபு, அபிசாய், அசாவேல். (2:18)

6. அசாவேல் எப்படி ஓடக் கூடியவன்?

– காட்டு மான் போல் வேகமாக ஓடக் கூடியவன். (2:18)

7. தாவீதுக்கு எபிரோனில் பிறந்த புதல்வர்கள் யாவர்?

– அம்னோன், கிலயாபு, அப்சலோம், அதோனியா, செபற்றியா, இத்ரயாம். (3:2–5).

8. யோனத்தாசின் முடமான கால்களையுடைய மகனுக்குப் பெயர் என்ன?

– மெபிபொ சேத்து. (4:4)

9. மெபிபோசேத்தைக் கொன்றவர்கள் யார்?

– இரேக்காவும், பானாவும். (4:7)

10. தாவீது அரச பதவி ஏற்றபோது அவருக்கு வயது எத்தனை?

– முப்பது (5:4)

11. அவர் எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்?

– நாற்பது ஆண்டுகள். (5:4)

12. பார்வையற்றவரும், முடவரும் கோவிலினுள் நுழையக் கூடாது என்ற பழமொழி ஏன் கூறப்பட்டது?

– தாவீது உளமாற வெறுக்கும் முடவரையும், பார்வையற்றவரையும் கைப்பற்றப்படும் என்று கூறினார். ஆகவே பார்வையற்றவரும் முடவரும் கோவிலினுள் நுழையலாகாது என்று கூறப்பட்டது. (5:8)

13. பாகால்–பெராட்சிம் என்று ஏன் அழைக்கப்பட்டது?

– தகர்த்தெறியும் வெள்ளம்போல் ஆண்டவர் என் எதிரிகளை என் கண்முன்னே தகர்த்தெறிந்தார் என்பதால். (5:20)

14. ஆண்டவரின் பேழை கித்தியனான ஓபேது–ஏதோமின் இல்லத்தில் எவ்வளவு காலம் இருந்தது?

– மூன்று மாதங்கள். (6:11)

15. தாவீது ஆண்டவர் பேழை முன் எப்படி சென்றார்?

– நார்ப்பட்டால் நெய்யப்பட்ட ஏபோத்தை அணிந்து கொண்டு தாவீது முழு வளமையோடு ஆண்டவர் முன்பாக நடனமாடிச் சென்றார். (6:14)

16. தாவீது அரசர் ஆண்டவர் முன்னிலையில் குதித்து ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டு சவுலின் மகள் மீக்கால் என்ன செய்தாள்?

– அவரைத் தன் உள்ளத்தில் வெறுத்தாள். (6:16)

17. தாவீது அரசர் நாத்தானை நோக்கி என்ன கூறினார்?

– கேதுரு மரங்களான அரண்மனையில் வாழ்கிறேன். கடவுளின் பேழையோ கடவுளின் கூடாரத்தில் குடியிருக்கிறது என்று கூறினார். (7:3)

18. அதற்கு நாத்தான் என்ன கூறினார்?

– நீர் விரும்பியது அனைத்தையும் செய்து விடும். ஏனெனில் ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்று அரசரிடம் சொன்னார். (7:3)

19. ஆண்டவர் நாத்தானிடம் என்ன கூறினார்?

– ஆண்டவர் தாமே உன் வீட்டைக் கட்டப்போவதாக அவர் உனக்கு அறிவிக்கிறார். உனக்குப் பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப்பின் நான் உயர்த்தி அவனது அரசை நான் நிலைநாட்டுவேன் என்ற சொல்லச் சொன்னார். (7:11–19)

20. தாவீதின் படைத்தலைவன் யார்?

– செருயாவின் மகன் யோவாபு. (8:16)

21. சவுலின் வீட்டுப் பணியாளன் யார்?

– சீபா. (9:2)

22. மெபிபோசேத்து யாருடைய வீட்டில் இருந்தான்?

– அம்மியேலின் மகன் மாக்கிரின் வீட்டில். (9:4)

23. மெபிபோசேத்து தாவீது அரசரைப் பார்த்து என்ன கூறினான்?

– நான் செத்த நாய் போன்ற பணியாளன். நீர் என்னைக் கடைக்கண் பார்ப்பதற்கு எனக்கு என்ன தகுதி உள்ளது என்றான். (9:8)

24. சீபாவுக்கு எத்தனை பிள்ளைகள்? எத்தனை பணியாளர்கள்?

– பதினைந்து பிள்ளைகள். இருபது பணியாளர்கள். (9:10)

25. மெபிபோசேத்தின் மகனின் பெயர் என்ன?

– மீக்கா (9:12)

26. அம்மோனிய மன்னனின் மகனின் பெயர் என்ன?

– ஆனூன் (10:1)

27. ஆனூன் தாவீதின் பணியாளரைப் பிடித்து என்ன செய்தான்?

– அவர்களுடைய தாடியை ஒரு பகுதியை சிரைத்து அவர்களுடைய இடுப்பு வரை கத்தரித்து அவர்களை அனுப்பி வைத்தான். (10:4)

28. தாவீது தூதரை அனுப்பி என்ன சொன்னார்?

– உங்கள் தாடிகள் வளரும் வரை எரிகோவில் தங்கி, பிறகு திரும்புங்கள் என்று அரசர் சொல்லியனுப்பினார். (10:5)

29. தாவீது பார்க்கக்கூடிய அரண்மனை மாடியில் குளித்துக் கொண்டிருந்தவள் யார்?

– உரியாவின் மனைவி பத்சேபா. (11:3)

30. தாவீது உரியாவை நோக்கி என்ன கூறினார்?

– உன் வீட்டுக்குச் சென்று உன் பாதங்களைக் கழுவிக் கொள் என்றார். (11:8)

31. தாவீது யோவாபுக்கு என்ன எழுதினார்?

– போர் கடுமையாக நடக்கும் முன்னிலையில் நிறுத்தி அவனை விட்டு பின்வாங்கு. அவன் வெட்டுண்டு மடியட்டும். (11:15)

32. உரியாவின் மனைவி என்ன செய்தாள்?

– தன் கணவர் இறந்து விட்டதைக் கேள்வியுற்று அவருக்காக புலம்பி அழுதாள். (11:26)

33. ஆண்டவர் நாத்தானை யாரிடம் அனுப்பினார்?

– தாவீதிடம். (12:1)

34. நாத்தான் இறுதியாக கூறியது என்ன?

– இனி உன் குடும்பத்தினின்று வாள் என்றுமே விலகாது. (12:10)

35. தாவீது நாத்தானிடம் என்ன கூறினார்?

– நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன். (12:13)

36. பெத்சேபாவிடம் தாவீதுக்கு பிறந்த இரண்டாவது பிள்ளைக்கும் பெயர் என்ன?

– சாலமோன் (12:24)

நாத்தான் வந்து பிள்ளைக்கு என்ன பெயரிட்டார்?

- எதிதியா. (12:25)

அப்சலோமின் சகோதரியின் பெயர் என்ன?

- தாமார். (13:1)

இவள் மீது மோகம் கொண்டவன் யார்?

- தாவீதின் இன்னொரு மகன் அம்னோன். (13:1)

இதனால் என்ன நடந்தது?

- தன் சகோதரி தாமாருக்காக மிகவும் ஏங்கி நோயுற்றான். (13:2)

அம்னோனின் நண்பன் யார்?

- யோனதாபு. (13:3)

யோனதாபு யாருடைய மகன்?

- தாவீதின் சகோதரனான சிமயியின் மகன். (13:3)

தாவீது அம்னோனை வருத்தப்பட ஏன் விரும்பவில்லை?

- ஏனெனில் அவன் தம் மூத்த மகனானபடியால் அவனை அன்பு செய்து வந்தார். (13:21)

பாகால்–ஆட்சோர் எங்குள்ளது?

- எப்ராயிம் அருகில். (13:21)

அம்னோன் எப்போது இறந்தான்?

- அப்சலோம் தம் பணியாளரிடம் அம்னோனின் மனம் மதுவால் மயங்கும் நேரம் பாருங்கள். அம்னோனை தாக்குங்கள் என்று கூறினான். பணியாளன் கட்டளையிட்டவாறே அம்னோனுக்கு செய்தார்கள். (13:28–29).

அப்சலோம் எங்கு ஓடிச் சென்றான்?

- கெசூர் அரசன் அம்மி கூதின் மகன் தல்மாயிடம் (13:37)

அங்கு எத்தனை ஆண்டுகள் இருந்தான்?

- மூன்று ஆண்டுகள். (13:38)

அரசரின் உள்ளத்தில் அப்சலோமைப் பற்றிய நினைவு இன்னும் இருக்கிறது என்று அறிந்தவன் யார்?

- செருயாவின் மகன் யோவாபு. (14:1)

அரசரிடம் யாரை அனுப்பினான்?

- தெக்கோவா பெண்ணை. (14:2)

அரசன் யோவாபுவைப் பார்த்து என்ன கூறினார்?

- இதைச் செய்தவன் நீயே. போ! இளைஞன் அப்சலோமைக் கூட்டி வா என்றார். (14:21)

51. அப்சலோம் வந்ததும் அரசர் என்ன கூறினார்?

– அவன் தன் வீட்டுக்கே திரும்பட்டும். என் முகத்தில் அவன் விழிக்கக்கூ என்றார். (14:24)

52. அப்சலோமுக்கு எத்தனை பிள்ளைகள்?

– மூன்று ஆண்குழந்தைகளும், தாமார் என்ற பெயர் கொண்ட ஒரு மக (14:30)

53. அப்சலோம் யோவாவின் வயல்களை என்ன செய்தான்?

– தீ வைத்தான். (14:30)

54. அப்சலோம் இஸ்ரயேலரின் உள்ளங்களை எப்படி கவர்ந்து வந்தா

– யாரேனும் அவனை வணங்குவதற்காக நெருங்கினால் தன் கையை அவனை தழுவி முத்தமிடுவான். (15:5)

55. அப்சலோம் இஸ்ரயேல் குலங்களுக்கும் இரகசியத் தூதர்மூலம் என கட்டளையிட்டான்?

– நீங்கள் எக்காளம் முழக்கம் கேட்டவுடன் அப்சலோம் எபிரோனில் அ ஆகிவிட்டான் என்று முழங்குங்கள் என்று சொல்லி அனுப்பினான். (15:1

56. அரசரைப் பின் தொடர்ந்தவர்கள் யார்?

– அபியத்தார், சாதோக் என்ற குருவும். (15:24)

57. அகிதோபலும், அப்சலோமோடு சேர்ந்து கொண்டு சதி செய்த என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது அவர் என்ன செய்தார்?

– தாவீது! ஆண்டவரே உம்மை வேண்டுகிறேன். அகிதோபல் மூடத்தன ஆலோசனையை அளிப்பானாக! என்றார். (15:31)

58. கிழிந்த ஆடையோடும், புழுதி படிந்த தலையோடும் வந்து சந்தித்த யார்?

– அர்க்கியனான ஊசாய். (15:32)

59. இரண்டு கழுதைகளும் எதை சுமந்து நின்றன?

– இருநூறு அப்பங்கள், நூறு உலர்ந்த திராட்சை அடைகள், ஒரு தோ திராட்சை இரசம். (16:1)

60. சிமயி என்பவன் யார்?

– சவுலின் குடும்பத்தையும், வீட்டையும் சார்ந்த கேராவின் மகன்.

61. சிமயி என்ன செய்தான்?

– இரத்த வெறியனே! பரத்தை மகனே போ! போ என்று கூறி கல்லெறிந் (16:7)

அப்போது அபிசாய் ராஜாவைப் பார்த்து என்ன கூறினான்?

– இந்த செத்த நாய் என் ஆண்டவனாகிய அரசனை பழிப்பதா? இதோ நான் சென்று அவனது தலையை கொய்து எறிய எனக்கு அனுமதி தாரும் என்றான். (16:9)

அப்சலோமுக்கு தீங்கு நேரிடும்படி ஆண்டவர் என்ன செய்தார்?

– அகித்தோபலின் சிறந்த அறிவுரை ஏற்கபடாது போகச் செய்தார். (17:14)

அப்போது யோனத்தானும், அகிமாசும் எங்கே இருந்தார்கள்?

– என்ரொகேலில். (17:17)

அவர்கள் இருவரும் கிணற்றில் இறங்கிய போது வீட்டுக்காரி என்ன செய்தாள்?

– வீட்டுக்காரி கிணற்று முகப்பினை ஒரு போர்வையால் மூடி அதன்மேல் தானியக்களைப் பரப்பினாள். (17:19)

அகித்தோபல் என்ன செய்தான்?

– தன் அறிவுரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று கண்டதும் வீட்டிற்குச் சென்று நான்று கொண்டு இறந்தான். (17:25)

அப்சலோம் யோவாபுக்கு பதிலாக படைத்தலைவனாக யாரை ஏற்படுத்தினான்?

– அமாசாவை. (17:25)

அமாசாவின் மனைவி யார்?

– அபிகால் (17:25)

தாவீது மக்களை எத்தனை பிரிவுகளாகப் பிரித்தார்?

– மூன்று பிரிவுகளாக. (18:2)

தாவீது தம் வீரர்களை மூன்று பிரிவுகளாக பிரித்து யார், யார் தலைமையில் ஒப்படைத்தார்?

– 1. யோவாபின் தலைமையிலும், 2. அபிசாயின் தலைமையிலும், 3. இத்தாயின் தலைமையிலும். (18:2)

தாவீது எத்தனை பேருக்கு சமமாக மதிக்கப்பட்டார்?

– பத்தாயிரம் பேருக்கு. (18:3)

தாவீது யோவாபு அபிசாய், இத்தாய் ஆகியோருக்கு என்ன கட்டளையிட்டார்?

– என் பொருட்டு அந்த இளைஞன் அப்சலோமுக்குத் தீங்கிழைக்க வேண்டாம் எனக் கட்டளையிட்டார். (18:5)

அப்சலோம் எதன் மீது ஏறி வந்தான்?

– கோவேறு கழுதை மீது. (18:9)

74. அப்சலோமின் தலை எந்த மரத்தில் சிக்கிக் கொண்டது?

– கருவாலி மரத்தில். (18:9)

75. அப்சலோம் தலை கருவாலி மரத்தில் சிக்கிக் கொண்டதை கண் ஒருவன் யோவாபிடம் கூறியபோது யோவாபு என்ன கூறினார்?

– என்ன? நீ கண்டாயா? அவனை ஏன் நீ அங்கேயே வெட்டித் தரையி வீழ்த்தவில்லை? நான் உனக்குப் பத்து வெள்ளிக் காசுகளையும் ஒ கச்சையையும் தந்திருப்பேனே! என்று கூறினார். (18:11)

76. அதற்கு அம்மனிதன் யோவாபிடம் கூறியது என்ன?

– என் கையில் ஆயிரம் வெள்ளிக் காசுகளை நீர் நிறுத்துக் கொடுத்தாலு அரசரின் மகனுக்கு எதிராக நான் கையோங்க மாட்டேன் (18:2)

77. யோவாபு என்ன செய்தான்?

– யோவாபு தன் கையில் மூன்று ஈட்டிகளை எடுத்துச் சென்று உயிருட கருவாலி மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த அப்சலோமின் நெஞ்சி அவற்றைப் பாய்ச்சினார் (18:14)

78. அப்சலோமை வெட்டிக் கொன்றவர்கள் யார்?

– யோவாபுவின் படைக்கலன் தாங்கிய பத்துப்பேர் அப்சலோமைச் சூழ்ந் வெட்டிக் கொன்றனர் (18:15)

79. அப்சலோம் தன் நினைவுச் சின்னத்திற்கு என்ன பெயர் வைத்தான்

– அப்சலோம் தனக்கு ஒரு மகன் இல்லாத காரணத்தால் தன் பெய நினைவுகூறுவதற்காகத் தன் வாழ்நாளிலேயே தனக்கென்று அரச கணவாயில் ஒரு தூண் நிறுவியிருந்தான். அதற்கு அவன் தன் பெயரை வைத்தான் (18:18)

80. யோவாபு ஒரு கூசியனிடம் என்ன கூறினான்?

– நீ சென்று கண்டவை அனைத்தையும் அரசரிடம் சொல் என்று கூறினா (1:21)

81. அகிமாசு நானும் கூசியன் பின் ஓட எனக்கு அனுமதி தாரும் என் கேட்டதற்கு யோவாபுவின் பதில் என்ன?

– மகனே! இச்செய்தியைச் சொல்வதனால் உனக்கு எப்பரிசு கிடைக்கப்போவதில்லை. பின் ஏன் நீ ஓடவேண்டும் என்று பதில் கூறினா (18:22)

82. சாதோக்கின் மகன் அகிமாசின் ஓட்டத்தைப் போல் உள்ளது என் கூறிய காவலனின் உரைக்கு அரசர் கூறிய பதில் என்ன?

– "இவன் நல்லவன், இவன் நற்செய்தியோடு வருகிறான்" என்றார் (18:27)

அப்சலோம் இறந்த செய்தியைக் கேட்டு அரசர் என்ன செய்தார்?'

– என் மகன் அப்சலோமே! என் மகனே! என் மகன் அப்சலோமே! உனக்குப் பதில் நான் இறந்திருக்கலாமே! என் மகனே என்று கதறிக்கொண்டே அவர் வாயிலின் மாடியறைக்குச் சென்றார் (18:33)

அரசர் சிமயிக்கு என்ன கூறினார்?

– நீ சாகமாட்டாய் என்று அவனுக்கு ஆணையிட்டுச் சொன்னார் (19:23)

மெபிபோசேத்து அரசர் புறப்பட்டுச் சென்ற நாளிலிருந்து அவர் நலத்துடன் திரும்பிய நாள்வரை அவன் எப்படி இருந்தான்?

– தன் பாதங்களைக் கழுவவில்லை, தாடியைத் திருத்தவில்லை, தன் ஆடைகளை வெளுக்கவுமில்லை (19:24)

கிலயாதைச் சார்ந்த பர்சில்லாய்க்கு என்ன வயது?

– எண்பது வயது (19:32)

பர்சில்லாய் யாரை அரசருடன் செல்ல அனுமதித்தார்?

– கிம்காம் என்ற பணியாளனை 19:37

சேபா யாருடைய மகன்?

– பென்யமின் குலத்தைச் சார்ந்த பிக்ரியின் மகன் (20:1)

அமாசாவைக் கொன்றது யார்?

– யோவாபு (20:10)

முற்காலத்தில் அடிக்கடி சொல் வழக்கில் இருந்த பழமொழி எது?

– ஆபேலுக்குச் சென்று ஆலோசனை கேட்பார்களாக! (20:18)

தாவீதின் காலத்தில் எத்தனை ஆண்டுகள் தொடர்ந்து பஞ்சம் ஏற்பட்டது?

– மூன்று ஆண்டுகள் (21:1)

தாவீது ஆண்டவரின் திருவுளத்தை நாடிய போது கூறியது என்ன?

– கிபயோனியரைச் சவுல் கொலை செய்ததன் காரணத்திற்காக அவன்மீதும் அவன்வீட்டார் மீதும் இரத்தப்பழி உள்ளது என்றார் ஆண்டவர்.(21:8)

எதனால் ஆண்டவர் தாவீதின் வீட்டார் மீது இரத்தப்பழி உள்ளது என்றார்?

– கிபயோனியரைச் சவுல் கொலை செய்ததன் காரணத்திற்காக.(21:1)

கிபயோனியர் எந்த இனத்தைச் சார்ந்தவர்?

– எமோரியருள் எஞ்சியவர் (21:2)

95. கிபயோனியர் கழுவிலேற்ற எத்தனை பேரை ஒப்புவிக்கும்ப
கேட்டனர்?

– சவுலின் புதல்வர்களில் ஏழு பேரைக் கேட்டனர் (21:6)

96. தாவீது யாரை உயிருடன் தப்புவித்தார்?

– சவுலின் மகனான யோனத்தானுக்குப் பிறந்த மெபிபொசேத்தை அ
தப்புவித்தார். (21:7)

97. ஏழு பேரும் எந்த நாட்களில் கழுவிலேற்றப்பட்டனர்

– வாற்கோதுமை அறுவடை தொடங்கிய முதல் நாள்களி
கொலையுண்டார்கள். (21:9)

98. தாவீதைத் தாக்க இருந்த பெலிஸ்தியன் யார்?

– இஸ்பிபெனோபு என்னும் அரக்க இனத்தவன் (21:6)

99. ஆண்டவர் தாவீது அரசரிடம் யாரை அனுப்பினார்?

– தாவீதின் திருக்காட்சியாளராகிய இறைவாக்கினர் காத். (24:11)

100. ஆண்டவர் காலை முதல் மாலை வரை குறித்த நேரம் வ
இஸ்ரயேலின் மீது எதை அனுப்பினார்?

– கொள்ளை நோயை அனுப்பினார் (24:15)

101. எபூசியன் அரவுனாவின் போரடிக்கும் களத்தைத் தாவீது ஐம்
வெள்ளிக் காசுகளுக்கு வாங்கி அந்த இடத்தில் என்னென்
பலிகளைச் செலுத்தினார்?

– தாவீது அங்கே ஒரு பலிபீடம் எழுப்பி ஆண்டவருக்கு எரிபலிக
நல்லுறவுப் பலிகளும் செலுத்தினார். (24:25)

அரசர்கள் நூல்கள்

தாவீதுக்குப் பின் அரியணை ஏறியவர் யார்?

- சாலமோன்.

சாலமோன் தமது காலத்தில் செய்த முக்கிய நிகழ்ச்சி எது?

- எருசலேமில் முதன்முதல் ஆண்டவருக்கு அழகிய ஆலயம் அமைத்தது.

சாலமோனுக்குப் பின் பிரமாணிக்கமாயிருந்த அரசர்கள் யார்?

- ஆசா, யோசபாத்து, யோவாக, ஒசேயா, எசேக்கியா.

இந்நூலை வேறு என்ன பெயரிட்டு அழைப்பார்கள்?

- யூதா மற்றும் இஸ்ரயேல் அரசுகளின் தளர்ச்சியும் வீழ்ச்சியும் என்று அழைப்பர்.

இந்நூலுக்கு இணையான பகுதிகள் எங்குள்ளன?

- குறிப்பேடுகளில் உள்ளன.

இறைவாக்கினர் நூல்களில் எந்நூல்கள் அரசர் நூல் நிகழ்ச்சிகளை தெளிவுபடுத்துகிறது?

- எசாயா, எரேமியா, எசேக்கியேல், ஓசேயா, ஆமோஸ், மீக்கா போன்ற நூல்கள்.

இந்நூலில் வரும் முக்கிய இறைவாக்கினர்கள் யாவர்?

- எலியா, எலிசா ஆவர்.

சாலமோன் எவ்வாறு போற்றப்படுகிறார்?

- ஞானநூல்கள் அனைத்திற்கும் இவர் ஆசிரியர் எனப் போற்றப்படுகிறார்.

குறிப்பேடுகள் எதன் தொடர்ச்சியாக உள்ளன?

- அரசர் நூல்களின் தொடர்ச்சியாக உள்ளன.

1 அரசர்கள்

1. **அகித்து என்பவளுக்குப் பிறந்தவர்கள் யார்? யார்?**

   – அதோனியா, அப்சலோம் (1:5–6)

2. **நானே அரசனாவேன் என்று செருக்குடன் சொல்லிக் கொண்டவ யார்?**

   – அதோனியா (1:5)

3. **அப்சலோம் யார் யாரிடம் ஆலோசனை கேட்டான்?**

   – செரூயாவின் மகனான யோவாபு, குருவாகிய அபியத்தாருடனு ஆலோசனை செய்தான் (1:7)

4. **அதோனியாவின் பக்கம் சேராதவர்கள் யார் யார்?**

   – குரு சாதோக்கும், பெனாயாவும், இறைவாக்கினர் நாத்தான், சிமயி, இரே தாவீதின் மெய்க்காப்பாளர்களும். (1:8)

5. **இறைவாக்கினர் நாத்தான் சாலமோனின் தாயான பத்சேபாவை சந்தித்தது ஏன்?**

   –சாலமோன் உயிரையும், அவர் தாயின் உயிரையும் காத்துக்கொள் ஆலோசனை கூறி சந்தித்தார். (1:11–12)

6. **தாவீதுக்குப் பணிவிடை புரிந்த பணிப்பெண்ணின் பெயர்? ஊர் யாது**

   – சூனேம் என்ற ஊரைச் சார்ந்த அபிசாகு (1:5)

7. **தாவீதின் குரு யார்?**

   – சாதோக்கு (1:32)

8. **சாலமோனை அரசனாக்கியது யார்?**

   – தாவீது (1:30)

9. **சாலமோன் யாரால்? எங்கு அபிஷேகம் செய்யப்பட்டார்?**

   – குரு சாதோக்கும், இறைவாக்கினர் நாத்தானும், கீகோனில் (1:34)

10. **சாலமோன் எந்த எந்தப் பகுதிக்கு அரசனானான்?**

    – இஸ்ரயேல், யூதா (1:35)

11. **சாலமோன் அரசன் ஆனதை அதோனியாவிடம் கூறியது யார்?**

    – யோனத்தான் (1:43)

12. சாலமோன் அரசர் ஆனதைக் கேள்விப்பட்டவுடன் அஞ்சி என்ன செய்தான்?

– அதோனியா சாலமோனுக்கு அஞ்சி ஓடிப் பலிபீடத்தின் கொம்புகளைப் பற்றிக்கொண்டான் (1:50)

13. யார் யாரை உன்னை வாளால் கொல்லமாட்டேன் என்று கூறியது?

– தாவீது தன்னை மிகவும் இழிவான முறையில் பேசி தன்னைச் சபித்த சிமேயியைப் பார்த்துக் கூறினார் (2:8)

14. தாவீது எந்த நகரில் அடக்கம் செய்யப்பட்டார்?

– தாவீதின் நகரில் அடக்கம் செய்யப்பட்டார் (2:10)

15. தாவீது இஸ்ரயேலின்மீது ஆட்சி செலுத்திய காலம் எத்தனை ஆண்டுகள்?

– நாற்பது ஆண்டுகள் (2:11)

16. உம் நிலங்கள் இருக்கின்ற அனத்தோத்திற்குப் போய்விடும். நீர் சாகவேண்டியவர் என்று யார் யாரைப் பார்த்துக் கூறியது?

– சாலமோன், குரு அபியத்தாரை நோக்கிக் கூறியது (2:26)

17. யூதாவின் படைத்தலைவன் யார்?

– அமாசா (2:32)

18. சாலமோன் கடவுளிடம் என்ன கேட்டார்?

– ஞானம் (3:9)

19. பொருத்துக : 4:1–6

(1). அசாரியா – அரண்மனையின் மேற்பார்வையாளன்

(2). எலிகோரேபு – குரு

(3). யோசபாத்து – படைத் தலைவன்

(4). பெனயா – அரசரின் ஆலோசகன்

(5). சாபூது – தலைமைச் செயலர்

(6). அகிசார் – அமைச்சன்

20. இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டில் இருந்து எந்த ஆண்டு வெளியேறினர்?

– நானூற்று எண்பதாம் ஆண்டு (480) (6:1)

கோடிட்ட இடத்தை நிரப்புக:

21. சாலமோன் தம் அரண்மனை முழுவதையும் கட்டி முடிக்க ------ ஆண்டுகள் ஆயின.

– பதின்மூன்று. (7:1)

22. லெபனோனின் வானம் என்ற மாளிகை------ கட்டப்பட்டது.

– சாலமோனால். (7:2)

23. அரண்மனைத் தூண்களுக்கு ------, ------ என்று பெயர் இட்டார்.

– யாக்கின், யோவாசு. (7:21)

24. அரசர் சாலமோன் கலிலேயா நாட்டில் உள்ள ------ ஊர்களை ஈராமுக்கு வழங்கினார்.

– இருபது. (9:11)

25. சாலமோன் கொடுத்த நகருக்கு ஈராம் ------ என்று பெயர் இட்டார்

– காபூல். (9:13)

26. சாலமோன் தன் கப்பல்களை ------ அருகில் உள்ள ------ கட்டினார்.

– ஏலோத்திற்கு, எட்சியோன் கெபேரில். (9:26)

27. ஈராம் ஊழியர்கள் ------ என்னும் இடத்திற்குப்போய் பொன்னை சாலமோன் அரசருக்குக் கொடுத்தான்.

– ஒபீர் .

28. சாலமோன் உண்மையான கடவுளுக்கு எதிராக வழிபட்ட வேற்று தெய்வங்கள் எவை?

– சீதோனியரின் தேவதையான அஸ்தரேத்தையும், அம்மோனியரின் அருவருப்பான மில்க்கோமையும் வழிபடலானார். (11:5)

29. சாலமோன் கொல்லத் தேடிய எரோபவாம் எந்த நாட்டிற்குத் தப்பி ஓடினான்? எந்த மன்னனிடம் தஞ்சம் புகுந்தான்?

– எகிப்து நாட்டிற்குத் தப்பி ஓடி சீசாக்கிடம் தஞ்சம் புகுந்தான் (11:40)

30. சாலமோன் இறந்தபின் இஸ்ரயேலருக்கு அரசனாக யாரை நியமித்தார்?

– சாலமோனின் மகன் ரெகபெயாம் (11:43)

31. கடவுளின் இறையடியார் யார்?

– செமாயா என் இறையடியார் (12:22)

32. பொன் கன்றுக் குட்டிகளைச் செய்து, இஸ்ரயேலரே! உங்களை எகிப்து நாட்டில் இருந்து மீட்டு வந்த தெய்வங்கள் இவற்றை வணங்குங்கள் என்ற சொன்னது யார்?

– அரசன் எரோபவாம் (12:28)

33. ரெகபெயாம் ஆட்சியில் எருசலேம் ஆலயத்திலும் அரண்மனையிலும் கொள்ளையடித்துச் சென்ற மன்னன் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவன்?

– எகிப்திய நாட்டைச் சேர்ந்த மன்னன் சீசாக் ஆவார் (14:25)

34. எந்த குடும்பத்தாருக்கு ஏகூ இறைவாக்கினர் வழியாக ஆண்டவரின் இறைவாக்கு உரைக்கப்பட்டது?

– பாசாவுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் (16:7)

35. யாருக்கு, எங்கு ஒளிந்திருக்கையில் காகங்கள் உணவளித்தன?

– எலியாவுக்கு, கெரீத் ஓடையில்

36. யார் வழியாக ஆண்டவர் உரைத்த வாக்கின்படி பானையிலிருந்து மாவும், கலயத்திலிருந்த எண்ணையும் தீரவில்லை?

– எலியா வழியாக (17:16)

37. எலியா இறந்த யாரை உயிர் பெற்று எழச் செய்தார்?

– சாரிபாத்தில் உள்ள ஒரு கைம்பெண்ணின் மகனை (17:22)

38. எலியா யாரிடம் சபதம் இட்டு ஆண்டவரே உண்மைக் கடவுள் என்று நிரூபித்துக் காட்டினார்?

– பாகால் பொய்வாக்கினரிடம் (18:38–39)

39. எங்கு உறங்கிய எலியாவுக்கு யார் தட்டி எழுப்பி உணவு கொடுத்தது?

– சூரைச் செடியின் அடியில், வானதூதர் (19:5)

40. உடன்படிக்கை யாருக்கும் யாருக்கும் இடையில் நடைபெற்றது?

– இஸ்ரயேலின் அரசன் ஆகாபுக்கும், சிரியாவின் அரசன் பெனதாதுக்கும் இடையே நடைபெற்றது (20:34)

41. ஆகாபுக்கு ஆண்டவர் எலியா வழியாக உரைத்த வாக்கு யாது?

– ஆண்டவர் கூறுகிறார் நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கிய அதே இடத்தில் அவை உனது இரத்தத்தையும் நக்கும். (21:9)

42. ஆண்டவரின் திருவாக்கினை யார் மூலமாகக் கேட்டறிந்துகொண்டனர் ?

– மீக்காயா. (22:8)

2 அரசர்கள்

1. எக்ரோனின் வேற்று தெய்வமாகிய பாகால் செபூபிடம் குறி கேட்டு வரச் செய்த சமாரியாவின் அரசன் யார்?

– அகசியா அரசன். (1:2)

2. அகசியா அரசன் படுக்கையிலேயே செத்துப் போவான் என்ற எலியாவை அழைத்துவரச் சென்ற ஐம்பது வீரர்களுக்கும் அதன் தலைவனுக்கும் என்ன நேர்ந்தது?

– எலியா வானினின்று நெருப்பு இறங்கிவந்து உன்னையும் உன்னோடும் இருக்கும் ஐம்பது வீரர்களையும் சுட்டெரிக்கட்டும் என்றார். (1:10)

3. சுழற்காற்றில் விண்ணகத்துக்குச் சென்ற இறைவாக்கினர் யார்?

– எலியா இறைவாக்கினர். (2:11)

4. யோர்தான் ஆற்று நீரைத் தன் போர்வையால் அடித்துத் தண்ணீரை இருபுறமும் பிரித்த இறைவாக்கினர் யார்?

– எலியா. (2:8)

5. வழியில் சிறுவர்கள் சிலர் வழுக்கைத் தலையா போ! வழுக்கைத் தலையா போ! என்று எந்த இறைவாக்கினரை ஏளனம் செய்தனர்?

– எலிசா இறைவாக்கினரை. (2:23)

6. மலடியாக இருந்த சூனேம் நகர் பணக்காரப் பெண்ணிற்கு பிள்ளை பெறும் வரம் கொடுத்த இறைவாக்கினர் யார்?

– எலிசா இறைவாக்கினர் (4:16)

7. சிரிய மன்னனின் படைத்தலைவனான நாமான் எந்த ஆற்றில் மூழ்கியெழ அவர் தொழுநோய் நலமடைந்தது?

– யோர்தானில் ஏழுமுறை மூழ்கியெழ அவர் நலம் பெற்றார் (5:14)

8. கேகசி நாமானிடம் பலவகைச் செல்வங்களைப் பெற்றான் அதை எலிசாவிடம் மறைத்தான் அதனால் அவன் பெற்ற தண்டனை என்ன?

– நாமானின் தொழுநோய் உன்னையும், உன் வழிவந்தோரையும் என்றென்றும் பீடிக்கும் என்றார் (5:27)

9. ஒருவன் உத்திரம் வெட்டிக்கொண்டிருந்தபோது கோடரி கழன்று தண்ணீரில் விழுந்தது யாரால் எப்படி எடுத்தார்கள்?

– எலிசா ஒரு கம்பை வெட்டி அங்கு எறியவே கோடரியும் மிதக்கத் தொடங்கியது (6:6)

எலிசா இறைவாக்கினருள் ஒருவரை அனுப்பி இஸ்ரயேலுக்கு அரசனாக யாரை திருப்பொழிவு செய்யச்சொன்னார்?

- ஏகூவை (9:6)

அமட்சியா போரிட்டு உப்புப் பள்ளத்தாக்கில் பதினாயிரம் ஏதோமியரைக் கொன்று சேலாவைக் கைப்பற்றி அதற்கு என்ன பெயரிட்டான்?

- யொக்தியேல் (14:7)

எருசலேமில் 52 ஆண்டுகள் ஆட்சி செய்த அசரியாவின் தாயின் பெயர் என்ன?

- எக்கொலியா. (15:2)

யூதா அரசன் அமட்சியாவின் மகன் பெயர் என்ன?

- அசரியா. (15:1)

எரொபவாமின் மகன் செக்கரியா சமாரியாவில் இருந்து கொண்டு இஸ்ரயேலை எவ்வளவு காலம் ஆண்டான்?

- ஆறு மாதம் ஆண்டான். (15:8)

சமாரியாவை ஒரு மாதம் ஆட்சி செய்த அரசன் யார்?

- சல்லூம் (15:13)

உன் மைந்தர் நான்கு தலைமுறைகளுக்கு இஸ்ரயேலின் அரியணையில் வீற்றிருப்பர் என்று யாருக்கு ஆண்டவர் கூறிய வாக்கு நிறைவேறிற்று?

- ஏகூவுக்கு. (15:12)

சல்லூமை வெட்டிக் கொன்றவன் யார்?

- காதி என்பவனின் மகன் மெனகேம். (15:14)

அசீரியா மன்னன் பூல்லுக்கு இஸ்ரயேலின் அரசன் மெனகேம்பூல் அரசனின் ஆற்றலினால் தன் அரசை உறுதியாக்கிக் கொள்ளும்பொருட்டு என்ன கொடுத்தான்?

- நாற்பதாயிரம் வெள்ளி கொடுத்தான். (15:19)

இரமலியாவின் மகனும் படைத்தலைவனுமான பெக்கா சமாரியாவின் அரண்மனைக் கோட்டைக்குள் எத்தனை பேரைக் கொன்றான்?

- சமாரியா அரசன் மெனகேம், அர்கோபு, அரியே என்பவர்களையும் கொன்று அரசன் ஆனான். (15:25)

யூதாவின் அரசன் அசரியாவின் மகன் பெயர் என்ன?

- யோத்தாம் (15:32)

21. சாதோக்கின் மகள் [அல்லது] யோத்தாமின் தாய் யார்?

– எருசா. (15:33)

22. யோத்தாமின் மகன் யார்?

– ஆகாசு. (16:1)

23. ஆகாசுக்கு எதிராக முற்றுகையிட்டவர்கள் யார்?

– சிரியா மன்னன் ரேட்சீனும், இஸ்ரயேலின் அரசன் பெக்காவும். (16:5)

24. ஆகாசு தூது அனுப்பிய அசீரிய மன்னன் யார்?

– திக்லத் பிலேசரிடம் தூது அனுப்பினான். (16:7)

25. அரசன் ஆகாசு தமஸ்குவிலிருந்து அனுப்பிய பலிபீடக் கட்டமைப்பின் எல்லா குறிப்புகளுக்கு ஏற்பக் கட்டிமுடித்த குரு யார்?

– குரு உரியா. (16:11)

26. ஆகாசு ஆண்டவர் திருமுன் இருந்த என்ன பலிப்பீடத்தை அகற்றி தன் பலிப்பீடத்திற்கும், ஆண்டவரின் இல்லத்திற்கும் இடையே வடபுறத்தில் வைத்தான்?

– வெண்கலப் பலிப்பீடத்தை (16:14)

27. ஒசேயா யாருக்கு அடிபணிந்து கப்பம் செலுத்தி வந்தான்?

– அசீரிய மன்னன் சல்மனேசர். (17:3)

28. அசீரிய மன்னன் சல்மனேசர் சமாரியாவை கைப்பற்றி இஸ்ரயேலரை எங்கெங்கு நாடு கடத்தினான்?

– அலகிலும், கோசோனின் ஆபோர் நதிக்கரையிலும், மேதியர் நகர்களிலும் குடியேற கட்டளை இட்டான். (17:6)

29. ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்து அவருக்குச் சினமூட்டுமாறு தங்களையே விற்றுவிட்ட இஸ்ரயேலரை ஆண்டவர் என்ன செய்தார்?

– இஸ்ரயேலர் வழி மரபினர் அனைவரையும் கைவிட்டு, அவர்களை ஒடுக்கி, கொள்ளைக்காரரின் கையில் ஒப்புவித்து, தமது முன்னின்று தள்ளிவிட்டார். (17:20).

30. ஆண்டவரை விட்டு விலகும்படி இஸ்ரயேலரை பெரும் பாவத்திற்கு உள்ளாக்கி இருந்த அரசன் யார்?

– நெபாத்தின் மகன் எரொபவாம். (17:21)

31. [i] பாபிலோனி நாட்டினரின் சிலையின் பெயர் என்ன?

– சுக்கோத் பெனோத்து. (17:30)

[ii] கூத்தியர் நாட்டினரின் சிலையின் பெயர் என்ன?

– நேர்கால் (17:30)

(iii) ஆமாத்தியர் நாட்டினரின் சிலையின் பெயர் என்ன?

– அசமா. (17:30)

(iv) அவ்வியர் நாட்டின் சிலையின் பெயர் என்ன?

– நிபுகசு, தர்த்தாக்கு. (17:31)

32. செக்கரியாவின் மகள் அல்லது எசேக்கியாவின் தாய் யார்?

– அபி. (18:2)

33. மோசேயின் வெண்கலப் பாம்பிற்கு அன்று இஸ்ரயேல் மக்கள் தூபங்காட்டி வந்த நிகழ்ச்சிக்கு என்ன பெயர்?

– நெகுஸ்தான் என்று அழைக்கப்பட்டு வந்தது. (18:4)

34. யூதா அரசன் எசேக்கியா இலாக்கியாவிலிருந்து தூதனுப்பி நான் பாவம் செய்துவிட்டேன், எனவே என்னை விட்டுத் திரும்பிச் செல்லும் என்று எந்த அரசனிடம் கூறினான்?

– அசீரிய அரசன் சனகெரிபு. (18:3)

35. அசீரிய மன்னன் சனகெரிபு பெரும்படையுடன் எருசலேமுக்கு அனுப்பிய மூவர் யார்?

–தர்த்தானையும், இரப்சாரிசையும், இரப்சாக்கேயையும் அனுப்பினான். (18:17)

36. யூத அரண்மனையின் மேலாளன் யார்?

– இல்க்கியாவின் மகன் எலியாக்கிம். (18:18)

37. யூத அரண்மனையின் எழுத்தன், பதிவாளன் யார் யார்?

– எழுத்தாளன் செபுனாவு, பதிவாளன் ஆசாபின் மகன் யோவாகு ஆவான். (18:18)

38. எசேக்கிய ஆட்சி காலத்தில் இருந்த இறைவாக்கினர் யார்?

– ஆமோசின் மகன் எசாயா. (19:2)

39. அசீரிய அரசன் சனகெரிபுக்கு எதிராக படைதிரட்டிக் கொண்டு வந்த அரசன் யார்?

– எத்தியோப்பிய மன்னன் திராக்கா. (19:9)

40. அசீரியரின் பாளையத்தில் இலட்சத்து எண்பத்தையாயிரம் பேரைக் கொன்றவர் யார்?

– ஆண்டவரின் வானதூதர். (19:35)

41. நினிவேயில் சனகெரிபு வழிபாடு செய்த தெய்வத்தின் பெயர் என்ன?

– நிஸ்ரோக். (19:37)

42. நோயுற்று சாகும் தருவாயில் இருந்த அரசன் யார்?

– எசேக்கியா (20:1)

43. அரண்மனை முற்றத்தின் நடுப்பகுதியைக் கடப்பதற்குள் ஆண்டவரது வார்த்தை யாருக்கு வெளியாயிற்று?

– எசாயாவுக்கு. (20:4)

44. அரண்மனைப் பொருள்கள் அனைத்தும் உன் மூதாதையர் சேர்த்து வைத்த யாவும் எந்த நாட்டிற்கு போகும் என்று யார் யாரிடம் சொன்னது?

– எசாயா இறைவாக்கினர், பாபிலோன் நாட்டிற்கு, எசேக்கியா அரசனிடம் கூறினார். (20:16–17)

45. மனாசே அரசனான போது அவனுக்கு வயது எத்தனை? அவன் எருசலேமை எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?

– மனாசேவுக்கு வயது பன்னிரண்டு, ஆட்சி செய்த ஆண்டுகள் ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஆகும். (21:1)

46. மனாசே எங்கு புதைக்கப்பட்டான் அதன் பெயர் என்ன?

– ஊசாப் பூங்கா என்ற இடத்தில் புதைக்கப்பட்டான். (21:8)

47. ஆமோன் அரசனின் மகன் பெயர் என்ன?

– யோசியா. (21:24)

48. யோசியா அரசனின் தாய் பெயர் என்ன?

– எதிதா. (22:2)

49. ஆண்டவரின் இல்லத்தில் ஒரு சட்டநூலைக் கண்டெடுத்தேன் என்று சொல்லியவர் யார்?

– தலைமைக் குரு இல்க்கியா ஆவார்.

50. யூத அரசன் ஆகாசின் மாடியறையில் உள்ள பலிப்பீடங்கள், மனாசேயால் கட்டப்பட்ட பலிபீடங்கள் இவைகள் யாரால் இடிக்கப்பட்டு எந்த நீரோடையில் கொட்டப்பட்டது?

– யோசியா அரசன், கிதரோன் நீரோடையில் கொட்டினார்.

51. யோசியா அரசன் ஆட்சியேற்ற பதினெட்டாம் ஆண்டில் கொண்டாடப்பட்ட விழா எது?

– ஆண்டவரின் பாஸ்கா விழா கொண்டாடப்பட்டது. (23:23)

52. யோசியா அரசன் பார்வோன் அசீரிய அரசனை எதிர்த்துப் போரிட எந்த ஆற்றை வந்தடைந்தான்?

– யூப்பிரத்தீசு ஆற்றை. (27:29)

53. பாபிலோன் அரசன் நெபுகத்னேசருக்கு யோயாக்கிம் எத்தனை ஆண்டுகள் அடிபணிந்திருந்தான்?

–மூன்று ஆண்டுகள். (24:1)

எருசலேமுக்கு எதிராக படையெடுத்து வந்து பாளையம் இறங்கி அதைச் சுற்றிலும் முற்றுகைத் தளம் எழுப்பிய மன்னன் யார்?

- பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசர் (25:1)

பாபிலோன் மன்னனின் பணியாளனும், மெய்க்காப்பாளர் தலைவனுமானவன் யார்?

- நெபுசரதான். (25:8)

நெபுகத்னேசர் யூதா நாட்டில் தான் சிறைபிடித்து வைத்திருந்த மக்களுக்கு ஆளுநனாக யாரை நியமித்தான்?

- கெதலியாவை. (25:22)

யோயாக்கின் தனக்கு பதிலாக தன் சிறிய தந்தை மத்தனியாவை அரசனாக்கி அவனுக்கு இட்ட புதிய பெயர் என்ன?

- செதேக்கியா. (24:17)

நெபுகத்னேசர் எருசலேமை ஆண்ட செதேக்கியா அரசேற்ற பதினோராம் ஆண்டு நான்காம் மாதம் ஒன்பதாம் நாள் நகரில் என்ன ஏற்பட்டது?

- பஞ்சம் கடுமை ஆயிற்று.

1 குறிப்பேடு

1. எந்த நூலில் விடப்பட்ட கருத்துகள், நிகழ்ச்சிகள் குறிப்பேட்டில் தரப்பட்டுள்ளது?

   – அரசர் நூலில் விடப்பட்டவை.

2. இஸ்மயேலின் தலைமகன் பெயர்?

   – நெபயோத்து. (1:29)

3. ஈசாக்கின் இரு மைந்தர்களின் பெயர்கள்?

   – ஏசா, இஸ்ரயேல். (1:34)

4. தாவீதின் பாட்டனார் பெயர்?

   – ஓபேது. (2:12)

5. தாவீதுடைய தலைமகன் பெயர்?

   – அம்னோன். (3:1)

6. பத்சூவா பெற்றெடுத்த நான்கு மகன்களில் தலைசிறந்த மகன் யா

   – சாலமோன் (3:5)

7. சாலமோனின் மகன் பெயர்?

   – இரகபெயாம். (3:10)

8. ஏலா நான் வேதனையுற்று அவனைப் பெற்றேன் என்று சொல் அவனுக்கு என்ன பெயரிட்டான்?

   – யாபேக. (4:9)

9. இஸ்ரயேலரின் தலைமகன் யார்?

   – ரூபன். (5:1)

10. பெயேரா ரூபனின் தலைவன் அவனை சிறைபிடித்துச் செ மன்னன் யார்?

    – அசீரிய மன்னன் தில்கத் பில்னேசர். (5:6)

11. லேவியரான எலயாசரின் மகன் யார்?

    – பினகாக. (6:4)

12. தீங்கு தனது வீட்டிற்கு வந்தடைந்தது என்று யார் தன் மகனுக்கு என் பெயரிட்டான்?

    – எப்ராயிம் தன் மகனுக்கு பெரியா என்று பெயரிட்டான். (7:23)

13. தீரச் செயல்கள் பல புரிந்த பெனாயா யாருடைய மகன்?

    – வலிமை மிக்கவருமான யோயாதாவின் மகன். (11:22)

தாவீதுக்கு உதவி புரிய வந்தவர்களில் யாரை ஆவி ஆட்கொண்டது?

- அமாசாயை ஆவி ஆட்கொண்டது.

கடவுளின் சினத்திற்கு ஆளான உசாவை கடவுள் சாகடித்தார்; அந்த இடத்திற்கு தாவீது என்ன பெயரிட்டான்?

- பேரேட்ஸ் உசா என்று பெயரிட்டான். (13:11)

யாருடைய வீட்டில் கடவுளின் பேழை மூன்று மாதம் இருந்தது?

- ஓபேது எதோம் வீட்டில் (13:14)

ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழை தாவீது நகரை அடைந்த போது எந்த அரசனின் மகள் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். அவள் பெயர் என்ன?

- அரசன் சவுலின் புதல்வி மீக்கால். (15:29)

ஆண்டவரின் பேழை முன் வழிபாடு நடத்தவும், நன்றி செலுத்தவும், அவரைப் போற்றவும் லேவியரில் யார் தலைவனாகவும், துணைத்தலைவனாகவும் நியமிக்கப்பட்டனர்?

- தலைவன் ஆசாபு துணைத்தலைவன்– செக்கரியா. (16:5)

ஆண்டவரின் திருப்பேழையின் முன் இடைவிடாது எக்காளம் ஊத நியமிக்கப்பட்டவர்கள் யார் யார்?

- பெனாயா, யகசியேல் ஆகிய குருக்கள். (16:6)

சோபா மன்னன் அதரேசர் தன் ஆட்சியை பலப்படுத்தும் நோக்குடன் யூப்பிரத்தீசு நதியோரம் செல்கையில் யாரால் எதன் அருகில் தாக்கப்பட்டு புறமுதுகு இட்டு ஓடினான்?

- அரசன் தாவீது. காமாத்தின் அருகே (18:3)

காட்சியாளர் காத்து. ஆண்டவர் கூறுவது இதுவே. நீயே தேர்ந்து கொள், மூன்று ஆண்டுப் பஞ்சமா? உன் எதிரியின் வாளுக்கு அஞ்சி மூன்று மாதம் அவர்கள் முன் ஓடுவதா எதை தேர்ந்து கொள்கிறாய் என்று கேட்டார். அதற்கு தாவீதின் பதில் என்ன?

- தாவீது கூறியது ஆண்டவர் கையில் நான் சரண் அடைவதே மேல்! ஏனெனில் அவர் மிகவும் இரக்கம் உள்ளவர். மனிதர் கையில் நான் அகப்படக் கூடாது என்றார்.

யாருடைய தந்தையாகிய நாகாசு எனக்கு அன்பு காட்டியது போல யார் நாகாசு மகனுக்கு அன்பு காட்டுவதாக கூறினார்?

- அனூன், தாவீது (19:20)

தாவீது எது தொடங்கி எதுவரை வாழும் இஸ்ரயேல் மக்கள் தொகையை கணக்கிட்டு வரச் சொன்னான்?

- பெயேர்செபா தொடங்கி, தாண்வரை. (21:2)

24. யோவாபு எந்த இரு குலத்தாரை மட்டும் கணக்கிடவில்லை?

– லேவி, பென்யமின் குலத்தாரை. (21:6)

25. எந்த இறைவாக்கினர் ஆண்டவரின் எத்தனை காரியங்களை தாவீ முன் வைத்தார்?

– இறைவாக்கினர் காத்து, மூன்று காரியங்களை. (21:9)

26. எருசலேமை அழிக்க ஆண்டவர் அனுப்பிய தூதர் நக அழிக்கும்போது யாருடைய களத்தருகே நின்று கொண்டிருந்தார்?

– எபூசியனான ஓர்னானின் களத்தில். (21:15)

27. ஆண்டவர் எபூசியனான ஓர்னானின் களத்தில் தாவீதை என் எழுப்புமாறு கூறினார்?

– ஒரு பலிபீடம் எழுப்புமாறு கூறினார். (21:18)

28. நெத்தனியேலின் மகனும், லேவியனும் எழுத்தாளனுமானவன் யார்?

– செமாயா (24:6)

29. ஆண்டின் ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு பிரிவினர் மாறி, மாறி அரசருக்கான பணியில் பங்கேற்றனர். முதல் மாதத்தில் முதல் பிரிவில் பணிபுரிந்தது யார்?

– சப்தியேலின் மகன் யாசோபியாம். (27:2)

30. தாவீதுக்குப் பதிலாக இரண்டாம் முறையாக யாரை அரசனாகவும், தலைவராகவும், யாரை குருவாகவும் திருப்பொழிவு செய்தனர்?

– தாவீது மகன் சாலமோனை அரசராகவும், தலைவராகவும் குருவாக சாதோக்கை திருப்பொழிவு செய்தனர். (29:22)

31. ஈசாயின் மகன் தாவீது இஸ்ரயேலில் ஆட்சி செய்த ஆண்டுகள் எத்தனை?

– நாற்பது ஆண்டுகள். (29:27)

32. ஆண்டவர் திருமுன்னிலையில் எப்போதெல்லாம் வழிபாடு செய்ய வேண்டும் என்று தாவீது கூறினார்?

– ஒவ்வொரு காலையிலும், மாலையிலும் ஆண்டவருக்கு நன்றி கூறவும், போற்றவும் வேண்டும். [23:30]

33. தாவீது தனது இல்லப்பணிக்காக, அரசுப் பணிக்காக, கோவில் வழிபாட்டுப் பணிக்காக அலுவலர்களை லேவியர் குடும்பத்தில் எத்தனைப் பிரிவாகப் பிரித்தார்?

– 3 பிரிவாக 1.கேர்சோன், 2. கோகாத்து. 3. மெராரி என்று பிரித்தார். (22:6)

2 குறிப்பேடு

1. ஆண்டவரின் திருக்கூடாரத்திற்குமுன் வெண்கலப் பலிபீடம் யாரால் கட்டப்பட்டது?

   – பெட்சலேல் (1:5)

2. சாலமோன் எதன் மேட்டிலிருந்து புறப்பட்டு வந்து இஸ்ரயேலை ஆட்சி செய்தார்?

   – கிபயோனிலிருந்த தொழுகை மேட்டிலிருந்து (1:13)

3. சாலமோன் தன் தூதுவரை யாரிடம் அனுப்பி ''என் தந்தை தாவீது வாழும்படி ஒரு மாளிகை கட்ட நீர் கேதுரு மரங்களை அனுப்பி வைத்தீரே! அவருக்குச் செய்ததுபோலவே எனக்கும் செய்தருளும் என்றான்?

   – தீர் மன்னன் ஈராமிடம் (2:3)

4. சாலமோனுக்கு அனுப்பப்பட்ட கைத்தொழில் நிபுணன் பெயர் என்ன?

   – ஈராம் அபி (2:13)

5. சாலமோன் எந்த மலைமேல் ஆண்டவருக்கு ஓர் இல்லம் எழுப்பத் தொடங்கினார்?

   – மோரியா மலைமேல் (3:1)

6. எந்த நாளில் ஆண்டவரின் இல்ல வேலையைத் தொடங்கினார்?

   – நான்காம் ஆண்டு, இரண்டாம் மாதம், இரண்டாம் நாள் (3:2)

7. வலப்பக்கத் தூணுக்கு —— என்றும் இடப்பக்கத் தூணுக்கு —— என்றும் பெயரிட்டார்?

   – யாக்கீன், போவாசு (3:17)

8. கோவிலுக்குள் பேழை நிறுவப்படுகையில் எத்தனை ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதிக்கொண்டிருந்தனர்?

   – நூற்றிருபது (5:12)

9. என்ன சொல்லி ஆண்டவரைப் புகழ்ந்தனர்?

   – ஏனெனில் அவர் நல்லவர்; அவரது பேரன்பு என்றென்றும் உள்ளது (7:6)

10. 20 ஆண்டுகளுக்குப்பின் சாலமோன் எந்த நாட்டைக் கைப்பற்றினான்?

   – அமத்சோபா (8:3)

11. பாலைவனத்தில் ----- நகரையும் ----- பகுதியின் கிடங்கு நகர்கள் அனைத்தையும் எழுப்பினார்?

– தத்மோர், ஆமாத்து (8:4)

12. எந்த நகர்களை மதில்கள், கதவுகள் தாழ்ப்பாக்கள் கொண்ட அரண்சூழ் நகர்களாக அமைத்தார்?

– மேலை பெத்கோரோன், கீழைப் பெத்கோரோன் (8:5)

13. எந்த நாட்டு அரசி சாலமோனின் புகழைப்பற்றிக் கேள்விப்பட்டு வந்தாள்?

– சேபா (9:1)

14. சேபா நாட்டு அரசி எதற்காக சாலமோனைப் பார்க்க வந்தார்?

– சாலமோனின் ஞானத்தைச் சோதிக்க (9:1)

15. கேடயங்களை எல்லாம் அரசர் ----- என்ற அரச மாளிகையில் வைத்தார்.

– லெபனோனின் வனம் (9:16)

16. சாலமோனின் பிற செயல்கள் இறைவாக்கினரான ---- குறிப்பேட்டிலும் சிலோவியராகிய ---- இறைவாக்கிலும் உள்ளன.

– நாத்தான், அகியாவின் (9:29)

17. நெபாற்றின் மகன் எரொபவாமைப்பற்றி எந்த நூலில் உள்ளது?

– இத்தோ (9:29)

18. இஸ்ரயேலர் எல்லாரும் ரெகபெயாமை அரசனாக்க எந்த இடத்தில் கூடினர்?

– செக்கேமில் (10:1)

19. ரெகபெயாம் யாரை இஸ்ரயேல் மக்களிடம் அனுப்பிவைத்தான்?

– அதோராமை (10:18)

20. ரெகபெயாம் யாரை மணந்துகொண்டான்?

– அபிகயிலுக்குப் பிறந்த மகலாத்து (11:18)

21. இரண்டாம் முறையாக யாருடைய மகளை ரெகபெயாம் மணந்து கொண்டான்?

– அப்சலோமின் மகள் மாக்காவை (11:20)

22. எந்த இறைவாக்கினர் ரெகபெயாமிடம் வந்தார்?

– செமாயா (12:5)

23. யாருடைய ஆட்சியின்போது நாடு பத்தாண்டு அமைதி பெற்றிருந்தது?

- ஆசா (14:1)

24. ஆசாவின் ஆட்சிக் காலத்தில் யார்மேல் கடவுளின் ஆவி இறங்கியது?

- ஓதேத்தின் மகன் அசரியாவின்மேல் (15:1)

25. அருவருப்பான —— ஒன்றை ஆசாவின் தாய் மாக்கா செய்திருந்தாள்?

- அசேராக் கம்பம் (15:16)

26. ஆசா ஆட்சியேற்ற முப்பத்தாறாம் ஆண்டில் இஸ்ரயேலின் அரசன் —— யூதா நாட்டை எதிர்த்து வந்தான்?

- பாசா (16:1)

27. ஆலயத்தில் இருந்த பொன்னையும் வெள்ளியையும் எடுத்துத் தமஸ்குவில் வாழ்ந்த —— என்ற சிரியா மன்னனுக்கு அனுப்பி வைத்தான்.

- பெனதாது (16:2)

28. ஆசாவின் ஆட்சிக்குப் பின் யார் ஆட்சியேற்றது?

- ஆசாவின் மகன் யோசபாத்து (17:1)

29. இஸ்ரயேலின் அரசனான ஆகாபு யோசபாத்தை நோக்கி —— எதிர்க்க என்னோடு வருவீரா என்று கேட்டான்?

- இராமோத்து, கிலயாதை (18:3)

30. இஸ்ரயேலின் அரசன் ஆகாபு எனக்குச் சாதகமாய் அன்று, பாதகமாகவே எப்பொழுதும் இறைவாக்கு உரைக்கிறான் என்று யாரைக் கூறினான்?

- இம்லாவின் மகன் மீக்காயா (18:7)

31. பொய்வாக்கினர் ஒருவன் இரும்புக் கொம்புகளைச் செய்து இவற்றால் அழித்து விடுவீர் என்றான் யார் அவன்?

- செதேக்கியா (18:10)

32. இறைவாக்கினரான மீக்காயாவின் கன்னத்தில் அறைந்தது யார்?

- செதேக்கியா (18:23)

33. மீக்காயா எதனால் அறையப்பட்டார்?

- ஆண்டவரின் ஆவியைப்பற்றிப் பேசியதால் (18:23)

34. புகழ்ச்சிப் பள்ளத்தாக்கு என ஏன் அழைக்கப்படுகிறது?

- ஆண்டவரைப் புகழ்ந்து பாடினதால் (20:26)

35. யூதாவின் அரசன் யோசபாத்து தீய வழியில் நடந்த எந்த அரசனு சேர்ந்துகொண்டான்?

– இஸ்ரயேலின் அரசன் அகசியாவுடன் (20:35)

36. யோசபாத்துக்குப் பின் யார் ஆட்சி செய்தார்?

– யோராம் (21:5)

37. யோராமின் எந்தப் பிள்ளையைத் தவிர பெலிஸ்தி கடத்திச்சென்றனர்?

– கடைசி மகனான யோவாகாசைத் தவிர (1:17)

38. யோராமுக்குப் பதிலாக யாரை அரசனாக்கினார்கள்?

– இளைய மகன் அகசியாவை (22:1)

39. அகசியாவின் தாய் பெயர் என்ன?

– அத்தலியா (22:10)

40. அத்தலியா அரச குடும்பத்தாரைக் கொன்றழித்தபோது யோவா யார் மறைத்து வைத்தனர்?

– யோசபியாத்து (22:11)

41. யோவாசு எத்தனை வயதில் அரசன் ஆனான்?

– ஏழு (24:1)

42. யோவாசின் தாய் பெயர் என்ன?

– சிபியா (24:1)

43. யோயாதா இறந்தபோது எத்தனை வயது?

– நூற்றுமுப்பது (24:15)

44. யோவாசுக்குப் பின் யார் ஆட்சி செய்தது?

– அமட்சியா (25:1)

45. அமட்சியாவின் தாய் பெயர் என்ன?

– எயோயதான் (25:1)

46. அமட்சியாவின் மகன் யார்?

– உசியா (26:1)

47. உசியாவின் தாய் பெயர் என்ன?

– எக்கொலியா (26:3)

48. உசியாவின் அரச அலுவலர் தலைவரின் பெயர் என்ன?

– அனானியா (26:11)

49. உசியாவுக்குத் தொழுநோய் ஏற்பட்டதும் அரண்மனைப் பொறுப்பை ஏற்றது யார்?

– யோத்தாம் (26:21)

50. உசியாவின் பிற செயல்களைத் தொடக்கமுதல் இறுதிவரை எந்த இறைவாக்கினர் எழுதினார்?

– ஆமோட்சின் மகன் எசாயா (26:22)

51. யோத்தாம் தாய் பெயர் என்ன? அவள் யாருடைய மகள்?

– எரூசா, சாதோக்கின் மகள் (27:1)

52. ஒரே நாளில் யூதாவில் இலட்சத்து இருபதினாயிரம் பேரைக் கொன்று குவித்தவன் யார்?

– இரமலியாவின் மகன் பெக்கா (28:6)

53. ஆகாசின் ஆட்சிக்காலத்தில் இருந்த இறைவாக்கினர் யார்?

– ஓதேது (28:9)

54. ஆகாசுக்குப்பின் யார் ஆட்சி செய்தது? அவன் தாய் பெயர் என்ன?

– எசேக்கியா (28:27) அபியா (29:1)

55. பாஸ்கா விழாவைக் கொண்டாட எசேக்கியா அரசன் எதுமுதல் எதுவரை அழைப்பு விடுத்தான்?

– பெயேர்செபா முதல் தாண் வரை (30:5)

56. மக்கள் தங்களையே தூய்மையாக்கிக்கொள்ளாமல் இருந்ததற்காக எந்த அரசன் மக்களுக்காக வேண்டிக்கொண்டான்?

– எசேக்கியா (30:18)

57. எருசலேமில் இருந்த மக்கள்----- திருவிழாவை --- நாட்கள் கொண்டாடினார்கள்?

– புளியாத அப்பத் திருவிழாவை, ஏழு. (30:21)

58. சாலமோனின் காலத்தில் கூடி இப்படிக் கொண்டாடினது இல்லை. ஆனால் இவர் காலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யார் அவர்?

– எசேக்கியா (30:26)

59. எசேக்கிய ஆட்சியில் யார் படையெடுத்து வந்தது?

– அசீரிய மன்னன் சனகெரிபு (32:1)

60. படையெடுத்து வருவதைத் தடுக்க -----ம் -----ம் அடைத்துவிட்டான். ----- கோட்டையை வலுப்படுத்தினார்.

– நீரூற்றுக்களையும் ஓடைகளையும் (32:4) – மில்லோ (32:5)

61. **அசீரிய மன்னன் சனகெரிபை யார் கொன்றார்கள்?**

– சொந்த புதல்வரே (32:21)

62. **எசேக்கியாவின் புற செயல்கள் எந்த நூலில் இடம்பெற்றுள்ளன?**

– எசாயா (32:32)

63. **மனாசே அரசனானபோது அவனுக்கு வயது என்ன?**

– பன்னிரண்டு (33:1)

64. **மனாசே தன் புதல்வரை ----- பள்ளத்தாக்கில் பலியாக்கினான்?**

– பென்இன்னோம் (33:6)

65. **எட்டு வயதில் அரசனான மன்னன் பெயர் என்ன?**

– யோசியா (34:1)

66. **ஆண்டவரின் திருச்சட்ட நூலை குரு ---- கண்டுபிடித்தார். அவர் அந்த நூலை ----- ஒப்படைத்தார்.**

– இல்க்கியா (34:15) சாப்பானிடம் (34:15)

67. **மோசே வழியாக அளிக்கப்பட்ட ஆண்டவரின் திருச்சட்ட நூலைப்பற்றி எந்தப் பெண் இறைவாக்கினரிடம் சென்றது?**

– குல்தா (34:22)

68. **யோசியா மன்னன் காலத்தில் எகிப்திய மன்னன் ---- யூப்பிரத்தீசு ஆற்றின் பகுதியிலிருந்த ----- என்ற இடத்திற்குப் படையெடுத்து வந்தான்?**

– நெக்கோ, கர்க்கமிசு (35:20)

69. **யோசியாவுக்காக ----- இறைவாக்கினர் ஓர் இரங்கற்பா பாடினார்?**

– எரேமியா (35:25)

70. **எகிப்திய மன்னன் யோவகாசின் சகோதரன் எலியாக்கிமிற்கு ----- என்று பெயர் மாற்றம் செய்தான்?**

– யோயாக்கிம் (36:4)

71. **பாபிலோனிய மன்னன் ---- யோயாக்கிமைத் தாக்கி அவனை ----க் கொண்டுசென்றார்?**

– நெபுகத்னேசர், பாபிலோனுக்கு (36:6)

72. **எத்தனை ஆண்டு யூதா நாடு பாழாய்க் கிடந்தது?**

– எழுபது (36:21)

73. **எரேமியா உரைத்த ஆண்டவரின் வாக்கு நிறைவேறும்படி ----- என்பவனின் முதலாம் ஆண்டில் மக்களைத் தங்களின் நாட்டுக்குச் செல்லட்டும் என்று கூறினான்.**

– பாரசீக மன்னன் சைரசு (36:22)

எஸ்ரா

...பொது

இந்நூல் வரலாற்று நூலின் எந்தப் பிரிவைச் சார்ந்தது?

- 2 வது பிரிவு – குறிப்பேட்டு வரலாற்றைச் சார்ந்தது.

இஸ்ரயேலின் முடியாட்சி எப்போது நிறைவுற்றது?

- பாபிலோனிய அடிமைத் தனத்தோடு நிறைவுற்றது.

யூதர்கள் யூதேயாவுக்கு திரும்பிப்போக அனுமதித்த அரசன் யார்? எப்போது?

- கி. மு. 538 ல் – பாரசீக மன்னன் சைரஸ்.

சைரஸ் மன்னன் யாருக்கு முன்னடையாளமாக செயல்பட்டான்?

- வரவிருக்கும் மெசியாவிற்கு.

எருசலேம் வந்த யூதர்கள் முதலில் செய்த வேலை என்ன?

- ஆலயம் எழுப்பும் வேலையில் ஈடுபட்டனர்.

சட்டங்களை கடைபிடிக்கும் பழக்கத்தைப் புதுப்பித்தவர் யார்?

- எஸ்ரா.

...நூலிலிருந்து:

1. ஆண்டவரின் கோவிலுக்கு உரிமையான பாத்திரங்களைத் திருப்பிக்கொடுத்த மன்னன் யார்?

   - சைரசு (1:7)

2. மக்களை அடிமைகளாக இட்டுச்சென்ற பாபிலோனிய மன்னன் யார்?

   - நெபுகத்னேசர் (2:1)

3. இஸ்ரயேல் மக்கள் எருசலேமில் ஒருசேரக்கூடியது எப்பொழுது?

   - ஏழாம் மாதம் (3:1)

4. பாரசீக மன்னன் அர்த்தக்சஸ்தாவிற்கு எழுதிய மடல் எந்த மொழியில் எழுதப்பட்டது?

   - அரமேயத்தில் (4:7)

5. பாரசீக மன்னன் தாரியு ஆட்சியின் ——— ஆண்டுவரை எருசலேமில் உள்ள கடவுளின் கோவில் வேலை தடைபட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

   - இரண்டாம் (4:24)

6. இறைவாக்கு உரைத்தவர் யார்?

– ஆகாயும், செக்கரியாவும் (5:1)

7. கோவிலை அழித்த மன்னன் யார்?

– நெபுகத்னேசர் (5:12)

8. கோவிலைக் கட்ட ஆணையிட்ட மன்னன் யார்?

– சைரசு (5:13)

9. பாபிலோனிலுள்ள கருவூலத்தைக் கொண்ட ஏட்டுச் சுருள்கள் வைக்கப்படும் அறையைச் சோதனை இட்டவர் யார்?

– தாரியு (6:1)

10. தாரியு ஆட்சியில் கோவில் வேலை எப்பொழுது முடிவுற்றது?

– ஆறாம் ஆண்டிலே, அதார் திங்கள் மூன்றாம் நாளிலே (6:15)

11. பாரசீக மன்னரான அர்த்தக்சஸ்தாவின் ஆட்சிக் காலத்தில் எருசலேமுக்கு வந்தவர் யார்?

– எஸ்ரா (7:1)

12. இஸ்ரயேல் மக்கள் வேற்று நாட்டு மக்களோடு கலப்பதற்கு முதற் காரணமாக இருந்தவர்கள் யார்?

– அதிகாரிகளும், ஆளுநர்களும் (9:2)

13. அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவந்திருந்த மக்கள் அனைவரும் எங்கு கூடவேண்டும்? எத்தனை நாட்களில்?

– எருசலேமில் (10:7) மூன்று நாட்களில் (10:8)

14. எந்தக் குலத்தார் எருசலேமில் ஒன்று கூடினர்?

– யூதா, பென்யமின் (10:9)

15. வேற்றினப் பெண்களை மணந்திருந்த இவர்கள் அனைவரும் –––– –––– விலக்கிவிட்டனர்.

– பெண்களையும் பிள்ளைகளையும் (10:44)

நெகேமியா

...தர்

எஸ்ராவின் மறுமலர்ச்சி வழியைப் பின்பற்றி வந்தவர் யார்?

- நெகேமியா.

யூதர்கள் தங்களுக்குரியத் தலைவரை ஏற்படுத்திய ஆண்டு யாது?

- கி. மு. 475.

...விலிருந்து:

அக்கல்யாவின் மகன் யார்?

- நெகேமியா (1:1)

நெகேமியா இருந்த தலைநகரின் பெயர் என்ன?

- சூசா (1:1)

மன்னரின் காடுகளுக்குக் காவலர் யார்?

- ஆசாபு (2:8)

ஆசாபு எருசலேமில் வந்து எத்தனை நாள் தங்கியிருந்தார்?

- மூன்று நாள் (2:11)

குப்பை மேட்டு வாயில் எத்தனை முழம் மதிலைப் பழுது பார்த்தார்கள்?

- ஆயிரம் (3:13)

ஒரு கையால் வேலை செய்தனர் மறுகையிலே எதைத் தாங்கியிருந்தனர்?

- ஆயுதம் (4:17)

ஆண்டவரை எவ்வாறு புகழ்ந்தனர்?

- ஆமென் (5:13)

உணவு திராட்சை இரசத்தோடு எதனை வசூலித்தனர்?

- நாற்பது செக்கேல் வெள்ளி (5:15)

கெசேம் தூதனுப்பி சந்தித்துப் பேசிய இடம் யாது?

- ஒனோ சமவெளியிலுள்ள ஊர் (6:2)

10. மடல்களை அனுப்பிக்கொண்டிருந்தவன் யார்?

- தோபியா (6:19)

11. அனானி எப்படிப்பட்டவர்?

– உண்மையானவர், கடவுளுக்கு அஞ்சியவர் (7:2)

12. பாடகரும் பாடகிகளும் மொத்தம் எத்தனை பேர்?

– இருநூற்று நாற்பத்தைந்து (7:67)

13. மக்கள் எத்தனை நாட்கள் திருவிழாக் கொண்டாடினர்?

– ஏழு நாட்கள் (8:18)

14. திருச்சட்ட நூல் ஆண்டவரால் யாருக்குக் கொடுக்கப்பபட்டது?

– மோசே (9:14)

15. அடிமைத்தனத்திலிருந்து வந்த மக்களுக்கு இரவில் வழிகாட்டியது எது?

– நெருப்புத்தூண் (9:19)

16. விளைச்சலில் பத்தில் ஒரு பகுதியை யாருக்குக் கொடுத்தனர்?

– லேவியருக்கு (10:37)

17. கடவுளின் இல்லக் கருவூல அறைகள் யாரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன?

– எல்யாசிபிடம் (13:4)

18. எல்யாசி யாருக்கு உறவினர்?

– தோபியாவுக்கு (13:4)

19. நெகேமியாவில் கடைசியாக முடிக்கப்பட்ட வார்த்தை எது?

– என் கடவுளே என்னை நினைவு கூர்ந்து எனக்கு நன்மை செய்தருளும் (13:31)

எஸ்தர்

பொது

1. எஸ்தர் நூல் எந்த ஆட்சிக்காலத்தை பின்னணியாகக் கொண்டுள்ளது?

   – பாரசீகர்களின் ஆட்சிக் காலம்.

2. இந்நூலின் மையச் செய்தி என்ன?

   – கடவுள், தம் மக்களை எதிரிகளிடமிருந்து மீட்க வலிய கருவிகள் அல்ல, மிக எளிய கருவிகளையே பயன்படுத்துகிறார்.

நூலிலிருந்து:

1. அர்த்தக்சஸ்தா மன்னன் எத்தனை மாநிலங்களை ஆட்சி செலுத்தி வந்தான்?

   – இந்தியா முதல் எத்தியோப்பிய வரை இருந்த நூற்று இருபத்தேழு மாநிலங்கள் (1:15)

2. அர்த்தக்சஸ்தா எந்த நகரில் இருந்தார்?

   – சூசா நகரில் (1:2)

3. அர்த்தக்சஸ்தா மன்னன் எத்தனை நாள்கள் அரண்மனையில் பெரிய விருந்து அளித்தான்?

   – நூற்று எண்பது நாள்களாக (1:4)

4. அர்த்தக்சஸ்தா மன்னனின் மனைவி பெயர் என்ன?

   – ஆஸ்தின் (1:9)

5. மன்னனின் அலுவலர்கள் யார்?

   – ஆமான், பாசான், தாரா, போராசா, சதேஸ்தா, அபத்தாசா, தராபா (1:10)

6. பாரசீக மேதிய நாட்டு ஆளுநர்கள் யார்?

   – ஆர்க்கெசாய், சர்தாத்தாய், மலேசயார் (1:13)

7. சூசா நகரில் இருந்த யூதர் பெயர் என்ன?

   – மொர்தெக்காய் (2:5)

8. மொர்தெக்காய் யாரைத் தன் வளர்ப்பு மகளாகக் கொண்டிருந்தார்?

   – எஸ்தர் (2:7)

9. எஸ்தரிடம் தம் இனத்தையும் நாட்டைப்பற்றியும் வெளிப்படுத்த வேண்டாம் என்று யார் சொன்னது?

   – மொர்தெக்காய் (2:10)

10. எஸ்தரை அரசியாக்கி முடிசூட்டியது யார்?

– மன்னர் அர்த்தக்சஸ்தா (2:17)

11. அரசனின் வைப்பாட்டிகளைக் கவனித்து வந்தவன் யார்?

– அண்ணகர் சாட்சகாசின் (2:14)

12. எஸ்தரின் தந்தை பெயர் என்ன?

– அபிகாயில் (2:15)

13. அரச வாயிலருகில் பணிபுரிந்தவர்கள் யார்?

– பிகதான், தெரேசு (2:21)

14. அரச கட்டளை என்ன?

– அரச வாயிலில் பணிபுரிந்த அனைத்து அலுவலர்களும் தலைவணங்கி ஆமானைப் பணிய வேண்டும் (3:2)

15. எஸ்தருக்குப் பணிவிடை புரிந்தவன் பெயர் என்ன?

– அண்ணகர் அத்தாக் (4:5)

16. ஆமானின் மனைவி பெயர் என்ன?

– செரேசு (5:10)

17. ஐம்பது முழத் தூக்குமரத்தில் தூக்கிலிடப்பட்டவன் யார்?

– ஆமான் (7:9)

18. ஆமானின் புதல்வர்கள் எத்தனை பேர்?

– பர்சந்தத்தா, தல்போன், அஸ்பாத்தா, போராத்தா, அதலியா, அரிதாத்தா, பர்மஸ்தா, அரிசாய், அரிதாய, வய்சாத்தா ஆகிய பத்துப்பேர் ஆவர் (9:7)

19. பூர் எனும் எபிரேயச் சொல்லுக்கு அர்த்தமென்ன?

– சீட்டு (3:7,24,26)

யோபு

பொது:

யோபு எவ்வாறு போற்றப்படுகிறார்?

- தன்னிகரில்லா ஞானி எனப் போற்றப்படுகிறார்.

யோபு நூல் எழுதப்பட்ட ஆண்டு எது?

- கி.மு. 5 ம் நூற்றாண்டு.

துன்பத்துக்கு காரணம் எதுவெனக் கூறுகிறது இந்நூல்?

- பாவம்.

திருப்பாடல்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

1. இறைப்புகழ் திருப்பாடல்கள்.
2. தனியவரின் புலம்பல் பாக்கள்.
3. சமூகப் புலம்பல் நம்பிக்கை செய்நன்றி பாக்கள்.
4. அரசப் பாடல்கள்.
5. அறிவுரைப் பாடல்கள்.

நீதிமொழிகள் நூல் வலியுறுத்தும் கருத்து யாது?

- ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்.

நமது வாழ்வை நிர்ணயிக்கும் உண்மை எது என சபை உரையாளர் நூல் கூறுகிறது?

- ஞானம் நிறைந்த இறைவனின் பராமரிப்பு.

நூலிலிருந்து:

யோபுவின் ஊர் பெயர் என்ன?

- ஊசு (1:1)

யோபுக்கு எத்தனைப் பிள்ளைகள்?

- ஏழு பிள்ளைகள். நான்கு புதல்வரும் மூன்று புதல்வியரும் (1:2)

விருந்து நாள்களின் முறை முடிந்ததும் யோபு என்ன செய்வார்?

- தம் பிள்ளைகளை வரவழைத்து தூய்மைப்படுத்துவார், எரி பலியை ஒப்புக்கொடுப்பார் (1:5)

ஆண்டவர் சாத்தானிடம் என்ன கேட்டார்?

- எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டார் (1:7)

5. அதற்கு சாத்தானின் பதில் என்ன?

– "உலகைச் சுற்றி உலவி வருகிறேன்" என்றான் (1:7)

6. சாத்தான் யோபுவைச் சோதிக்க முதல்முதலில் எதைக் கேட்டான்?

– அவனுக்குரியவற்றின்மீது கை வையும் (1:1)

7. யோபுவின் கழுதைகளைக் கைப்பற்றினவர்கள் யார்?

– செபாயர் (1:15)

8. யோபுவின் ஆடுகளும் வேலையாள்களும் எப்படி இறந்தனர்?

– "கடவுளின் நெருப்பு விண்ணிலிருந்து விழுந்து சுட்டெரித்துவிட்டது (1:

9. யோபுவின் ஒட்டகங்களைக் கைப்பற்றிக்கொண்டவர்கள் யார்?

– கல்தேயர் (1:17)

10. யோபுவின் பிள்ளைகள் எப்படி இறந்தனர்?

– பெருங்காற்றினால் வீடு இடிந்து விழுந்து இறந்தனர் (1:19)

11. இறப்பதற்கு முன் யோபுவின் பிள்ளைகள் யார் வீட்டி விருந்துண்டனர்?

– மூத்த சகோதரன் வீட்டில் (1:18)

12. யோபுவின் உடைமைகள் அழிக்கப்பட்டவுடன் யோபு என் செய்தார்?

– தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்; தம் தலையை மழித்துக்கொண் "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன்; அங் திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன்; ஆண்டவர் அளித்த ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறு என்றார் (1:20–21)

13. யோபுவுக்கு சாத்தானால் வந்த இரண்டாவது சோதனை எனன?

– யோபை உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை எரியும் புண்களால் வா வதைத்தான். (2:7)

14. யோபுவின் மனைவி அவரிடம் என்ன சொன்னாள்?

– "இன்னுமா மாசின்மையில் நிலைத்திருக்கிறீர்! கடவுளைப் பழித் மடிவதுதானே?" என்றாள். (2:9)

15. யோபுவின் மூன்று நண்பர்கள் யார்?

– தேமாவைச் சார்ந்த எலிப்பாசு, ஆகாவைச் சார்ந்த பில்தாது, நாமா சார்ந்த சோப்பார் (2:11)

16. யோபுவின் நண்பர்கள் அவருடன் எத்தனை நாள் தங்கினர்?

– ஏழு பகலும், ஏழு இரவும். (2:13)

யோபு தன் பிறந்த நாளைக் குறித்து சொன்னது என்ன?

- "ஒழிக நான் பிறந்த அந்த நாளே! (3:1)

ஆறு வகை அல்லல்களினின்றும் அவர் உம்மை விடுவிப்பார் என்று எந்த நண்பன் சொன்னான்?

- தேமானியன் எலிப்பாசு. (4:1, 5:19)

யார் கடவுளின் காலடியில் கிடப்பதாக யோபு கூறுகிறார்?

- இராகாபின் துணைவர்கள் (9:13)

கடவுளின் ஆழ்ந்த உண்மைகள் எதைவிட உயர்ந்தது?

- வானங்களை விட உயர்ந்தது. (11:8)

யோபு சாம்பல், களிமண் என்று எதைக் குறிப்பிடுகின்றார்?

- நண்பர்களின் மூதுரைகள், முதுமொழிகள், எதிர்வாதங்கள் (13:12)

யோபுவின் மேல் அவருடைய நண்பர்கள் எத்தனை முறை பழித்துரைத்தனர்?

- பன்முறை (19:3)

எலிகூ என்பவன் யார்?

- பூசியனும், இராமின் வீட்டைச் சார்ந்த பாரக்கேலின் புதல்வன் எலிகூ. (32:2)

எலிகூ யோபுவின் மேல் ஏன் சினம் கொண்டான்?

- யோபு கடவுளைவிடத் தம்மை நேர்மையாய்க் கருதியதால் (32:3)

ஆண்டவர் எதன் வழியாக யோபுவிடம் பேசினார்?

- சூறாவளியினின்று. (40:6)

கடவுள் யோபுவின் நண்பர்கள் மேல் ஏன் சினம் கொண்டார்?

- என் ஊழியன் யோபு போன்று நீங்கள் என்னைப் பற்றிச் சரியாகப் பேசவில்லை. (42:7)

யோபுக்கு ஆண்டவர் இறுதியில் என்ன சிறப்புச் செய்தார்?

- செல்வங்களையெல்லாம் மீண்டும் நல்கினார். மேலும் அவர் யோபுக்கு இருந்தவற்றை எல்லாம் இரண்டு மடங்கு ஆக்கினார். (42:10)

யோபுவை தெரிந்தவர்கள் அவருக்கு ஆறுதல் கூறி என்ன வழங்கினர்?

- வெள்ளியும் பொன்மோதிரமும் வழங்கினர். (42:11)

யோபுவின் மூத்த மகள் பெயர் என்ன?

- எமிமா (42:14)

யோபுவின் இரண்டாவது மகள் பெயர் என்ன?

- கெட்டிசியா (42:14)

31. மூன்றாவது மகளின் பெயர் என்ன?

– கெரேன் அப்பூக்கு (42:14)

32. **யோபு எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?**

– நூற்று நாற்பது ஆண்டுகள். (42:16)

33. **யோபு எத்தனை தலைமுறை வரை வாழ்ந்தார்?**

– நான்காம் தலைமுறை வரை (42:16)

யார் யாரிடம் கூறியது:

34. **''இன்னுமா மாசின்மையில் நிலைத்திருக்கிறீர்! கடவுளைப் பழி மடிவதுதானே?''.**

– யோபுவின் மனைவி யோபுவிடம் கூறியது. (2:9)

35. **நான் வயதில் சிறியவன். நீங்களோ பெரியவர். ஆகவே, என் கருத் உங்களிடம் உரைக்கத் தயங்கினேன்,அஞ்சினேன்.**

– எலிகூ யோபுவின் நண்பர்களிடம் (32:6)

36. **குற்றம் காண்பவன், எல்லாம் வல்லவரோடு வழக்காடுவா கடவுளோடு வாதாடுபவன் விடையளிக்கட்டும்.**

– ஆண்டவர் யோபுவிடம் (40:2)

37. **இதோ! எளியேன் யான் இயம்புதற்குண்டோ?**

– யோபு ஆண்டவரிடம் (40:4)

38. **'நான் பாவம் செய்யாததனால் எனக்கு என்ன ஆதாயம்? என என்ன நன்மை?' என நீர் கேட்கின்றீர்.**

– எலிகூ யோபுவிடம் (35:5)

திருப்பாடல்கள்

நீதித் தீர்ப்பின்போது பொல்லாரின் நிலை என்ன?

– நிலை நிற்க மாட்டார். (1:5)

பொல்லார் எதைக் கருக்கொள்கின்றனர்?

– தீவினையைக் (7:14)

ஆண்டவர் தங்கியிருக்கும் இடம் எது?

– சீயோன். (9:11)

திருப்பாடலின் ஆசிரியர் எங்கு புகழ்பாடுவேன் எனக் கூறுகிறார்?

– மகள் சீயோனின் வாயில்களில். (9:14)

ஆண்டவர் எச்செயல்களை விரும்புகிறார்?

– நேரிய செயல்களை. (11:7)

கடவுள் இல்லை என யார் சொல்லிக் கொள்கின்றனர்?

– அறிவிலிகள். (14:1)

ஆண்டவர் எதன் மீது ஏறிப் பறந்து வந்தார்?

– கெருபு மீது (18:10)

ஆண்டவருடைய இறக்கை எது?

– காற்றை. (18:10)

ஆண்டவருடைய திருச்சட்டம் எதைவிட இனிமையானது?

– தேனினும், தேனடையினின்று சிந்தும் தெளிதேனினும் இனிமையானவை. (19:10)

ஆண்டவரின் கூடாரம் எங்குள்ளது?

– எருசலேமில் (76:2)

இஸ்ரயேல் மக்கள் எம்மலையில் பொற்கன்றைச் செய்தனர்?

– ஒரேபில் (106:19)

பினகாசு என்பவர் செய்தது என்ன?

– கொதித்தெழுந்து தலையிட்டார். (106:30)

கோடிட்ட இடத்தை நிரப்பு:

'நீர் என் மைந்தர்; இன்று நான் உம்மைப் ——.

– பெற்றெடுத்தேன். (2:7)

14. கடவுளாகிய உமக்குச் சற்றே ----- ஆக்கியுள்ளீர்.

– சிறியவர். (8:5)

15. ஆண்டவர் தாமே என்------ சொத்து.

– உரிமைச் (16:5)

16. என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் -----.

– கைவிட்டீர் (22:1)

17. என் ஆடைகளைத் ----- பங்கிட்டுக் கொள்கின்றனர்; என் -- சீட்டுப் போடுகின்றனர்.

– தங்களிடையே, உடையின்மேல் (22:18)

18. ஆண்டவரே என் ஆயர்; -----

– எனக்கேதும் குறையில்லை. (23:1)

19. உம் கோலும் ----- என்னைத் தேற்றும்.

– நெடுங்கழியும் (23:4)

20. லெபனோனின் மலையைக் ----- துள்ளச் செய்கின்றார்.

– கன்றுக் குட்டியெனத் (29:6)

21. உமது கையில் என் ----- ஒப்படைக்கின்றேன்.

– உயிரை (31:5)

22. ----- எத்துணை இனியவர் என்று ----- பாருங்கள்.

– ஆண்டவர், சுவைத்துப் (34:8)

23. என் கடவுளே! ----- நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

– உமது திருவுளம் (40:8)

24. ----- ஏங்கித் தவிப்பது போல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது.

– கலைமான் நீரோடைகளுக்காக (42:1)

25. உங்கள் வீட்டின்----- உங்கள் தொழுவத்தின் ----- நான் ஏற்றுக் கொள்வதில்லை.

– காளைகளையோ, ஆட்டுக் கிடாய்களையோ. (50:9)

26. நொறுங்கிய, குற்றமுணர்ந்த உளத்தை நீர் -----

– அவமதிப்பதில்லை. (51:17)

27. உமது இல்லத்தின் மீது எனக்குண்டான ஆர்வம் என்னை -- விட்டது.

– எரித்து (69:9)

என் தாகத்துக்குக் ——— குடிக்கக் கொடுத்தார்கள்.

- காடியைக் (69:21)

ஆண்டவராம் இறைவன் உரைப்பதைக் கேட்பேன்; தம் மக்களுக்கு, தம் பற்றுமிகு அடியார்க்கு ——— அவர் வாக்களிக்கின்றார்.

- நிறைவாழ்வை (85:8)

உம் கால் ——— மோதாதபடி, அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக் கொள்வர்.

- கல்லின்மேல் (91:12)

மனிதரின் வாழ்நாள் ——— ப் போன்றது.

- புல்லை (103:15)

மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர் ——— அடைவர்

- நன்மை (112:5)

கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு ——— ஆயிற்று!

- மூலைக்கல் (118:22)

கண்ணீரோடு விதைப்பவர்கள் ——— அறுவடை செய்வார்கள்.

- அக்களிப்போடு (126:5)

——— இறைவனைப் போற்றுங்கள்!

- தூயகத்தில் (150:1)

கடவுளே! ——— உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்.

- தூயதோர் (51:10)

நீதிமொழிகள்

1. ஞானத்தின் தொடக்கம் எது?
   – ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் (9:10)
2. மதிகெட்டு நடக்கும் பெண்ணின் அழகு எப்படி இருக்கும்?
   – பன்றிக்குப் போட்ட வைரமூக்குத்தி போலிருக்கும். (11:22)
3. நீதிமொழிகள் நூலின் ஆசிரியர் யார்?
   – சாலமோன் (1:1)
4. ஞானத்தை அடைந்தோர்க்கு அது எப்படிப்பட்டது?
   – வாழ்வெனும் கனிதரும் மரமாகும். (3:18)
5. விலைமகளின் முடிவுகள் எப்படிப்பட்டவை?
   – எட்டியினும் கசக்கும்; இருபுறமும் கூரான வாள் வெட்டுதலை ஒக்கும். (5:4
6. ஆண்டவருக்கு வெறுப்பைத் தரும் காரியங்கள் எத்தனை?
   – ஆறு. (6:16–19)
7. கற்பு நெறி தவறுகிறவன் எதை அழித்துக் கொள்கின்றான்?
   – தன்னையே அழித்துக் கொள்கின்றான். (6:32)
8. பரத்தமை, திருடு இதில் எது பெரிய குற்றம்?
   – பரத்தமை. (6:29–30)
9. விவேகமுள்ளோர் யார்?
   – தம் நாவை அடக்குவோர் (10:19)

கோடிட்ட இடத்தை நிரப்புக:

10. ஒருவன் தன் மடியில் நெருப்பை வைத்திருந்தால், அவனது —— எரிந்து போகாமலிருக்குமா?
    – ஆடை. (6:27)
11. ஞானத்தை உன் ——– என்று சொல்.
    – சகோதரி. (7:4)
12. கனிவான மறுமொழி ——– ஆற்றிவிடும்.
    – கடுஞ்சினத்தையும் (15:1)

13. ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்கு —— கொடுக்கிறார்.

– கடன். (19:17)

14. நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை; பகைவர் தரும் முத்தங்களோ —— முத்தப் பொழிவே.

– வெறும் (27:6)

15. நேர்மையாக நடப்பவருக்குத் —— வராது.

– தீங்கு. (28:18)

16. மனிதரால் ஆராய்ந்தறிய இயலாது எவை?

– அரசரின் உள்ளக்கிடக்கை, வானத்தின் உயரம், கடலின் ஆழம் (25:3)

17. மனத்திற்குத் திடமளிப்பது எது?

– கனிவான அறிவுரை (27:9)

18. ஞானத்தை அளிப்பவர் யார்?

– ஆண்டவர் (2:6)

19. உன் தந்தையின் பயிற்சியும், தாயின் கற்பித்தலும் எப்படிப்பட்டவை?

– தலைக்கு அணிமுடி; உன் கழுத்துக்கு மணிமாலை. (1:9)

20. விலைமகளின் விலை ஒரு வேளைச் சோறுதான்; ஆனால், பிறன் மனையாளோ —— வேட்டையாடிவிடுவாள்.

– உயிரையே. (6:26)

21. என் வழிகளைப் பின்பற்றுகின்றோர் —— பெற்றோர்!

– நற்பேறு (8:32)

சபை உரையாளர்

1. விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை விட எது மேலானது?

– நற்புகழே மேல் (7:1)

2. ஞானமுள்ளவர்களின் சொற்கள் எப்படி உள்ளன?

– ஆயரின் கோல்போல வழி நடத்தும், பசுமரத்தாணிபோல உள்ளத்தில் பதியும் (12:11)

கோடிட்ட இடத்தை நிரப்பு:

3. ஞானம் ஒருவன் ----- ஒளிமயமாக்கும்

– முகத்தை (8:1)

4. ஞானியரின் வாய்மொழி அவருக்கு ----- தேடித்தரும்.

– பெருமை (10:12)

5. ஞானிகளின் கண்கள் ----- படைத்தவை;

– ஒளி (2:14)

இனிமைமிகு பாடல்

எபிரேய விவிலியத்தில் இந்நூலுக்கு என்ன தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது?

– சாலமோனால் பாடப்பட்ட பாடல்களுள் தலைச் சிறந்தப் பாடல்.

எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் விவிலியத்தில் எந்த தொகுப்பில் இந்நூல் இடம் பெறுகிறது?

– எபிரேய விவிலியத்தில் – பரிசுத்த ஏடுகள் என்ற தொகுப்பிலும், கிரேக்கம், இலத்தீன் விவிலியங்களில் – ஞான நூல்கள் என்ற தொகுப்பிலும் இடம்பெறுகிறது.

3. இந்நூல் யார் பெயரால் வெளியிடப்பட்டுள்ளது?

– சாலமோன் பெயரால் வெளியிடப்பட்டுள்ளது.

4. ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இந்நூலின் காலம் யாது?

– கி.மு. 5 ம் நூற்றாண்டின் பிற்பகுதி.

5. யூத ராபிக்கள், கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர்கள் எக்கோணத்தில் இந்நூலைக் காண்கின்றனர்?

– யூத ராபிக்கள்: கடவுள் இஸ்ரயேலர்க்கு இடையே உள்ள அன்புறவை வெளிப்படுத்தும் நூல்.

– கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர்கள்: கிறிஸ்து திருச்சபைக்கு இடையே உள்ள அன்புறவை வெளிப்படுத்தும் நூல் என்கின்றனர்.

நூலிலிருந்து:

1. இனிமைமிகு பாடல்கள் ஒரு தொகை நூல்; யூதப் பரம்பரையின்படி, இந்நூலில் அடங்கியுள்ள பாடல்களின் ஆசிரியர் யார்?

– சாலமோன்.

2. புதிய ஏற்பாட்டில் இனிமைமிகு பாடலில் உள்ள காதல் உறவை கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர்கள் யாரிடத்தில் கண்டனர்?

– கிறிஸ்து + திருச்சபைக்கிடையே.

3. பழைய ஏற்பாட்டில் யூதபோதகர்கள் இனிமைமிகு பாடலில் உள்ள காதல் உறவை யாரிடத்தில் கண்டனர்?

– கடவுள் + இஸ்ராயேலருக்கிடையே.

4. **இனிமைமிகு பாடலில் எத்தனை பாடல்கள் உண்டு?**

– இருபத்தெட்டுப் பாடல்கள்.

கோடிட்ட இடத்தை நிரப்புக:

5. **அன்புக்காக ஒருவன் தன் வீட்டுச் ——— எல்லாம் வாரியிறைக்கலாம்;**

– செல்வங்களை (8:7)

6. **சாரோன் சமவெளியில் உள்ள ——— நான்.**

– காட்டு மலர்கள் (2:1)

7. **உமது ——— நறுமணம் இனிமையானது.**

– பரிமளத்தின் (1:3)

8. **இளம் பெண்கள் உம்மேல் ——— கொள்கின்றனர்.**

– அன்பு (1:3)

9. **எருசலேம் மங்கையரே, ——— இருப்பினும் நான் எழில்மிக்கவளே.**

– கறுப்பாய் (1:5)

10. **திராட்சைத் தோட்டத்திற்கு என்னைக் ——— வைத்தனர்.**

– காவல் (1:6)

11. **என் நெஞ்சத்தின் அன்புக்குரியவரே! ——— நீர் ஆடு மேய்ப்பீர்**

– எங்கே (1:7)

12. **——— நோயால் நான் மிகவும் நலிந்து போனேன்.**

– காதல் (2:5)

13. **என் ——— குரல் கேட்கின்றது.**

– காதலர் (2:8)

14. **உன் கழுத்து ——— எழில் பெறுகின்றன.**

– மணிச்சரங்களாலும் (1:10)

15. **என் காதலர் எனக்கு ——— மலர்க்கொத்து!**

– மருதோன்றி. (1:14)

16. **——— மங்கையருள் இருக்கிறாள் என் அன்புடையாள்.**

– முட்புதர் நடுவில் இருக்கும் லீலி மலர்போல் (2:2)

17. **அவரது நிழலிலே அமர்வதில் ———.**

– இன்புறுவேன் (2:3)

18. திராட்சை ----- மணம் தருகின்றன.

- மலர்கள் (2:13)

19. எம் திராட்சைத் ----- பூத்துள்ளன.

- தோட்டங்களோ (2:15)

20. என் ----- அன்பரைத் தேடினேன்; தேடியும் அவரை ----- கண்டேன் அல்லேன்!

- உயிர்க்குயிரான, நான் (3:1)

21. மன்னர் தமக்கொரு பல்லக்கு செய்தார்; சாலமோன் ----- செய்தார்?

- லெபனோனின் மரத்தால் (3:9)

22. ----- இழை போன்றன உன்னிதழ்கள்.

- செம்பட்டு (4:3)

23. என் அன்பே, நீ முழுவதும் அழகே! ----- உன்னில் சிறிதும் இலதே!

- மறுவோ (4:7)

24. உன் நாவின் கீழ்த் ----- சுரக்கின்றன.

- தேனும் பாலும் (4:11)

25. என் காதலரைக் காண்பீர்களாயின் அவரிடம் என்ன சொல்வீர்கள்? ----- நோயுற்றேன் நான்' எனச் சொல்லுங்கள்.

- காதல் (5:8)

26. அவரது தலைமுடி ----- உள்ளது;

- சுருள்சுருளாய் (5:11)

27. என் அன்பே, நீ ----- அழகுள்ளவள்;

- திரட்சாவைப் போல் (6:4)

28. உன் மூக்கு ----- இணை.

- லெபனோனின் கோபுரத்திற்கு. (7:4)

29. ----- என்னுமிடத்தில் சாலமோனுக்கு இருந்தது ஒரு திராட்சைத் தோட்டம்.

- பாகால் - ஆமோன். (8:11)

எசாயா

பொது:

1. **குருத்துவத்தின் பணிகள் எவை?**

   – திருப்பொழிவு செய்தல், ஆளுதல், அறிவித்தல், பலிசெலுத்துதல்.

2. **இறைவாக்கினர்களின் வேறு பெயரென்ன?**

   – நபி, தூதர்கள், கடவுளின் ஊழியன், கடவுளின் வாய், ஆயர்கள், சாமக்காவலர்.

3. **தம் பெயரில் நூல் இல்லாத இறைவாக்கினர்கள் யாவர்?**

   – 1. நாத்தான், 2. அகியா 3. எலியா 4. எலிசா 5. காத் 6. செமயா.

4. **அடிமைத்தனத்தில் பணிபுரிந்த இறைவாக்கினர்கள் யார்?**

   – 1. எசாயா II (40–55) 2. எசேக்கியேல்.

5. **அடிமைதனத்திற்குப் பின் பணிபுரிந்த இறைவாக்கினர்கள் யாவர்?**

   – எசாயா III (55–66) , ஆகாய், செக்கரியா, மலாக்கி, ஒபதியா, தானியேல், யோனா.

6. **எசாயா பெயர் விளக்கம் தருக.**

   – கடவுள் எனது மீட்பர் (அ) ஆண்டவர் எனக்கு உதவி

7. **எசாயா என்ன பணி செய்தார்?**

   – எருசலேம் அரண்மனை ஆலோசகர்.

8. **பழைய நூலில் எசாயா எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

   – தாமஸ் மூர் என்றழைக்கப்படுகிறார்.

9. **எசாயா இறைவாக்கினரின் சிறப்பு யாது?**

   – அதிகம் படித்த இறைவாக்கினர் இவரே.

10. **எசாயா தனது இறைவாக்கில் முன்னறிவித்த ஒரு முக்கிய நபர் யார்?**

    – இம்மானுவேல்.

1. எசாயா தந்தை யார்?

- ஆமோட்சின் (1:1)

2. காளை எதனை அறிந்துகொள்கிறது?

- தன் உடமையாளனை (1:3)

3. கழுதை தன் தலைவனின் எதை அறிந்துகொள்கின்றது?

- தீனி போடும் இடத்தை (1:3)

4. கேடுகெட்ட மக்கள் என்ன செய்தார்கள்?

- ஆண்டவரைப் புறக்கணித்துவிட்டார்கள் (1:4)

5. தலையெல்லாம் எதனால் நிறைந்துள்ளது?

- வடுக்கள் (1:5)

6. வேற்று நாட்டினர் உங்கள் கண்ணெதிரே என்ன செய்கின்றார்கள்?

- உங்கள் நாட்டை விழுங்குகிறார்கள் (1:7)

7. ஆண்டவரின் அறிவுரையைக் கேளுங்கள் என்று யாரிடம் கூறப்பட்டது?

- சோதோம் கொமோரா மக்கள் (1:10)

8. எண்ணற்ற உங்கள் பலிகள் எனக்கு எதற்கு என்று கூறுபவர் யார்?

- ஆண்டவர் (1:11)

9. எனக்கு நாட்டமில்லை என்று எதைக்குறித்துக் கூறுகிறார்?

- காளைகள், ஆட்டுக்குட்டிகள், வெள்ளாட்டுக்கிடாய்கள் இவற்றின் இரத்தம் (1:11)

10. இனிமேல் எதை வீணாகக் கொண்டு வரவேண்டாம் என்கிறார் ஆண்டவர்?

- காணிக்கைகளை (1:13)

11. நீங்கள் காட்டும் தூபம் எதைக் குறிக்கிறது என்கிறார் ?

- அருவருப்பையே தருகிறது (1:13)

12. எதைச் சகிக்கமாட்டேன் என்கிறார் ஆண்டவர்?

- நீங்கள் ஒழுங்கீனமாகக் கொண்டாடும் அமாவாசை, ஓய்வுநாள் வழிபாட்டுக் கூட்டங்கள் (1:13)

13. உங்கள் பாவம் கருஞ்சிவப்பாய் இருந்தாலும் எதனைப் போலாகும் என ஆண்டவர் கூறுகிறார்?

- உறைந்த பனிபோல அவை வெண்மையாகும் (1:18)

14. இணங்க மறுத்து எனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தால் என்ன நடக்கும் என ஆண்டவர் கூறுகிறார்?

– திண்ணமாய் வாளுக்கு இறையாவீர்கள் (1:20)

15. உண்மையாய் இருந்த நகரம் [எருசலேம்] எப்படி ஆயிற்று?

– விலைமகள் போல் ஆயிற்று (1:21)

16. நீதி குடி கொண்டிருந்த எருசலேம் நிலை என்ன?

– இப்பொழுதோ கொலை பாதகர் மலிந்துள்ளனர் (1:21)

17. சீயோன் எதன்மட்டில் மீட்கப்படும்?

– நீதியினால் மீட்கப்படும் (1:27)

18. சீயோனில் மனமாற்றம் அடைவோரை எது மீட்கும்?

– நேர்மை (1:27)

19. வலிமை மிக்கவனுக்கு என்ன நிலை உண்டாகும்?

– சணற்கூளம் போலவும் அவனுடைய கைவேலைப்பாடும் தீப்பொறியாகும் (1:31)

20. எசாயா எதைக் குறித்துக் காட்சி கண்டார்?

– யூதாவையும் எருசலேமையும் (2:1)

21. திருச்சட்டம் எங்கே வெளியாவதாகச் சொல்லப்படுகிறது?

– சீயோனிலிருந்தே திருச்சட்டம் வெளிவரும் (2:3)

22. மக்கள் தங்கள் வாள்களையும் ஈட்டிகளையும் எப்படி மாற்ற வேண்டும்?

– வாள்களைக் கலப்பை கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள் (2:4)

23. ஆண்டவர் உலகை நடுநடுங்கச் செய்ய வரும்போது மக்கள் என்ன செய்வார்கள்?

– பாறைகளின் வெடிப்புகளில் பதுங்கிக்கொள்வர், குன்றுகளின் பிளவுகளில் ஒளிந்துகொள்வர்.

24. ஆண்டவர் யார் நலத்தை நலியச் செய்வார்?

– யூதா (3:1)

25. சிறுவர்களை யாருக்குத் தலைவர்களாய் மாற்றுவோம் என்கிறார்?

– மக்கள் தலைவர்களாய் (3:4)

26. மக்கள்மேல் அரசாட்சி செலுத்த யார் தகுதியுள்ளவர்களாகப் போகிறார்கள்?

– பச்சிளங்குழந்தைகள் (3:4)

மக்கள் தமக்கு அடுத்திருப்பவர்களிடம் நடந்து கொள்ளும் விதம் எப்படி?

- ஒருவர் ஒருவரை ஒடுக்கித் துன்புறுத்துவர் (3:5)

யூதாவின் சொல்லும் செயலும் எப்படி உள்ளது?

- ஆண்டவரின் திருவுளத்திற்கு எதிராய் உள்ளன (3:8)

மாசற்றோராய் இருப்பவன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?

- நலம் பெறுவர். அவர் தம் நற்செயல்களின் கனியை உண்பதும் உறுதி (3:10)

தீச்செயல் புரிவோர் பற்றி என்ன சொல்லப்படுகிறது?

- ஐயோ கேடு. அவர்களின் கைகள் செய்த தீவினைகள் அனைத்தும் அவர்கள் மேலேயே விழும் (3:11)

கடவுள் தம் மக்களைப் பார்த்து கூறுவதென்ன?

- என் மக்களே! சிறுவர் உங்களை ஒடுக்குகின்றார்கள் (3:12)

ஆள்பவர்களைப்பற்றி ஆண்டவர் கூறும் வார்த்தை என்ன?

- நீங்கள் நடக்கவேண்டிய நெறிமுறைகளைக் குப்புகிறார்கள் (3:12)

ஆண்டவர் வழக்காடுவது எதற்காக?

- மக்களினங்களுக்குத் தீர்ப்பு வழங்க (3:13)

ஆண்டவர் யாரை நீதித்தீர்ப்புமுன் நிறுத்துகிறார்?

- முதியோர் தலைவர்களை (3:14)

சீயோன் மங்கையரைப்பற்றி ஆண்டவர் கூறுவது என்ன?

- செருக்குக் கொண்டுள்ளார்கள் (3:16)

சீயோன் மகளிர்க்கு ஆண்டவர் கொடுக்கும் தண்டனை என்ன?

- உச்சந்தலையில் புண், வழுக்கைத்தலையர்களாகவும் அவர்களின் மானத்தைக் குலைப்பர் (3:17)

அழகு வாய்ந்த ஆண்களின் நிலையை ஆண்டவர் எப்படிக் கூறுகிறார்?

- வாளுக்கு இரையாவார்கள், போரில் மடிவார்கள் (3:25)

புனிதர் எனப்படுபவர்கள் யார்?

- சீயோனில் எஞ்சியிருப்போரும் எருசலேமில் தப்பி வாழ்வோரும் புனிதர் எனப்படுவர் (4:3)

எருசலேமின் இரத்தக் கறைகளை எப்படிப் போக்குவார்?

- நீதியின்படி தீர்ப்பிடும் தன்மையாலும் நெருப்புத் தணலையொத்த ஆற்றலாலும் கழுவித் தூய்மைப்படுத்துவார்.

40. திருக்கோவிலை நிரப்பி நின்றது எது?

– அவரது தொங்கலாடை (6:1)

41. யூதாவின் அரசன் யார்?

– ஆகாசு (7:1)

42. உசியாவின் மகன் பெயர் என்ன?

– யோதாமின் (7:1)

43. இரட்சின் எந்த நாட்டின் அரசன்?

– சீரியா (7:1)

43. சீரியா எந்த நாட்டோடு கூட்டணி அமைத்துக்கொண்டது?

– எப்ராயிமோடு (7:1)

45. எசாயாவின் மகன் பெயர் என்ன?

– செயார் யாகிப் (7:3)

46. சீரியாவுக்குத் தலைநகராக இருப்பது?

– தமஸ்கு (7:8)

47. தமஸ்குப் பட்டணத்தின் தலைவன் பெயர் என்ன?

– இரட்சின் (7:8)

48. எப்ராயிமின் தலைநகர் எது?

– சமாரியா (7:9)

49. சமாரியா நகரின் தலைவன் யார்?

– இரமலியாவின் மகன் (7:9)

50. நாம் யாரைத் தூயவர் எனப் போற்ற வேண்டும்?

– படைகளின் ஆண்டவர் ஒருவரையே (8:13)

51. ஆண்டவர் எந்த நாட்டை அவமதிப்புக்கு உட்படுத்தினார்?

– செபுலோன் நாட்டையும் நப்தலி நாட்டையும் (9:1)

52. ஆண்டவர் யாருக்கு எதிராக வாக்குரைத்தார்?

– யாக்கோப்புக்கு எதிராக (9:8)

53. வாயை விரிவாய்த் திறந்து இஸ்ரயேலரை விழங்குபவரா கருதப்படுவோர் யார்?

– கிழக்கிலிருந்து சீரியர்கள் மேற்கிலிருந்து பிலிஸ்தியர்கள் (9:12)

54. ஆண்டவர் ஏழைகளுக்கு எப்படி நீதி வழங்குவார்

– நேர்மையோடு (11:4)

55. எசாயா எந்த நாட்டிற்கு எதிராக இறைவாக்குக் கூறுகிறார்?
- பாபிலோனுக்குஎதிராக (13:1)

56. ஆண்டவரின் நாளானது எப்படி வரும்?
- கொடுமையும் கோபமும் கடும் சீற்றமும் மண்ணுலகைப் பாழ்நிலமாக்கும் நாளாக வரும் (13:9)

57. பாபிலோனுக்கு எதிராகப் படைகளின் ஆண்டவர் என்ன கூறுகிறார்?
- என் நாட்டில் அசீரியனை முறியடிப்பேன் என்கிறார் (14:25)

59. மோவாப் எப்போது அழிக்கப்பட்டது?
- ஒரே இரவில் கீர் நகரமும் மோவாப் நகரமும் அழிக்கப்பட்டது (15:1)

60. எஸ்மோன் எலயாலே ஊர்களின் ஓலக்குரல் எதுவரை கேட்கிறது?
- யாகசு ஊர் வரை (15:4)

61. தீர்போன் நீர்நிலைகள் எதனால் திரம்பி வழிகின்றன?
- இரத்தத்தால் (15:9)

62. மோவாப் பற்றி ஆண்டவரின் இறைவாக்கு என்ன?
- கூலியாள் கணக்கின்படி மூன்று ஆண்டுகளில் மோவாப் நாட்டில் திரளான மக்கள் கூட்டம் இருப்பினும் அதன் மேன்மை அழிவுறும் (16:14)

63. தமஸ்கு பற்றி ஆண்டவரின் இறைவாக்கு என்ன?
- 'நகர்' என்ற பெயரை தமஸ்கு இழந்துவிடும் (17:1)

64. எங்கே விரைவாய்ச் செல்லும் மேகத்தின்மேல் ஆண்டவர் ஏறி வருகிறார்?
- எகிப்துக்கு (19:1)

65. எகிப்தியர் உள்ளத்தில் எதை இழப்பர்?
- ஊக்கம் இழப்பர் (19:3)

66. நெடுஞ்சாலை எந்தெந்த நாடுகளுக்கு உருவாகும்?
- எகிப்திலிருந்து அசீரியாவுக்குச் செல்ல (19:23)

67. கடவுளின் ஆசியாக விளங்கும் மூன்று நாடுகள் யாவை?
- இஸ்ரயேல். எகிப்து, அசீரியா (19:24)

68. அசீரியாவின் மன்னன் யார்?
- சார்கோன் (20:1)

69. அஸ்தோது நகருக்கு வந்த படைத்தளபதி பெயர் என்ன?
- தர்த்தான் (20:1)

70. **படைகளின் ஆண்டவர் செபுனாவுக்கு எதிராகக் கூறும் இறைவாக்கு என்ன?**

– உன்னை உன் பதவியிலிருந்து இறக்கிவிடுவேன் (22:19)

71. **இலக்கியாவின் மகன் பெயர் என்ன?**

– எலியாக்கீம் (22:20)

72. **தீர் நகரம் எவ்வளவு காலம் மறக்கப்படும்?**

– 70 ஆண்டுகள் (23:15)

73. **ஆண்டவர் எப்போது தீர் நகரைத் தேடி வருவார்?**

– 70 ஆண்டுகளுக்குப்பின் (23:17)

74. **ஆண்டவர் பூவுலகை எப்படிச் சிதறடிப்பார்?**

– வெறுமையாக்கிப் பாழடையச் செய்து அதன் நிலப்பரப்பை உருக்குலையச் செய்து அதில் வாழ்வோரை சிதறடிப்பார் (24:7)

75. **நீதிமானின் நெறிகள் எப்படியானது?**

– நேரியவை (26:7)

76. **யாக்கோபின் எதிர்காலம் பற்றி ஆண்டவர் கூறுவது என்ன?**

– வருங்காலத்தில் வேரூன்றி நிற்பான். இஸ்ரயேல் பூத்து மலருவான் உலகத்தையெல்லாம் கனிகளால் நிரப்புவான் (27:6)

77. **திராட்சை ரசத்தால் தடுமாறுகிறவர்கள் யார்?**

– குருக்களும் இறைவாக்கினரும் (28:1)

78. **தாவீது பாசறை அமைத்த நகரம் எது?**

– அரியேல் (29:1)

79. **இறைவாக்கினர், திருக்காட்சியாளர்களின் நிலை என்ன?**

– உங்கள் கண்களை மூடியுள்ளார். பார்வையை மறைத்துள்ளார். (29:10)

80. **இன்னும் சிறிது காலத்தில் லெபனோன் எப்படி மாறும்?**

– வளம் மிகு தோட்டமாகும் வளம் மிகு நிலம் காடாக

81. **யாக்கோபைக் குறித்து ஆண்டவர் கூறுவதென்ன?**

– யாக்கோபு இனி மானக்கேடு அடைவதில்லை (29:32)

82. **எந்த விலங்கினங்களைப்பற்றி இறைவாக்கு சொல்லப்பட்டது?**

– நெகேபிலுள்ள விலங்குகள் பற்றி (30:6)

83. **எகிப்தியர் செய்யும் உதவி எப்படிப்பட்டது?**

– பயனற்றது

84. என் தலைவரும் இஸ்ரயேலின் தூயவருமான ஆண்டவர் கூறுவது என்ன?

- நீங்கள் என்னிடம் திரும்பி வந்து அமைதியுற்றால் விடுதலை பெறுவீர்கள் (30:15)

85. குடியிருப்போரைப் பார்த்து ஆண்டவர் என்ன கூறுகிறார்?

- சீயோன் வாழ் மக்களே நீங்கள் இனி ஒருபோதும்அழமாட்டீர்கள் (39:19)

86. படைகளின் ஆண்டவர் எருசலேமை எப்படிப் பாதுகாக்கிறார்?

- பறக்கும் பறவைகள் போல் பாதுகாத்து விடுவிப்பார் (31:5)

87. மூடர் எதனைப் பேசுகின்றனர்?

- மடமையைப் பேசுகின்றனர் (32:6)

88. அரண்மனை, குன்றும், மாடமும், எப்படியாக மாறும்?

- பாழடையுமாறு விடப்படும், குன்றும் காவல் மாடமும் என்றுமுள குகைகளாகும் (32:14)

89. ஆவியானது எம்மேல் எப்படி பொழியப்படும்?

- உன்னதத்திலிருந்து (32:5)

90. கொள்ளைப் பொருட்கள் எப்படிச் சேர்க்கப்படுகின்றன?

- பச்சை புழுக்கள் சேர்ப்பது போல் (33:4)

91. மீட்பு தரும் செல்வங்கள் யாவை?

- ஆண்டவரைப்பற்றிய அச்சமே அரும் செல்வம் (33:6)

92. ஏதோமின் நீரோடைகள் எப்படி மாறும்?

- கீலாக மாறும் (34:9)

93. யூதாவின் அரண் சூழ்ந்த நகரைப் பிடித்த மன்னன் யார்?

- அசீரியாவின் மன்னன் சனகெரிப் (36:1)

94. அசீரிய மன்னன் இலாக்கிசிலிருந்து பெரும் படையுடன் எருசலேமிற்கு யாரை அனுப்பினான்?

- இரப்சாக்கே (36:2)

95. இரப்சாக்கே என்ன மொழியில் பேசினான்?

- யூதா நாட்டு மொழி (36:13)

96. எத்தியோப்பியா மன்னன் பெயர் என்ன?

- திர்காக்கா (39:9)

97. யூதா அரசர் யார்?

- எசேக்கியா (37:10)

98. ஆண்டவரின் தூதர் அசீரியரின் பாசறையில் எத்தனை பேரை கொன்றனர்?

– ஓர் இலட்சத்து எண்பத்தையாயிரம் பேர் (37:36)

99. அசீரிய மன்னன் செனகரிபு அங்கிருந்து திரும்பிப்போய் எங்கே தங்கியிருந்தான்?

– நினிவே (37:37)

100. எசேக்கியா என்ன நிலையில் இருந்தார்?

– நோய்வாய்ப்பட்டுச் சாகும் நிலையில் இருந்தார் (38:1)

101. பாபிலோன் மன்னன் யார்?

– பலாதான் (39:1)

102. யாக்கோபின் அரசர் என்ன கூறுகிறார்?

– உங்கள் ஆதாரங்களை எடுத்துரையுங்கள் (41:21)

103. ஆண்டவரின் ஊழியர் பற்றிய சரிதையில் என்ன சொல்கிறார்?

– இதோ என் ஊழியன். அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் (42:1)

104. தாம் தெரிந்துகொண்ட இஸ்ராயேலை ஆண்டவர் எப்படி அழைக்கிறார்?

– உன்னைப்படைத்தவரும் கருப்பையில் உன்னை உருவாக்கியவரும் உனக்கு உதவி செய்பவரும் நாமே (44:2)

105. ஆண்டவர் என்று கையில் எழுதியவன் எந்தப் புனைப்பெயரிட்டுக் கொள்வான்?

– இஸ்ரயேல் என்ற பெயரிட்டுக்கொள்வான் (44:5)

106. சிலை செதுக்குவோரின் நிலை எப்படியாகும்?

– வீணரே (44:9)

107. ஆண்டவர் பிற இனத்தாரை எந்த மன்னர் முன் அடிபணியச் செய்தார்?

– சைரசு மன்னன்முன் (45:1)

108. பிற இனத்தார் பால் இஸ்ரயேலைப் பார்த்து ஆண்டவர் கூறுவது என்ன?

– ஒளியாகவும் ஏற்படுத்துவேன் (49:6)

109. ஆண்டவர் ஆறுதல் அளிப்பதாக எந்த நகரத்துக்கு வாக்கு சொன்னார்?

– சீயோன் (51:3)

110. எருசலேமே மகிழ்ந்து பாடு என்று யாரைப் பார்த்துக் கூறுகிறார்?

– பேறுகால வேதனை அறியாதவளை (54:1)

11. எதனால் நீ நிலைநாட்டப்படுவாய்?

- நேர்மையில் (54:14)

12. என் வாயினின்று புறப்பட்டுச் செல்லும் வாக்கு எப்படியிருக்கும் என ஆண்டவர் கூறுகிறார்?

- வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை (55:11)

13. அண்ணகன் எந்த வார்த்தையை கூறாதிருக்கட்டும்?

- நான் வெறும் பட்ட மரம் (56:3)

14. குரலை உயர்த்திப் பேசும்போது எப்படியிருக்கவேண்டும்?

- எக்காளம் முழங்குவதுபோல் குரலை உயர்த்த வேண்டும் (58:1)

15. திருத்தூயகத்தை அழகுபடுத்தக் கொண்டுவரப்படுபவை எது?

- தேவதாரு, புன்னை, ஊசியிலை மரம் (60:13)

16. தம் வலக்கை மேலும் வலிமைமிக்க புயத்தின் மேலும் எந்த வார்த்தையைக் கூறி ஆணையிட்டார்?

- உன் தானியத்தை இனி நான் உன் பகைவர்க்கு உணவாகக் கொடுக்க மாட்டேன் (62:8)

17. காளையை வெட்டிப் பலியிடுவோன் எப்படி அழைக்கப்பட்டான்?

- மனிதரைக் கொலை செய்வது ஒன்றாம் (66:3)

18. ஆண்டவர் யார் யாரைத் தேற்றுவதுபோல் தேற்றுவார்?

- தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் அவர் நம்மைத் தேற்றுவார் (66:13)

எரேமியா

பொது:

1. எரேமியா பெயரின் பொருள் விளக்கம் தருக.
   - ஆண்டவர் என்னை மேன்மைப்படுத்தினார்
   - ஆண்டவர் என்னை நிலைநிறுத்தினார்.
2. எரேமியா பிறந்த ஊர், தந்தை பெயர் யாது?
   - ஊர் – அனத்தோத்.
   - தந்தை– இலிக்கியா.
3. இஸ்ராயேலன் அனத்தோத்தை பிடிக்குமுன் எவ்வாறு இருந்தது?
   - அனாத்து என்ற பெண் தெய்வத்தின் புனித இடமாக இருந்தது.
4. இந்நூலில் அடிக்கடி வரும் வார்த்தை எது?
   - உடன்படிக்கை.
5. மறுமலர்ச்சி கொண்டு வந்தவர் யார்? எப்போது?
   - கி.மு. 622 ல் யோசியா.

நூலிலிருந்து:

1. எரேமியாவின் தந்தையின் பெயர் என்ன?
   - இலிக்கியா (1:1)
2. எரேமியா பிறந்த ஊர் எது?
   - அனத்தோத் (1:1)
3. எரேமியாவுக்கு யார் காலத்தில் அழைப்பு வந்தது?
   - யோசியாவின் காலத்தில் (1:2)
4. எரேமியாவுக்கு ஆண்டவர் இடும் கட்டளை யாது?
   - நான் உன்னை விடுவிக்க உன்னோடு இருக்கிறேன்
5. ஆண்டவர்க்கு அர்ப்பணிக்கப்பட்ட இனம் எது?
   - இஸ்ரயேல் இனம் (2:3)
6. இஸ்ரயேல் மக்கள் செய்த இரண்டு தீச்செயல்கள் யாவை?
   - பொங்கி வழிந்தோடும் நீரூற்றாகிய என்னைப் புறக்கணித்தார்கள். தண்ணீர் தேங்காத உடைந்த குட்டைகளைத் தங்களுக்கென்று கட்டிக்கொண்டார்கள் (2:16)

7. **இஸ்ரயேல் நாட்டை நொறுக்கியவர்கள் யார்?**

– மெம்பிசு, தகுபனேசு நகரினர் (2:16)

8. **இஸ்ரயேலை எதற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார்?**

– பாலைநிலத்தில் பழகியதும் காம வேட்கையில் மோப்பம் பிடிப்பதுமான காட்டுக் கழுதை நீ என்கிறார் (2:24)

9. **இஸ்ரயேலரின் வழிபாடு எப்படி இருந்தது?**

– மரத்தை நோக்கி தந்தை கல்லை நோக்கி தாய் என்பர் (2:27)

10. **இஸ்ரயேலின் உண்மை தவறிய சகோதரி யார்?**

– யூதா (3:7)

11. **யூதா இனத்தாருக்கு ஆண்டவரின் கட்டளை யாது?**

– விருத்தசேதனம் (4:4)

12. **ஆண்டவரின் கோபம் நீங்க என்ன செய்ய வேண்டும்?**

– சாக்கு உடை உடுத்தி அழுது புலம்புங்கள் (4:8)

13. **கேடுபற்றி முன்னறிவித்த இடம் எது?**

– எப்ராயிம் (4:15)

14. **அறிவிலிகள் எனப்படுபவர் யார்?**

– மதிகெட்ட மக்கள். அவர்கள் உய்த்துணரும் ஆற்றல் இல்லாதவர்கள் (4:22)

15. **நகரினர் அனைவரும் யாருக்குப் பயந்து ஓடினர்?**

– குதிரைவீரர், வில்வீரர் எழுப்பும் ஒலி கேட்டு ஓடினர் (4:29)

16. **எந்த வீட்டார் கடவுளுக்கு எதிராகத் துரோகம் செய்தனர்?**

– யூதா வீட்டார் (5:11)

17. **கலகக்காரர்களின் மனதை எதற்கு ஒப்பிடுகிறார்?**

– வெண்கலத்திற்கும் இரும்பிற்கும் (6:28)

18. **இஸ்ரயேல் மக்கள் முன்னாளில் குடியிருந்த இடம் எது?**

– சீலோ (7:12)

19. **தோபேத்தில் உள்ள தொழுகைக் கூடம் எப்படி அழைக்கப்படும்?**

– படுகொலை பள்ளத்தாக்கு (7:32)

20. **யூத மக்களைத் தண்டிக்க ஆண்டவரால் அனுப்பப்படுபவை எவை?**

– பாம்புகளும் நச்சுப்பாம்புகளும் (8:17)

21. **இஸ்ரயேலர் ஆண்டவருக்கு எதனால் சினம் மூட்டினர்?**

– செதுக்கிய உருவங்களாலும் வேற்றுத் தெய்வச் சிலைகளாலும் (8:19)

22. **பொய்பேச எதைப் பழக்கியுள்ளதாக எரேமியா கூறுகிறார்?**

– நாவைப் பழக்கியுள்ளார்கள் (9:5)

23. **இதயத்தில் விருத்தசேதனம் செய்துகொள்ளாதவர்கள் யார்?**

– இஸ்ரயேல் வீட்டார் யாவரும் (9:26)

24. **வேற்றினத்தாரின் கடவுள் சிலைகள் யாருடைய வேலைப்பாடுகள்?**

– தேர்ச்சி பெற்ற கைவினைஞரின் வேலைப்பாடுகள் (10:9)

25. **இஸ்ரயேலின் உரிமைச் சொத்து எது?**

– படைகளின் ஆண்டவர் (10:16)

26. **உடன்படிக்கைக்குச் செவிகொடுக்காதவன் யார்?**

– சபிக்கப்பட்டவன் (11:3)

27. **எது கடவுளுக்கு எதிராகச் சான்று பகர்ந்ததாகக் கூறுகிறார்கள்?**

– இஸ்ரயேல் மக்கள் குற்றங்களே அவர்களுக்கு எதிராய் சான்று பகர்ந்தன (14:7)

28. **எசேக்கியாவின் மகன் பெயர் என்ன?**

– மனாசே (15:4)

29. **நேர்மையற்ற வழிகளில் செல்வம் சேர்ப்போர் எதற்கு ஒப்பாவார்?**

– தாம் இடாத முட்டைகளை அடைகாக்கும் கௌதாரி போன்றோர் (16:11)

30. **இம்மேர் என்பவனின் பெயர் என்ன?**

– பஸ்கூர் (20:1)

31. **பஸ்கூர்க்கு எரேமியா கூறிய பெயர் என்ன?**

– மாகோர் மிசாபீபு (20:3)

32. **செதேக்கியா அரசன் எரேமியாவிடம் அனுப்பியவர்கள் யார்?**

– பஸ்கூர், செப்பனியா (21:1)

33. **செப்பனியாவின் தந்தை பெயர் என்ன?**

– மாசேயா (21:1)

34. **யூதா அரசனைப்பற்றி ஆண்டவர் கூறுவது என்ன?**

– நாடு கடத்தப்பட்ட இடத்திலேயே சாவான். இந்த நாட்டை இனி ஒருபோதும் பாரான் (22:12)

35. **யோயாக்கிம் மகன் பெயர் என்ன?**

– கோனியாவே (22:24)

36. யோயாக்கிம் அரசனின் மக்களை எந்த அரசர்கள் கையில் ஒப்புவிப்பதாகக் கூறினார்?

– நெபுகத்னேசரின், கல்தேயரின் கையில் ஒப்புவிப்பதாக கூறினார்கள் (22:25)

37. எரேமியா போலி இறைவாக்கினர்களுக்கு எவ்வாறு ஒப்பிடுகிறார்?

– நாளைத் தானியத்தோடு (23:28)

38. யூதாவிலிருந்து கல்தேயரின் நாட்டுக்கு அனுப்பியிருந்தவர்கள் யார்?

– நல்ல அத்திப் பழங்களைப் போன்றவர்கள். (24:5)

39. எரேமியாவிற்கு எத்தனை ஆண்டுகள் ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது?

– இருபத்து மூன்று ஆண்டுகள் (25:3)

40. கோபத்தின் கிண்ணத்தினை இறுதியாகப் பருகுபவன் யார்?

– சேசாக்கு மன்னன். (25:26)

41. எரேமியா சிறைப்பட்டபோது யூதாவின் தலைவர்கள் அமர்ந்த இடம் எது?

– புது வாயில் (26:10)

42. எசேக்கியாவின் காலத்தில் வந்த இறைவாக்கினர் யார்?

– மோரசேத்தைச் சார்ந்த மீக்கா (26:18)

43. உரியாவின் சொந்த ஊர் எது?

– சிரியத்து எயாரி (26:20)

44. எரேமியாவிற்கு உதவியாக இருந்தவன் யார்?

– அகிக்காம். (26:24)

45. அசூரின் என்பவனின் மகன் யார்?

– அனனியா (28:1)

46. எரேமியா எழுதி அனுப்பிய மடல்கள் எனப்படுபவர் யார்?

– மூப்பர்கள், குருக்கள், இறைவாக்கினர்கள் (29:1)

47. எரேமியா காலத்தில் உடன்படிக்கை யார் யாருடன் ஏற்படுத்தப் பட்டது?

– இஸ்ரயேல் வீட்டாரோடும், யூதாவின் வீட்டாரோடும் (31:31)

48. ஆண்டவருக்காகக் கட்டியெழுப்பப்பட்ட நகர் எது?

– அனனியேல் கோபுரம் முதல் மூலை வாயில்வரை (31:38)

49. அனமேல் என்பவனின் தந்தை பெயரென்ன?

– சல்லூமின் (32:1)

50. **அனமேலிடமிருந்து வாங்கப்பட்ட நிலத்தின் விலையென்ன?**

– பதினேழு செக்கேல் வெள்ளி (32:9)

51. **ஒப்பந்த விலை பத்திரங்களை நெடு நாளைக்கு எதில் வைத்து பாதுகாத்தனர்?**

– மண்பாண்டத்தில் (32:14)

52. **செதேக்கியாவிடம் கூறிய ஆண்டவரின் வாக்கென்ன?**

– நீ வாளால் மடியமாட்டாய். அமைதியாகவே சாவாய். (34:5)

53. **யூதாவின் அரண்சூழ் நகர்களுள் எஞ்சியிருந்த நகரம் யாவை?**

– இலாக்கிசு, அசேக்கா (34:7)

54. **யூதாவின் மக்கள் உடன்படிக்கையை மீறியதன் விளைவு என்ன?**

– வாள், கொள்ளைநோய், பஞ்சம் (34:17)

55. **எரேமியாவின் மகன் பெயர் என்ன?**

– யாசனியா (35:3)

56. **எரேமியா சொல்ல அதனை ஏட்டுச் சுருளில் எழுதியது யார்?**

– பாரூக் (36:5)

57. **எரேமியாவின் ஏட்டுச் சுருள் படித்துக்காட்டப்பட்ட இடம் எது?**

– ஆண்டவர் இல்லத்தின் புதுவாயிலை ஒட்டிய மேல முற்றத்து அறையில் (36:10)

58. **ஏட்டுச் சுருளை எரிக்கும்போது தடுத்தவர்கள் யார்?**

– எல்னாத்தான், தெலாயா, கெமரியா. (36:25)

59. **எரேமியாவைக் கைது செய்து அடைக்கப்பட்ட இடம் எது?**

– யோனத்தான் வீடு (37:14)

60. **கல்தேயப் படையினர் செதேக்கியாவைப் பிடித்த இடம் எது?**

– எரிகோ சமவெளி (39:5)

61. **எரேமியாவை விடுதலை செய்ய அனுப்பிய தலைவர்கள் யார்?**

– நேர்கல் சரேட்சர் ஏப்மாகு (39:13)

62. **கெதலியாவை கொன்றவன் யார்?**

– நெத்தனியாவின் மகன் இஸ்மயேல் (41:2)

63. **யோகனான் தன் படையுடன் குடியேறிய பகுதி எது?**

– தகபனகேஸ்

64. **நெக்கோவை முறியடித்த மன்னன் யார்?**

– நெபுகத்னேசர் 46:2

65. மோவாபின் செருக்கு எப்படிப்பட்டது?

– இறுமாப்பு, ஆணவம், செருக்கு, அகங்காரம், அகந்தை. (48:29)

66. ஏலாமுக்கு எதிரான கூற்று யாது?

– ஏலாமின் வில்லை முறித்தல், நான்கு திசைகளினின்று நால்வகைக் காற்றுகளை வரவழைத்துச் சிதறடித்தல் (49:35)

67. எருசலேமின் இரத்தப்பழி எதன் மேல் இருந்தது?

– கல்தேயக் குடிமகன் மேல் (51:35)

68. எரேமியாவின் பாபிலோனுக்கு எதிரான வாக்கை பாபிலோனில் படித்துக்காட்ட பணிக்கப்பட்டவன்?

– செராயா (51:61)

69. அமுற்றாள் என்பவள் யார்?

– லிப்னாவைச் சார்ந்த எரேமியாவின் மகள் (52:1)

70. பாபிலோனியர்கள் எடுத்துச் சென்ற பொருட்கள் எவை?

– வெண்கலத் தூண்கள், சாம்பல் சட்டி, அள்ளு கருவிகள் போன்ற எல்லா வெண்கலப் பாத்திரங்கள். (52:17)

71. பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்ட வெண்கல தூணில் என்ன இருந்தது?

– நூறு மாதுளம் பழ வடிவங்களுள், தொண்ணூற்றாறு பக்கவாட்டில் தெரிந்தன.

72. நெபுசரதான் கூட்டி சென்ற மக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

–4,600 பேர் (52:30)

73. யோயாக்கிம் விடுவிக்கப்பட்ட காலம் எது?

– எவில்மெரதாக்குலின் ஆட்சியேற்ற ஆண்டில் 12 மாதத்தின், 25 – ஆம் நாள் ஆகும். (52:31)

புலம்பல்

1. எருசலேம் கறைப்பட்டது எதனால்?

   – ஏராளமாய்ப் பாவம் செய்தாள் (1:8)

2. சீயோன் மகளுடைய கூடாரத்தின்மேல் ஆண்டவர் என்ன செய்தார்?

   – தம் சினத்தை நெருப்பெனக் கொட்டினார் (2:4)

3. யூதா என்னும் மகளுக்கு ஆண்டவர் செய்தது என்ன?

   – அழுகையையும் புலம்பலையும் மிகுதியாக்கினார் (2:5)

4. ஆண்டவர் மறக்கப்படச் செய்தது எதை?

   – விழாக்களையும், ஓய்வுநாளையும் (2:6)

5. ஆண்டவர் உணவாக ஊட்டியது எதை?

   – புழுதியை (3:16)

6. பசியினால் மாண்டவர்களைக் காட்டிலும் வாளினால் மாண்டோர்க்குக் கிடைக்கும் கைம்மாறு என்ன?

   – நற்பேறு பெற்றோர் (4:9)

7. வேற்றினத்தார் கூறியது என்ன?

   – இனி நம்மிடம் குடியிரார் (4:15)

எசேக்கியேல்

பொது:

1. எசேக்கியேல் காட்சி கண்ட ஆண்டு எது?

– கி.மு. 593 பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட 4 ஆண்டுகள் கழித்து காட்சி வருகிறது.

2. அடையாளச் சொல்லின் கருத்தைச் சொன்னவர் யார்?

– எசேக்கியேல்.

3. எசேக்கியேல் பற்றி குறிப்பு தருக.

– இவர் ஓர் குரு, இறைவாக்கினர், பாடகர், இறையியல் வல்லுநர், மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

நூலிலிருந்து:

1. எசேக்கியேல் என்பதன் பொருள் யாது?

– ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்

2. எசேக்கியேல் எந்த குலத்தைச் சார்ந்தவர்?

– அர்ச்சகன் குலம்

3. எசேக்கியேலின் தந்தை பெயர் யாது?

– பூசி (1:1)

4. இஸ்ரயேல் மக்களின் குணங்கள் யாது?

– வன்கண்ணும், கடின இதயமும் (2:4)

5. தெல் ஆபீபில் எத்தனை நாட்கள் தங்கினார்?

– ஏழு (3:15)

6. எசேக்கியேல் நாளொன்றுக்குச் சாப்பிடும் உணவின் அளவு?

– இருபது செக்கேல் நிறையுள்ள உணவு

7. இஸ்ரயேலின் தெய்வ உருவங்களுக்குத் தூபம் காட்டியவர் யார் யார்?

– மூப்பர்கள் எழுபது பேர், சாப்பானின் மகன் யாசனியா (8:11)

8. கெருபுகளின் உடல் முழுவதும் இருந்த சக்கரங்களின் பெயர் என்ன?

– சுழல் சக்கரங்கள் (10:13)

9. தீய ஆலோசனை தருபவர் எனக் கருதப்பட்டவர் யார்?

– யாசனியா, பெலந்தியா (11:1)

10. இஸ்ரயேல் மக்களுக்கு அடையாளமாக ஏற்படுத்தப்பட்டவர் யார்?

– எசேக்கியேல் (12:6)

11. எருசலேம் பிறந்தது எவ்வாறு?

– கானான் நாட்டிலே, உன் தந்தை ஓர் எமோரியன் உன் தாய் ஓர் இத்தியன் (16:3)

12. பாவக் கறையைப் போக்கப் பயன்படுத்தப்படுபவை எவை?

– தண்ணீர், எண்ணெய் (16:9)

13. இஸ்ரயேலைக் குறித்துக் கூறப்பட்ட பழமொழி எது?

– புளித்த திராட்சைப் பழங்களைப் பெற்றோர் தின்ன, பிள்ளைகளின் பல் கூசிற்றாம்.

14. இறைவாக்கு உரைக்கப்பட்ட தென் பகுதியில் உள்ள நிலப்பரப்பின் பெயர்?

– நெகேபின் (20:46)

15. அம்மோனியரின் அரண்சூழ் எது?

– இராபா (21:20)

16. ஓகோலா, ஓகலிபா பொருள் என்ன?

– ஓகோலா – சமாரியா, ஓகலிபா–எருசலேம் (23:4)

17. மோவாப் நாட்டின் மகிமையுள்ள பகுதி எது?

– பெத்தமிமோத்து, பாகால் மெகோன், கிரியத்தாயிம் (25:9)

18. தீர் நகருக்கு எதிராகப் படையுடன் வந்த மன்னன் யார்?

– நெபுகத்னேசர் (26:7)

19. பாசானின் கப்பல் துடுப்புக்கள் எதனால் செய்யப்பட்டவை?

– கருவாலி மரங்களால் (27:6)

20. தீர் நகரின் படையில் இருந்தவர்கள் யார்?

– பாரசீகர், லூதியர், பூத்தியர் (27:10)

21. பார்வோனின் மக்களை எதனுடன் ஒப்பிட்டனர்?

– லெபனோனின் கேதுரு மரங்களுக்கு (31:3)

22. மெசேக், தூபால் இனத்தவர்களின் தலைவன் யார்?

– கோகு (38:2)

23. கோகுக்கு எதிரான இறைவாக்கு என்ன?

– பெருமழையையும், கல்மழையையும், நெருப்பையும், கந்தகத்தையும் (38:22)

வழிப்போக்கர்களின் பள்ளத்தாக்கு யாருக்குக் கொடுக்கப்பட்டது?
- அமோன் கோகு பள்ளத்தாக்கு

கோகு கூட்டத்தாரின் பள்ளத்தாக்கிற்கு வேறு பெயர்?
- அமோனா (39:16)

ஆலய முற்றத்தின் பக்கங்களில் எத்தனை அறைகள் இருந்தது?
- முப்பது அறைகள் (40:17)

பலி பீடத்தின் நீளம், அகலம், உயரம் எவ்வளவு?
- ஒரு முழ உயரமும், ஒரு முழ அகலமும், ஒரு சாண் விளிம்புகள் (43:13)

வழிபாட்டுக்குச் செலுத்தப்படும் காணிக்கையின் அளவு எவ்வளவு?
- ஒவ்வொரு கலம் அளவு கோதுமையிலும் ஒரு மரக்காலில் ஆறிலொரு பகுதியையும், ஒவ்வொரு கலம் அளவு வாற்கோதுமையிலும் ஒரு மரக்காலில் ஆறிலொரு பகுதியையும் (45:13)

பாஸ்கா திருநாள் எப்போது கொண்டாடப்படும்?
- முதல் மாதத்தின் பதினான்காம் நாள் (45:21)

வலைகள் உலர்த்தும் இடம் எவ்வளவு நீளம்?
- ஏன்கேதியிலிருந்து எனக்லயிம் வரை (47:10)

யோசேப்புக்கு உரிய பங்கு எவ்வளவு?
- இரு பாகங்கள் (47:13)

இஸ்ரயேலின் வடக்கு எல்லை எது?
- ஆமாத்து (47:17)

லேவியர்களுக்கு உரிய பங்கு எவ்வளவு?
- இருபத்தையாயிர முழ நீளமும், பத்தாயிர முழ அகலமும் (48:13)

நகர் வாயில்களிலிருந்து வெளியேறும் வழிகள் யாவை?
- ரூபனின் வாயில், யூதாவின் வாயில், லேவியின் வாயில் (48:31)

தெற்குப் புறத்தில் உள்ள வாயில்கள் யாவை?
- சிமியோன், இசக்கார், செபுலோன் (48:33)

எருசலேமின் சுற்றளவு எவ்வளவு?
- பதினெட்டாயிரம் கோல் (48:35)

தானியேல்

பொது:

1. **தானியேல் வாழ்ந்த காலம் யாது?**

– இயேசுவின் வாழ்ந்த காலம் வருவதற்கு 20 ஆண்டுகளுக்கு மு
வாழ்ந்தவர்.

2. **இந்நூல் எழுதப்பட்ட காலம் யாது?**

– 180 ஆம்– 100 க்கும் இடைப்பட்ட காலம்.

3. **தானியேல் என்பதன் பொருள் யாது?**

– கடவுள் தீர்ப்பிடுகிறார்.

நூலிலிருந்து:

1. **அரண்மனை அலுவலரின் தலைவன் யார்?**

– அஸ்பெனாசு (1:3)

2. **தானியேலின் வேறு பெயர் என்ன?**

– பெலதசாச்சர் (1:7)

3. **தானியேலுக்குக் கடவுள் தந்த சிறப்பான கொடை என்ன?**

– எல்லாக் காட்சிகளையும், கனவுகளையும் உய்த்துணரும் ஆற்
பெற்றிருந்தார்.

4. **அறுபத்திரண்டாம் வயதில் அரசைத் தனதாக்கிக் கொண்டவர் யார்**

– மேதியனாகிய தாரியு (6:1)

5. **அரசராகிய தங்களிடமன்றி வேறெந்தத் தெய்வத்திடமோ மனிதரிடமோ யாதொரு விண்ணப்பமும் செய்கின்றவருக்கு தரப்படும் தண்டனை என்ன?**

– சிங்கக் குகைக்குள் தள்ளப்படுவான் (6:7)

6. **பாபிலோனில் குடியிருந்தவருள் முக்கியமான ஒருவரின் பெ என்ன?**

– யோவாக்கிம் (1:1)

7. **யோவாக்கிமின் மனைவி பெயர் என்ன?**

– சூசன்னா (1:2)

இவருடைய இரத்தப்பழிக்கு நான் பொறுப்பாளியல்லேன் என்று கத்தினவர் யார்?

- தானியேல் (2:46)

இஸ்ரயேல் இனத்தாருக்குக் காவல் தலைவராக எழும்புவது யார்?

- மிக்கேல் (12:1)

பாபிலோனியரிடத்தில் இருந்த சிலையின் பெயர் என்ன?

- பேல் (தானி (இ) பேல் 1:3)

பேலை வணங்கும் அர்ச்சகர்கள் மொத்தம் எத்தனை பேர்?

- எழுபது பேர் (தானி (இ) பேல் 1:10)

ஓசேயா

1. நம்பிக்கையின் வாயிலாய் மாற்றுவோம் என்று ஆண்டவர் கூறியது எதை?

– ஆக்கோர் பள்ளத்தாக்கை (2:15)

2. லேலா அம்மீயை நோக்கி என்ன கூறுவோம்?

– என் மக்கள் என்பேன் (2:23)

3. இஸ்ரயேல் மக்கள் விதைப்பது எதை? அறுக்கப்போவது எதை?

– காற்றை விதைக்கிறார்கள், கடும்புயலை அறுப்பார்கள் (8:7)

4. எப்ராயிமுக்கு இறைவாக்கினர் யார்?

– காவலாளி (9:8)

5. எப்ராயிம் தம் மக்களையெல்லாம் கூட்டிச் செல்வது எங்கு?

– கொலைக்களத்திற்கு (9:13)

6. இஸ்ரயேல் தழைத்து வளர்ந்த திராட்சைக் கொடியா? அல்லது அத்தி மரமா?

– திராட்சைக் கொடி (10:1)

7. சல்மான் போரில் யாரை அழித்தான்?

– பெத்தர் பேலை (10:14)

8. கடவுள் இஸ்ரயேலை அன்பு செய்ய ஆரம்பித்தது எப்போது?

– குழந்தையாய் இருந்தபோதே (11:1)

9. இஸ்ரயேல் மக்கள் கடவுளிடம் கேட்டது என்ன?

– எனக்கு அரசன் வேண்டும், தலைவன் வேண்டும் (13:10)

10. ஆண்டவரின் நெறிகள் எப்படிப்பட்டவை?

– நேர்மையானவை (14:10)

யோவேல்

யோவேல் என்பவர் யார்?

- பெத்துவேலின் மகன் (1:1)

வெட்டுப்புழு தின்று எஞ்சியதை எது தின்றது?

- இளம் வெட்டுக்கிளி (1:4)

வெட்டுக்கிளியின் கடைவாய்ப் பற்கள் —— சிங்கத்தின் கடைவாய்ப் பற்கள் போன்றவை.

- பெண் (1:6)

வதங்கிவிட்ட மரங்கள் யாவை?

- மாதுளை, பேரீந்து, பேரிலந்தை (1:12)

எங்கு எக்காளம் ஊதுவார்கள் என்று சொல்லப்படுகின்றன?

- சீயோனில் (2:1)

ஏதோம் நாடு செய்த தவறு என்ன?

- கடமைகளை மீறி வாளேந்தி தன் சகோதரனைத் துரத்தினான் (1:11)

தமஸ்கு நகரினர் செய்த குற்றங்கள் என்ன?

- கிலயாதை இரும்புக் கருவிகளைக் கொண்டு போரடித்தார்கள் (1:3)

காசா நகரினர் செய்த குற்றங்கள் என்ன?

- ஒரு முழு இனத்தையே ஏதோமுக்கு அடிமைகளாகக் கையளித்தார்கள் (1:6)

அம்மோனியர் செய்த குற்றம் என்ன?

- தங்கள் நாட்டு எல்லைகளை விரிவுபடுத்துவதற்காக கிலயாதின் கர்ப்பவதிகள் வயிற்றை பீறிக் கிழித்தார்கள் (1:13)

மோவாபு நகரினர் செய்த குற்றம் என்ன?

- ஏதோம் அரசின் எலும்புகளைச் சுட்டுச் சாம்பலாக்கினான் (2:1)

யூதா நகரினர் செய்த குற்றம் என்ன?

- ஆண்டவரின் திருச்சட்டத்தைப் புறக்கணித்தனர் (2:4)

ஆண்டவர் யாருக்கு எதிராகச் சான்று பகரச்சொல்கிறார்?

- யாக்கோபின் வீட்டாருக்கு (3:13)

சமாரியாவின் மலைமேல் வாழ்கின்றவர்களை ஆமோஸ் எப்படி அழைக்கிறார்?

- பாசான் பசுக்களே (4:1)

14. எங்கு வந்து கட்டளையை மீறச்சொல்கிறார்?

– பெத்தேலுக்கு (4:4)

15. ஆயிரம் பேரை அனுப்பிய நகரத்தில் எஞ்சியிருப்போர் எத்தனை பேர்?

– நூறு பேர் (5:3)

16. நூறு பேரை அனுப்பிய நகரத்தில் எஞ்சியிருப்போர் எத்தனை பேர்?

– பத்துப்பேர் (5:3)

17. இஸ்ரயேல் வீட்டாருக்கு ஆண்டவர் கூறுவது என்ன?

– என்னைத் தேடுவீர்கள், நீங்கள் வாழ்வீர்கள் (5:4)

18. இஸ்ரயேல் எட்டிக்கசப்பாய் மாற்றுவது எதை?

– நீதியை (5:7)

19. ஆண்டவர் நாடச் சொல்வது எதை?

– நன்மையை நாடுங்கள் (5:14)

20. பொதுவிடங்கள் எங்கும் கேட்கும் அழுகுரல் எது?

– ஐயோ! ஐயோ! என்ற புலம்பல் எழும்பும்

21. ஆண்டவர் அருவருப்பதும், வெறுப்பதும் எதை?

– யாக்கோபின் செருக்கை நான் வெறுக்கிறேன். அவனுடைய கோட்டைகளை அருவருக்கிறேன்.

22. ஆண்டவருக்கு எதிலே விருப்பமே இல்லை?

– வழிபாட்டுக் கூட்டங்களில் (5:21)

23. ஆண்டவர் இஸ்ரயேல் வீட்டாரை எங்கு நாடு கடத்துவார்?

– தமஸ்குவுக்கும் அப்பால் (5:27)

24. பெலிஸ்தீயரின் நகரம் எது?

– காத் (6:2)

25. யாருக்கு எதிராக ஆண்டவர் வாளுடன் வருவார்?

– எரோபவாம் (7:9)

26. பெத்தேலின் குரு யார்?

– அமட்சியா (7:10)

27. சமாரியா நாட்டுத் தெய்வத்தின் பெயர் என்ன?

– அஸ்மா (8:14)

28. மறுபடியும் கட்டியெழுப்பப்படும் கூடாரம் எது?

– தாவீதின் கூடாரம் (9:11)

ஆமோஸ்

...ாது:

ஆமோஸ் பெயருக்கு விளக்கம் யாது?

– ஆண்டவர் என்னைத் தூக்கிச் சென்றார்.

ஆமோஸ் செய்த தொழில் யாது?

– கால்நடை வளர்த்தல், ஆடு மாடு மேய்த்தல். (7:14)

ஆமோஸ் பிறப்பிடம் எது?

– பெத்தேல். (7:10)

ஆமோஸ் பிறந்த இடம், பணி செய்த இடம் யாது?

– பிறந்த இடம்– தென்னாடு.

– பணி செய்த இடம் – வடநாடு.

ஆமோஸ் இவரின் வேறு பெயர் யாது?

– நீதியின் இறைவாக்கினர்.

ஓசேயா பெயர் விளக்கம் யாது?

– யாவே என்னை மீட்கிறார்.

ஓசேயா பணி செய்த காலம் இடம் யாது?

– இரண்டாம் எரோபவாம் காலம் (கி.மு. 746–787)

ஓசேயா காலத்தில் மக்கள் வழிபட்ட கடவுள் யார்?

– பாகாய்.

...லிலிருந்து:

எந்நகருக்கான தண்டனைத் தீர்ப்பை மாற்றுவதில்லை?

– தமஸ்கு (1:3)

ஆண்டவர் எந்த நாட்டிலிருந்து முழுக் குடும்பமாய் அழைத்து வந்தார்?

– எகிப்திலிருந்து (3:1)

எதன்மீது பாசான் பசுக்கள் வாழ்கின்றன?

– சமாரியா (4:1)

யாரைத் தேடுவோர் வாழ்வார்கள்?

– ஆண்டவரைத் தேடுவோர் (5:8)

ஒபதியா

1. உயர உயர பறப்பவை யாவை?

   – கழுகு (1:4)

2. ஏசாவினுடைய மறைந்திருந்த ------ சூறையாடப்பட்டன

   – கருவூலங்கள் (1:6)

3. எந்த மலையில் உள்ளவர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு மடிவார்கள்?

   – ஏசாவின் (1:9)

4. அரசு யாருக்கு உரியதாக இருக்கும்?

   – ஆண்டவருக்கு (1:21)

5. யாக்கோபின் குடும்பத்தார் எப்படி இருப்பர்?

   – நெருப்பாய் (1:18)

6. யோசேப்பின் குடும்பத்தார் எப்படி இருப்பர்?

   – தீப்பிழம்பாய் (1:18)

7. நெகேபில் இருப்பவர்கள் எதைத் தமதாக்கிக் கொள்வர்?

   – ஏசாவின் மலையை (1:18)

8. யார் உனக்குக் கண்ணி வைத்தார்கள்?

   – உன்னோடு உண்டவர்களும், நல்லுறவு கொண்டவர்களும் (1:7)

யோனா

1. யோனா எந்த மாநகருக்கு ஆண்டவரால் அனுப்பப்பட்டார்?
   = நினிவே (1:1)
2. யோனா எந்த நாட்டிற்குத் தப்பியோட எண்ணினார்?
   = தர்சீசுக்கு (1:3)
3. யோனா கப்பலில் என்ன செய்து கொண்டிருந்தான்?
   = தூங்கிக் கொண்டிருந்தான். (1:6)
4. யோனா எந்த இனத்தைச் சார்ந்தவன்?
   = எபிரேய இனம் (1:9)
5. மீன் வயிற்றில் யோனா எத்தனை நாள் இருந்தான்?
   = மூன்று நாள் அல்லும் பகலும் (1:17)
6. மீட்பு எங்கிருந்து வருகிறது?
   = ஆண்டவரிடமிருந்து (2:9)
7. நினிவே நகரைக் கடக்க எத்தனை நாள்?
   = மூன்று நாள் (3:3)
8. அரசன் அரச உடையை களைந்துவிட்டு சாக்கு உடை உடுத்திக் கொண்டு ——— அமர்ந்தான்.
   = சாம்பலில் (3:6)
9. கடவுள் எந்த செடியை முளைக்கச் செய்தார்?
   = ஆமணக்கு செடி (4:6)

மீக்கா

பொது:

1. மீக்கா பெயரின் பொருள் யாது?

   – ஆண்டவருக்கு நிகர் யார்.

2. மீக்கா பிறந்த ஊர் யாது?

   – மோரசேத்து.

3. வரப்போகும் மெசியா எங்கிருந்து வருவதாக மீக்கா கூறுகிறார்?

   – பெத்லேகேமிலிருந்து.

4. மீட்பின் அடையாளமாக மீக்கா வலியுறுத்துவது யாது?

   – நீதி, நேர்மை, தாழ்ச்சி.

5. செப்பனியா பெயர் விளக்கம் யாது?

   –ஆண்டவர் பாதுகாக்கின்றார், ஆண்டவருக்குப் பிரியமானவர்.

6. செப்பனியா எந்த இறைவாக்கினர் காலத்தில் பணி செய்தார்?

   – நாகூம், எரேமியா காலத்தில் பணி செய்தார்.

நூலிலிருந்து:

1. மீக்கா எந்த நாட்டைப் பற்றி காட்சி கண்டார்?

   – சமாரியா எருசலேம் (1:1)

2. யாக்கோபு குற்றம் செய்த நாடு எது?

   – சமாரியா (1:5)

3. பணயங்கள் எதனால் சுட்டெரிக்கப்படும்?

   – நெருப்பினால் (1:7)

4. பறிமுதல் செய்யப்படும் பொருள்கள் எவை?

   – வீடும் உரிமைச் சொத்தும் (2:2)

5. அமைதியை நாடுவோரிடமிருந்து எதை பறிக்கிறீர்கள்?

   – மேலாடையைப் (2:8)

6. எதை உரையாற்றுவேன் என்று பிதற்றுவதாக கூறப்படுகிறது?

   – திராட்சை ரசம் மது. (2:11)

7. நீங்களோ நன்மையை வெறுத்து ——— நாடுகின்றீர்கள்.

– தீமையை (3:2)

8. மக்களின் எலும்புகளை எவ்வாறு முறிக்கின்றனர்?

– சட்டியில் போடப்படும் இறைச்சி போல (3:3)

9. வயிற்றுக்கு தீனி கிடைக்கும் வரையில் இறைவாக்கினர்கள் எவ்வாறு கூறுகின்றார்கள்?

– அமைதி உண்டாகுக் (3:5)

10. திருச்சட்டம் எங்கிருந்து வெளியாகும்?

– சீயோனிலிருந்து (4:2)

11. குருக்கள் எதற்காக போதிக்கின்றார்கள்?

– கூலிக்காக (3:11)

12. சீயோன் மகள் யாரைப்போல துடித்து வேதனைப்படுகிறாள்?

– பேறுகாலப் பெண்ணைப்போல (4:10)

13. யூதாவின் குடும்பங்களில் மிக சிறியது எது?

– எப்ராத்தா எனப்படும் பெத்லகேம் (5:2)

14. கடவுளின் திருப்பெயருக்கு அஞ்சி நடத்தல் என்பது யாது?

– உண்மையான ஞானம் (6:9)

15. யாருக்காக உன் வாய்க்கு பூட்டு போட வேண்டும்?

– உன் மார்பில் சாய்ந்திருக்கின்ற மனைவி. (7:5)

16. யாக்கோபுக்கு வாக்கு பிறழாமையையும் ஆபிரகாமுக்கு நிலையான ——— காட்டியருளும்.

– பேரன்பையும் (7:20)

நாகூம்

பொது:

1. நாகூம் என்ற பெயரின் பொருள் என்ன?
   – யாவே ஆறுதல் அளிக்கிறார்.
2. இவர் பிறந்த ஊர் எது?
   – எல்கோசு.
3. நாகூம் பற்றி குறிப்பு தருக.
   – தேசியத் தீவிரவாதி, யூதா மீது பற்று கொண்டவர்.
4. அதன் வலிமைக்கோ எல்லை இல்லை. அதற்குத் துணையாய் இருந்தது எது?
   – பூத்தும் லிபியாவும் 3:9
5. அசீரியாவின் தலைநகர் எது?
   – நினிவே.
6. அசீரிய மன்னனை நாகூம் யாரோடு ஒப்பிடுகிறார்?
   – பாகால்.

நூலிலிருந்து:

1. நாகூம் நூல் வார்த்தைகள் எப்போது எழுதப்பட்டது?
   – கி.மு. 7 ம் நூற்றாண்டு.
2. நாகூம் எந்த நகரத்தை பற்றி இறைவாக்கு உரைத்தார்?
   – நினிவே நகரத்தைப் பற்றி (1:1)
3. நாகூம் எந்த ஊரைச் சார்ந்தவன்?
   – எல்கோசை சேர்ந்தவர் (1:1)
4. நினிவே நகரை ஆண்டவர் எப்படி அழைக்கிறார்?
   – இரத்தக் கறை படிந்த நகரம் (3:1)
5. நினிவே நகரில் எவை நிறைந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது?
   – பொய்களும் கொள்ளைப் பொருளுமே நிறைந்துள்ளன. (3:1)
6. நினிவேயின் அரண்கள் எதற்கு ஒப்பிடப்படுகிறது?
   – பழுத்த கனிகள் நிறைந்த அத்தி மரங்களுக்கு ஒப்பானவை. (3:12)

7. நினிவே நநகர காவல் வீரர்கள் யாருக்கு நிகர்?

– பச்சை கிளிகளுக்கு (3:17)

8. வெட்டுக் கிளிகளுக்கு நிகராக கடவுள் யாரைச் சொல்லுகிறார்?

– அரசு அலுவலர்களை (3:17)

9. எது மீண்டும் தலைதூக்காது?

– தீமை (1:9)

10. துன்ப நாளில் கடவுள் யார்?

– காவலரண் (1:7)

11. எவை வெளிறிப் போகின்றன?

– முகங்கள் (2:10)

12. எந்நகரைவிட நீ சிறப்புற்று இருந்தாய்?

– தீப்சு (3:8)

13. எதற்கு மருந்தில்லை?

– உன் காயத்திற்கு (3:19)

அபக்கூக்கு

பொது:

1. அபக்கூக்கு பெயரின் பொருள் என்ன?

   – கட்டி அணைத்தேன்.

2. திருச்சட்டம் வலுவற்று பயனற்று போகின்றது ஆனால் எது வெளிப்படுவதில்லை?

   – நீதி (1:4)

3. அவர் திருமுன் மௌனம் காப்பது எது?

   – மண்ணுலகு. (2:20)

நூலிலிருந்து:

1. அபக்கூக்கு நூலின் காலம் யாது?

   – கி.மு. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில்.

2. அபக்கூக்கு நூலின் மையக் கருத்து யாது?

   – நேர்மையுடையோர் கடவுள் மீது கொண்டுள்ள நம்பிக்கையினால் வாழ்வார்கள்.

3. எந்த இனத்தை எழுப்புவதாக ஆண்டவர் கூறுகின்றார்?

   – கல்தேயர் (1:6)

4. அபக்கூக் என்பதன் பொருள் என்ன?

   – தழுவுதல்.

5. அபக்கூக் நூலில் வரும் சாப உரைகள் எத்தனை?

   – ஐந்து.

6. அபக்கூக் நூலின் இரண்டாம் சாப உரை யாரைப் பற்றியது?

   – நேர்மையற்றோருக்கு வரும் அழிவு (2:5)

7. எதைப் பார்த்து எழுந்திரும் என்கின்றனர்?

   – ஊமைக் கல்லிடம் (2:19)

8. எந்தக் கூடாரத்தில் வேதனை நிறைந்திருப்பதைக் காண்கிறேன்?

   – கூசா (3:7)

9. எந்த மலையிலிருந்து புனிதர் வருகிறார்?

   – பாரான் (3:3)

செப்பனியா

1. செப்பனியா என்ற சொல்லுக்கு பொருள் என்ன?
   – யாவே காப்பாற்றுகிறார்.
2. யூதாவின் அரசர் ஆமோனின் மகன் யார்?
   – யோசியா (1:1)
3. அமரியாவின் தந்தை பெயர் என்ன?
   – எசேக்கியா (1:1)
4. அமரியாவின் மகன் பெயர் என்ன?
   – கெதலியா (1:1)
5. மேற்கு பக்கப் பகைவர் என அழைக்கப்படுபவர் யார்?
   – பெலிஸ்தியர் (2:5)
6. மோவாப் அம்மோன் இவர்கள் எப்படி அழைக்கப்படுகிறார்கள்?
   – கிழக்கு பக்கத்து பகைவர்கள் என அழைக்கப்படுகிறார்
7. தெற்குப் பக்கத்து பகைவர்களாக கருதப்படுகிறவர்கள் யார்?
   – எத்தியோப்பியர் (2:12)
8. ''சீயோனே, அஞ்ச வேண்டாம்'' உன் கைகள் சோர்வடையாதிருக் கட்டும் என எந்நகரைப் பார்த்து சொல்லப்பட்டது?
   – எருசலேமை நோக்கி (3:16)

ஆகாய்

1. யூதாவின் ஆளுநன் செயல்தியேலின் மகன் யார்?

   – செருபாபேல் (1:1)

2. புதிய கோவிலுக்கு வரவேண்டிய மகிமை பற்றிய வாக்கு யார் வாயிலாக அருளப்பட்டது?

   – இறைவாக்கினர் ஆகாய் (2:2)

3. ஆகாய்க்கு இரண்டாம் முறையாக அருளப்பட்ட ஆண்டவர் வாக்கு யாது?

   – நான் விண்ணுலகையும் மண்ணுலகையும் ஒருங்கே அசைக்கப் போகிறேன் (2:21)

4. தலைமைக் குரு யோசதேக்கின் மகன் பெயர் என்ன?

   – யோசுவா (1:12)

5. தாரியூஸ் மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டில் இருந்த இறைவாக்கினர் யார்?

   – ஆகாய் (1:1)

6. மலைகளுக்கு சென்று மரங்கள் கொண்டு வந்து கட்டச் சொன்னது என்ன?

   – என் இல்லத்தை கட்டி எழுப்புங்கள் (1:8)

7. ஆண்டவரின் வீடு பாழடைந்து கிடக்கும் போது மக்கள் என்ன செய்தனர்?

   – தங்கள் வீட்டைக் கட்டுவதிலே கருத்தாய் இருந்தார்கள். (1:9)

8. ஆகாய் இறைவாக்கினர் காலத்து தலைமைக்குரு யார்?

   – யோசதாக்கு (1:12)

9. ஆகாய் கூறிய இறைவார்த்தையின் மையம் எது?

   – படைகளின்ஆண்டவரது இல்லத்தைக் கட்டுவது (1:14)

10. இறைவாக்கினர் யாரிடம் ஆலோசனைக் கேட்டனர்?

    – குருக்களிடம் (2:11)

11. செருபாபேலிடம் ஆண்டவர் என்ன சொன்னார்?

    – உன்னை என் அரச இலச்சினையாய் அணிந்து கொள்வேன் (2:23)

செக்கரியா

பொது:

1. செக்கரியா என்ற பெயரின் பொருள் யாது?

– ஆண்டவர் என்னை நினைவு கூர்கிறார்.

2. இவர் காலத்தில் வந்த மற்றொரு இறைவாக்கினர் யார்?

– ஆகாய்.

3. இவர் முன்னுரைக்கும் முக்கிய நபர் யார்?

– மெசியா.

நூலிலிருந்து:

1. செக்கரியா என்பதற்குப் பொருள் என்ன?

– ஆண்டவர் நினைவு கூர்ந்தார்.

2. செக்கரியா நூலின் முதற் பகுதி எந்த காலத்தைச் சேர்ந்தது?

– கி. மு. 520 முதல் 518 வரையுள்ள காலத்தை சேர்ந்தது.

3. செக்கரியா யாருடைய மகன்?

– பெரக்கியாவின் மகன் (1:1)

4. செக்கரியா நூலின் முதற்காட்சி எது?

– குதிரை மீது ஏறிவந்த மனிதர் பற்றிய காட்சி.

5. செக்கரிய நூலின் இரண்டாம் காட்சி எது?

– கொம்புகளைப் பற்றிய காட்சி.

6. செக்கரியா நூலின் இருக்கும் காட்சிகளில் எண்ணிக்கை எவ்வளவு?

– எட்டு

7. செக்கரியா கண்ட மூன்றாம் காட்சி யாது?

– அளவுநூலைக் கையில் பிடித்திருந்த ஒருவர் (2:1)

8. யோசுவா தூதர் முன் எப்படி நின்றிருந்தார்?

– அழுக்கு உடைகளை உடுத்தியவராய் (3:3)

9. செக்கரியா கண்ட 5 ம் காட்சி எது?

– விளக்கு தண்டும் ஒலிவ மரங்களும் (4:33)

10. பறக்கும் ஏட்டுச் சுருள் செக்கரியாவின் எத்தனையாவது காட்சி?

– 6 வது காட்சி (5:1)

11. பறக்கும் ஏட்டுச் சுருளின் அளவு யாது?

– நீளம் இருபது முழம் அகலம் பத்து முழம் (5:2)

12. செக்கரியா கண்ட ஏழாம் காட்சி என்ன?

– மரக்காலுக்குள் பெண் (5:5)

13. மரக்கால் எதை குறிக்கிறது?

– உலகெங்கும் பரவியிருக்கும் அவர்களின் தீச்செயல் (5:6)

14. செக்கரியா கண்ட எட்டாம் காட்சி எது?

– தேர்கள் (6:1)

15. அதிரா நாட்டு நகரங்களுக்கு எல்லையாக அமைந்திருப்பது எது?

– ஆமாத்து (9:2)

16. செக்கரியா நூலின் பிரிவுகள் எத்தனை?

– இரண்டு.

17. ஆடுகளை மேய்க்கப் பயன்படுத்திய இரண்டு கோல்களின் பெய என்ன?

– இனிமை ஒன்றிப்பு (11:7)

18. ஆடுகளை கைவிடுகிற பயனற்ற ஆயனுக்கு நேர்வது என்ன?

– அவனுடைய கை மேலும் வலக்கண் மேலும் வாள் வந்து விழட்டும் (11:17)

19. பாசான் நாட்டில் நிரம்பிக் காணப்படும் மரங்கள் எவை?

– கருவாலி மரங்கள் (11:2)

20. புதிய வாக்குறுதி பெற்ற நாடுகள் எது?

– அதிராக் தமாஸ்கு (9:1)

21. மெசியா எதன்மீது வருவதாக செக்கரியா நூல் சொல்கிறது?

– கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறி (9:9)

22. எப்ராயிடம் இருக்கும் படை யாது?

– தேர்ப்படை (9:10)

23. எருசலேமில் இருக்கும் படை எது?

– குதிரைப் படை (9:10)

24. தளிர் என்னும் பெயர் யாருக்கு சூட்டப்பட்டது?

– யோசதாக்கின் மகன் யோசுவாவுக்கு (6:11)

மலாக்கி

மலாக்கி என்பதன் பொருள் என்ன?

– என் தூதன் என்பது பொருள்.

மலாக்கி நூலின் காலம் யாது?

– கி.மு. 5 ம் நூற்றாண்டு.

யாக்கோபுக்கு உடன்பிறந்தவர் யார்?

– ஏசா (1:2)

தன் மந்தையில் ஊனமுற்ற கிடாய் என்றை – பொருத்தனையாக ஆண்டவர்க்கு பலியிடுபவரை ஆண்டவர் எப்படி சொல்கிறார்?

– சபிக்கப்படுவானாக (1:14)

மோசேக்கு திருச்சட்டத்தையும் கட்டளையையும் எந்த மலையில் கடவுள் வழங்கினார்?

– ஓரேபு மலையில் (4:4)

ஆண்டவர் திருப்பெயருக்கு அஞ்சி நடப்பவர் மேல் கிடைப்பது என்ன?

– நீதியின் கதிரவன் (4:2)

ஆண்டவர் வரும் நாவில் எப்படி இருப்பார்?

– புடமிடுகிறவரின் நெருப்பைப் போல் (3:2)

தோபித்து

பொது:

1. **தோபித்தின் குடும்ப நிகழ்ச்சி எந்நகரத்தில் நடந்தது?**

   – நினிவே நகரம்.

2. **சின்ன–தோபியா மனைவி பெயர் என்ன?**

   – சாரா.

நூலிலிருந்து:

1. **தோபித்து எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்?**

   – நப்தலி குலம் (1:1)

2. **தோபித்து எந்த நகரில் வாழ்ந்து வந்தார்?**

   – நப்தலி நகரில் (1:2)

3. **நப்தலி நகர் எங்கே உள்ளது?**

   – வட கலிலேயாவில் ஆசேருக்கு வடமேற்கே தென்திசையில் காதேசுக்குத் தெற்கே நப்தலி உள்ளது 1:2

4. **தோபித்து எந்த மன்னன் காலத்தில் நாடு கடத்தப்பட்டார்?**

   – அசீரியர்களின் மன்னரான எனமேசரின் காலத்தில் (1:2)

5. **நப்தலி குலத்தில் மிகவும் இளையவர் யார்?**

   – தோபித்து (1:4)

6. **எந்த மன்னன் காலத்தில் மக்கள் கன்றுக்குட்டியின் சிலைக்குப் பலி செலுத்தி வந்தனர்?**

   – இஸ்ரயேல் மன்னர் எரொபவாம் காலத்தில் (1:5)

7. **தோபித்து தம் பொருட்களில் பத்திலொரு பங்கை யாருக்குக் கொடுத்து வந்தார்?**

   – எருசலேமில் திருப்பணி புரிந்துவந்த லேவியரிடம் (1:7)

8. **தோபித்தின் மனைவி பெயர் என்ன?**

   – அன்னா (2:11)

9. **அன்னா எந்தக் குலத்தைச் சேர்ந்தவள்?**

   – நப்தலி குலம்.

10. **தோபித்து மகன் பெயர் என்ன?**

    – தோபியா (1:9)

1. தோபித்து நாடு கடத்தப்பட்டு கைதியாக எங்கு சென்றார்?

- நினிவேக்கு (1:10)

2. நினிவே நகரில் தோபித்துடன் இருந்தவர்கள் யாருடைய உணவுகளை வாங்கி உண்டு வந்தனர்?

- வேற்றினத்தாரின் உணவை (1:10)

3. தோபித்து அந்த உணவை உண்டாரா?

- இல்லை (1:11)

4. தோபித்து எத்தனை கிலோ வெள்ளி வைத்திருந்தார்?

- நாநூறு கிலோ வெள்ளி (1:14)

5. நாநூறு கிலோ வெள்ளியை யாரிடம் கொடுத்து வைத்தார்?

- கபேலிடம் (1:14)

6. மன்னன் எனமேசரின் மகன் பெயர் என்ன?

- சனகெரிபு (1:15)

7. மன்னன் சனகெரிபு யாரால் கொல்லப்பட்டான்?

- சனகெரிபின் மைந்தர்களால் (1:21)

8. தோபித் யாருக்கு அஞ்சி வாழ்ந்து வந்தார்?

- கடவுளுக்கு அதிகம் அஞ்சி வாழ்ந்து வந்தார்.

9. தோபித் தூங்கிக்கொண்டிருக்கையில் அவர் கண்களில் விழுந்தது என்ன?

- குருவியின் சூடான எச்சம் (2:10)

அன்னா செய்து வந்த வேலை என்ன?

- நெசவு வேலை (2:11)

எக்பத்தானா நகரில் வாழ்ந்துவந்த இரகுவேலின் மகள் பெயர் என்ன?

- சாரா (3:7)

சாராவின் கணவர்களை எந்தப் பேய் கொன்றுபோட்டது?

- அசுமதேயு (3:8)

தோபித் சாரா அவர்கள் இருவருக்கும் நலம் அருள இறைவன் அனுப்பிய தூதர் யார்?

- இரபேல் (3:17)

தோபித் தன் மகனை ஏன் மேதியா நாட்டுக்கு அனுப்பினார்?

- கபேலிடம் தான் கொடுத்த வெள்ளியைத் திரும்பப்பெற்றுவர (4:20)

25. இராகின் எந்த மலைப் பகுதியில் உள்ளது?

– எக்பத்தானான் (5:6)

26. இளைஞன் தோபித்து புறப்பட்டபோது அவனைத் தொடர்ந்து சென்றது எது?

– அவர்களது நாய் (6:1)

27. தோபித்து தம் பாதங்களைக் கழுவத் திக்ரீசு ஆற்றில் இறங்கியபொழுது அவரது காலைக் கவ்வ முயன்றது எது?

– பெரும் மீன் (6:2)

28. மீனின் எந்தப் பாகம் மருந்தாகப் பயன்படும்?

– பித்தப்பை, இதயம், ஈரல் (6:4)

29. பித்தப்பையின் பயன் என்ன?

– வெண்புள்ளிகள் உள்ள மனிதரின் கண்களில் பித்தப்பையைத் தடவி ஊதினால் அவர்கள் பார்வை பெறுவார்கள் (6:9)

30. தோபித்து உறவினர் யார்?

– இரகுவேல் (7:1)

31. இரகுவேல் தோபித்தை எத்தனை நாட்கள் தங்கியிருக்குமாறு வேண்டிக்கொண்டார்?

– பதினான்கு நாள்கள்

32. தோபித்து கடவுளின் தூதரை எவ்வாறு கருதி வந்தான்?

– இளைஞராக (5:5)

33. அதிர்ச்சி மேலிட இருவரும் எப்படி விழுந்தனர்?

– அச்சத்துடன் குப்புற விழுந்தனர் (12:16)

34. தோபித்து உறவினர்களின் பெயர் இரண்டு கூறுக?

– அகிக்காரும், நாதாபும் (11:19)

35. தோபித்து வானதூதருக்கு இட்ட பெயர் என்ன?

– அசரியா (9:1)

36. இரகுவேல் மனைவி பெயர் என்ன?

– எதினா (10:14)

37. தோபித்து எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

– நூற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் (14:2)

38. தோபித்து தம் மகனை எங்கே தப்பிச்செல்லக் கூறினார்?

– மேதியாவுக்கு (14:4)

39. தோபித்து எந்த நகரில் அடக்கம் செய்யப்பட்டார்?

– நினிவேயில் (14:2)

40. தோபித்து எந்த வயதில் பார்வை இழந்தார்?

– அறுபத்திரண்டு (14:2)

41. மேதியாவின் மன்னர் யார்?

– அகிக்கார் (14:15)

42. நாதாபு எப்படி மடிந்தான்?

– தன் சூழ்ச்சியிலேயே சிக்கி மடிந்தான் (14:10)

43. அன்னா எந்த நகரில் அடக்கம் செய்யப்பட்டாள்?

– நினிவே நகரில் (14:2)

யூதித்து

பொது:

1. நெபுகத்னேசரின் படைத்தலைவர் யார்?
   – ஓலேபெரின்.
2. ஓலேபெரின் முற்றுகையிட்ட நகரம் எது?
   – பெத்தூலியா.
3. ஓலேபெரின் படையிலிருந்து மக்களை விடுவித்தவர் யார்?
   – யூதித்து.
4. யூதித்து யாருக்கு முன்னோடி என விவிலியம் கூறுகிறது?
   – மரியாளுக்கு முன்னோடி.

நூலிலிருந்து:

1. மேதியரின் அரசன் யார்?
   – அர்ப்பகசாது (1:1)
2. அர்ப்பகசாது கட்டிய வலுவான நகரின் பெயர் என்ன?
   – எக்பத்தானா (1:2)
3. அர்ப்பகசாது அரசனுக்கு எதிராகப் போர் தொடுத்த மன்னன் யார்?
   – நெபுகத்னேசர் (1:5)
4. நெபுகத்னேசரின் இரகசியத்திட்டம் என்ன?
   – எல்லா நாடுகளையும் பழிவாங்குவது (2:1)
5. நெபுகத்னேசரின் படைத் தலைவன் யார்?
   – ஓலோபெர்னெசு (2:4)
6. போருக்குப் புறப்பட வீரர்கள் எத்தனை பேர்?
   – ஓர் இலட்சத்து, இருபதாயிரம் காலாட் படையினர் பன்னிரண்டாயிரம் குதிரைப் படையினர் (2:5)
7. ஓலோபெர்னெசு யாருடைய கூடாரங்களைத் தீக்கிரையாக்கினான்?
   – மிதியானியர் (2:26)
8. எல்லா இனத்தாரும் யாரை வழிபடவேண்டும் என்று ஆணையிட்டான்?
   – நெபுகத்னேசரை (3:8)

9. யூதித் காலத்தில் எருசலேமில் இருந்த தலைமைக் குருவின் பெயர் என்ன?

– யோவாக்கீம் (4:6)

10. பலிபீடத்தை எதனால் மூடினர்?

– சாக்கினால் (4:12)

11. யார் போருக்கு ஆயத்தமாக இருந்தது?

– இஸ்ரயேல் மக்கள்

12. அம்மோனியர் தலைவன் பெயர் என்ன?

– அக்கியோர் (5:5)

13. இஸ்ரயேல் மக்கள் எந்த வழிமரபினர்?

– கல்தேயரின் (5:6)

14. இஸ்ரயேல் மக்கள் முதல் முதலில் எங்கு குடியேறினர்?

– மெசப்பொத்தாமியாவில் (5:7)

15. இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் எத்தனை ஆண்டுகள் தங்கியிருந்தனர்?

– நானூறு ஆண்டுகள்

16. அக்கியோரை எங்கு பிடித்துக்கொண்டு போயினர்?

– பெத்தூலியாவுக்கு (6:10)

17. மிக்காவின் மகன் பெயர் என்ன?

– ஊசியா (6:15)

18. பெத்துலியா நகரப் பெரியோர்கள் யார்?

– ஊசியா, காபிரி, கார்மி (6:15)

19. யூதித் தந்தை பெயர் என்ன?

– மெராரி (8:1)

20. யூதித் கணவன் பெயர் என்ன?

– மனாசே (8:2)

21. மனாசே எந்தக் காலத்தில் இறந்துபோனான்?

– வாற்கோதுமை அறுவடைக் காலத்தில் (8:2)

22. யூதித் எத்தனை ஆண்டு தம் இல்லத்திலே தங்கியிருந்தாள்?

– மூன்று ஆண்டு நான்கு மாதமாய் (8:4)

23. யூதித் அழைதது வரச் சொன்ன மூப்பர்கள் யார்?

– ஊசியா, காபிரி, கார்மி (8:10)

24. யூதித் எங்கு அழைத்துச் செல்லப்பட்டாள்?

– ஓலோபெரினுடைய கூடாரத்துக்கு (10:17)

25. யூதித் எத்தனை நாள் பாளையத்தில் தங்கியிருந்தாள்?

– மூன்று நாள் (12:7)

26. யூதித்தை அழைத்து வரும்படி அனுப்பிய அலுவலர் பெயர் என்ன?

– பகோவா (12:13)

27. ஓலொபெரின் கழுத்தை இருமுறை வெட்டிக்கொன்றது யார்?

– யூதித் (13:8)

28. ஓலொபெரின் தலையை எங்கு தொங்கவிட்டானர்?

– நகர மதில்மேல் (14:1)

29. ஓலொபெரின் இறந்தது கண்டு கூடாரங்களில் இருந்தவர்கள் என்ன செய்தார்கள்?

– அச்சமும் நடுக்கமும் கொண்டு சிதறி ஓடினார்கள் (15:2)

30. யூதித்தை வாழ்த்தியவர்கள் யார்?

– யோவாக்கிமும் இஸ்ரயேல் மக்களின் ஆட்சி மன்ற உறுப்பினர்களும் (15:8)

31. யூதித் தன் கணவன் இல்லத்தில் எத்தனை ஆண்டுகள் தங்கியிருந்தாள்?

– நூற்றைந்து (16:23)

32. யூதித் எங்கு அடக்கம் செய்யப்பட்டாள்?

– பெத்தூலியாவில் தன் கணவர் மனாசேயின குகையில் (16:23)

34. யூதித்தைக் குறித்து மக்கள் எத்தனை நாள்கள் துக்கம் கொண்டாடினர்?

– ஏழு நாள்கள் (16:24)

35. யூதித்தை எந்தப் பெண்கள் வாழ்தினர்?

– இஸ்ரயேல் பெண்கள் (15:12)

36. ஓலொபெரினின் கலன்கள் அனைத்தையும் யாருக்கு உரித்தாக்கினர்?

– கடவுளுக்கு (16:19)

சாலமோனின் ஞானம்

பொது:

1. கிரேக்க கையெழுத்துப் படிகளில் இந்நூல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

– சாலமோனின் ஞானம் என அழைக்கப்படுகிறது.

2. இந்நூலின் முக்கிய கருத்து யாது?

– பாவம், தீமை முதலிய பிரச்சனைகளுக்கு விடை காண முயல்கிறது.

3. இந்நூல் எந்த இலக்கியத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது?

– மித்ரா என்ற இலக்கியத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டு.

நூலிலிருந்து:

1. வஞ்சனை நிறைந்த ஆன்மாவில் எது நுழைவதில்லை?

– ஞானம் (1:4)

2. மனிதரை கடவுளிடமிருந்து பிரிப்பவை எவை?

– நெறிகெட்ட எண்ணம் (1:3)

3. நாவை எவற்றிலிருந்து அடக்க சொல்கிறார்?

– பழிச்சொல் கூறாது (1:11)

4. பொய் சொல்லும் வாய் எதைக் கொல்லும்?

– ஆன்மாவைக்

5. நீதிமான்களை தாக்கப் பதுங்கியிருப்பது ஏன்?

– தொல்லையாய் இருக்கிறார்கள் என்று.

6. இழிவானது எது?

– சாவு. (2:20)

7. மாசற்றவர்களுக்கு கிடைப்பது எது?

– பரிசு (2:22)

8. யாருடைய பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது?

– அலகையின் (2:24)

9. அருளும் இரக்கமும் யார்மீது இருக்கும்?

– தேர்ந்து கொண்டோர் மீது இருக்கும் (3:9)

10. தீமையின் கவர்ச்சி எதை மறைத்து விடுகிறது?

– நன்மையானவற்றை (4:12)

11. எப்படிப்பட்ட மலடி பேறுபெற்றவள்?

– தூய்மை இழக்கா, தவறான உடலுறவு கொள்ளாதவர் (3:13)

12. யாருடைய மக்கள் முதுமை வரை வாழமாட்டார்கள்?

– விபசாரிகளின் மக்கள் (3:16)

13. இறைவனுக்கு ஏற்புடையவர் அவரிடம் பெறுவது என்ன?

– அன்பு (4:10)

14. தீமையின் கவர்ச்சி நன்மையானவற்றை என்ன செய்கிறது?

– மறைத்து விடுகிறது (4:12)

15. இறந்து போன நீதிமான்கள் உயிர் வாழ்கின்ற இறைப் பற்றில்லாதவர்களாக எப்படி தீர்ப்பிடுகிறான்?

– கண்டனம் செய்வார்கள் (4:16)

16. யார் தூயோர்?

– தூய்மையானவற்றைத் தூய்மையாய்க் கடைப்பிடிப்போர் (6:10)

17. ஒருவன் தனது மனதை எதன்மேல் செலுத்தும்போது நிறைவு கிடைக்கிறது?

– ஞானத்தின்மேல் (6:15)

18. எது ஞானத்தின் தொடக்கமாகும்?

– நற்பயிற்சி பெறுவதில் கொள்ளும் உண்மையான நாட்டம் (6:17)

19. ஞானத்துடன் உறவு கொள்வதில்லை எது?

– பொறாமை. (6:23)

20. கடவுளுடைய செயல்திறன் எப்படிப்பட்டது?

– கறைபடியாக் கண்ணாடி (7:26)

21. ஞானத்தை மேற்கொள்ளாதது எது?

– தீமை (7:30)

22. ஞானம் எதை கற்பிக்கிறது?

– தன்னடக்கம், விவேகம், நீதி, துணிவு. (8:7)

23. ஞானம் எதை அறியும்? எதை உய்த்துணரும்?

– இறந்த காலத்தை அறியும், எதிர்காலத்தை உய்த்துணரும் (8:8)

24. யார் அருள் கூர்ந்தாலொழிய ஞானம் எனக்குக் கிட்டாது?

– கடவுள் (8:21)

25. மனிதர்களுள் ஒருவன் எத்துணை நிறைவு உள்ளவராய் இருந்தாலும் எது இல்லையெனில் அவன் ஒன்றுமேயில்லை?

– ஞானம் இல்லையேல் (9:6)

26. பற்றுறுதியில்லா ஆன்மாவின் நினைவு சின்னமாக இருப்பது எது?

– உப்புத் தூண் (10:7)

27. எந்த பாறையிலிருந்து தண்ணீர் வழிந்தோடியது?

– செங்குத்தான (11:4)

28. இயல்பிலேயே அறிவிலிகள் யார்?

– கடவுளை அறியாத மனிதர் அனைவரும் (13:1)

29. திறமையற்றோர் கூட எங்கே பயணம் செய்ய முடியும்?

– கடலில் பயணம் (14:14)

30. விபசாரத்தின் தொடக்கம் எது?

– சிலைகள் செய்யத் திட்டமிட்டதே (14:12)

31. மனிதர்கள் பெரும் போராட்டத்தில் வாழக் காரணம் என்ன?

– அறியாமையால் (14:22)

32. பொய்யாணையிட்டாலும் தங்களுக்கு தீமை வருமென எண்ணுவதில்லை ஏன்?

– உயிரற்ற சிலைகள் மீது நம்பிக்கை வைப்பதால் (14:29)

33. மனிதன் எப்படிப்பட்ட சிலைகளை செய்வதில் பெருமை கொள்கிறார்கள்?

– போலித் தெய்வங்களின் சிலைகளைச் (15:9)

34. நன்றி கெட்டவர்களின் நம்பிக்கை எந்தப் பனிபோல் உருகிவிடும்?

– குளிர்காலத்து உறைபனிபோல் (16:29)

35. மந்திரவாதக் கலையின் மாயங்கள் என்ன ஆயின?

– தாழ்வுற்றன. (17:7)

36. சோதோம் நகரைச் சேர்ந்தோர் தங்களை நாடிவந்த வேற்றினத்தார்க்கு இடம் கொடுத்தார்களா?

– மறுத்தார்கள். (19:14)

37. நீரின் நடுவிலும் நெருப்பு எந்த ஆற்றலைக் கொண்டிருந்தது?

– இயல்பான ஆற்றலைக் (19:20)

சீராக்கின் ஞானம்

1. ஆண்டவரிடம் அச்சம் கொள்வோர் முடிவு இறக்கும் நாளில் என்ன கிடைக்கும்?

– ஆசி பெறுவார்கள் (1:13)

2. ஞானத்தின் தொடக்கம் எது?

– ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே (1:14)

3. ஞானம் எதைக் கொடுக்கும்?

– அறிவாற்றலையும் நுண்ணறிவையும் கொடுக்கும் (1:19)

4. ஆண்டவரிடம் எப்படிப்பட்ட உள்ளத்தோடு செல்லக்கூடாது?

– பிளவுபட்ட உள்ளத்தோடு. (1:28)

5. ஆண்டவர் எப்படிப்பட்டவர்?

– பரிவும் இரக்கமும் உள்ளவர், பாவங்களை மன்னிப்பவர், துன்பவேளையில் காப்பாற்றுகிறவர். (2:11)

6. அன்னையர்க்குச் சினமூட்டுவோர்க்கு கடவுள் தரும் தண்டனை என்ன?

– சபிக்கப்படுவர் (3:16)

7. பசித்திருப்போரை என்ன செய்யாதே?

– வாட்டி வதைக்காதே. (4:2)

8. ஞானம் எதில் புலப்படும்?

– பேச்சில் புலப்படும், நற்பயிற்சி வாய்மொழியால் வெளிப்படும் (4:24)

9. யாருக்கு செவிசாய்க்க வேண்டும்?

– ஏழைகளுக்கு (4:8)

10. பெருமையும் சிறுமையும் எதனால் வரும்?

– பேச்சினால் வரும். (5:13)

11. மதிப்பை உயர்த்துவது எது?

– பண்பான பேச்சு. (6:5)

12. இன்சொல் யாரைப் பெருகச் செய்யும்?

– நண்பரை (6:5)

13. நம்பித்தைக்குரிய நண்பர்கள் எதற்கு சமம்?

– பாதுகாப்புக்கு (6:14)

14. எதை புறக்கணிக்கக்கூடாது?

– தருமம் செய்வதைப் (7:10)

15. எதை விட்டு அகன்று செல்ல வேண்டும்?

– அநீதியை விட்டு (7:2)

16. மண்ணுலகின் அதிகாரம் யார் கையில் உள்ளது?

– ஆண்டவரின் கையில் (10:4)

17. மனிதருடைய இறுமாப்பின் தொடக்கம் எது?

– ஆண்டவரிடமிருந்து விலகிச் செல்வதே (10:12)

18. யாரை பழிக்கக் கூடாது?

– பாவத்தினின்று மனந்திரும்புவோரை (8:5)

19. தீரஆராயாமல் என்ன செய்யக் கூடாது?

– குற்றம் சுமத்தாதே. (11:7)

20. ஆண்டவரின் கொடைகள் யாரிடம் நிலைத்து நிற்கும்?

– இறைப்பற்றுள்ளோரிடம் (11:17)

21. எவை எவை ஆண்டவரிடமிருந்தே வருகின்றன?

– ஞானம், அறிவாற்றல், திருச்சட்டம் பற்றி அறிவு (11:15)

22. யாருக்கு நன்மை செய்ய வேண்டும்?

– நலிவுற்றோருக்கு (12:5)

23. எப்போது உண்மையான நண்பனை அறிந்து கொள்ள முடியும்?

– துன்பத்தில் (12:8)

24. தீமையில் விடாப்பிடியாய் இருப்போருக்கு என்ன பிறவாது?

– நன்மை (12:3)

25. பகைவர் எப்படி பேசுவர்?

– தேன் ஒழுகப் பேசுவர் (12:16)

26. செல்வர்கள் எப்படிப்பட்டவர்கள்?

– அநீதி இழைப்பதுமன்றி ஏழைகளை இழிவுபடுத்தவும் செய்வார்கள் (13:3)

27. வாழ்நாள் முழுவதும் எதற்காக மன்றாட வேண்டும்?

– மீட்புக்காக. (13:14)

28. இனிய உள்ளத்தின் அடையாளம் எது?

– மலர்ந்த முகம் (13:26)

29. எப்படிப்பட்ட செல்வம் நன்று?

– பாவக் கலப்பில்லாத.

30. பேராசை கொண்டோர் எப்படிப்பட்டவர்?

– உள்ளது கொண்டு நிறைவு அடைவதில்லை (14:9)

31. கருமிகள் உணவை மற்றவர்களுக்கு எப்படி கொடுப்பார்கள்?

– அளந்தே கொடுப்பார்கள். (14:10)

32. எப்படிப்பட்டவன் பேறுபெற்றவன்?

– ஞானத்தில் நாட்டம் செலுத்துவோர், ஞானத்தின் வழிகளை உள்ளத்தில் எண்ணிப் பார்ப்போர், இரகசியங்களைக் சீர்தூக்கிப் பார்ப்போர் (14:20–21)

33. படைப்பு முழுவதற்கும் எதை வெளிப்படுத்தினார்?

– இரக்கத்தை. (16:16)

34. ஆண்டவர் மனிதரை எப்படி படைத்தார்?

– தமது சாயலாக (17:3)

35. மனிதரின் செயல்கள் அனைத்தும் கடவுள் முன் எப்படி துலங்குகிறது?

– கதிரவனின் ஒளிபோல். (17:19)

36. மனிதர் அனைவரும் எவ்வாறு இருக்கிறார்கள்?

– தூசியும், சாம்பலுமாய் (17:32)

37. ஒரு சொல் எப்படிப்பட்டது?

– நல்ல கொடையை விட மேலானது அன்றோ (18:17)

38. புறங்கூறுதலை வெறுப்போரிடம் என்ன குறையும்?

– தீமைகள். (19:6)

39. எது கண்ணுக்குத் தெரியாத புதையல்?

– மறைந்து கிடக்கும் ஞானம். (20:30)

40. ஆழ்ந்த சிந்தனையில் முதிர்ச்சி பெற்றவர்கள் எப்படி இருப்பார்கள்?

– எந்தக் குழப்பத்திலும் தளர்ச்சியுற மாட்டார்கள். (22:16)

41. ஏழைகளுக்கு உயிர் எது?

– எளிய உணவே (34:21)

42. பிறரை எளிதில் நம்புவோர் யார்?

– கருத்து ஆழமற்றோர் (19:4)

43. யார் கண்டனத்துக்கு உள்ளாவர்?

– தீச்செயல்களில் மகிழ்ச்சி காண்போர் (19:5)

44. எதை நீ மற்றவர்களிடம் கூறக்கூடாது?

– என்னிடம் கூறப்பட்டதை மற்றவர்களிடம் கூறக்கூடாது (19:7)

45. ஒருவன் எத்தகையவன் என்று தெரியப்படுத்துவது எது?

– ஒருவருடைய உடையும் மனமுவந்த சிரிப்பும் நடையும் (19:30)

46. ஞானியர் எப்படி இருப்பர்?

– அமைதி காப்போர் (20:5)

47. யார் வெறுப்புக்கு ஆளாகிறார்கள்?

– வாயாடிகள் (20:5)

48. ஞானியர் எதுவரை அமைதி காப்பர்?

– தக்க நேரம் வரும்வரை (20:7)

49. யாருடைய பழமொழிகள் ஏற்றுக்கொள்ளப்படா?

– மூடர்கள் வாயினின்று வரும் பழமொழிகள் (20:20)

50. திருடன் யாரைவிட மேலானவன்?

– பொய் சொல்லும் பழக்கம் கொண்டவரைவிட (20:25)

51. திருடன் பொய் சொல்லும் பழக்கம் கொண்டவர் இவர்களில் யார் அழிவார்?

– இருவருமே அழிவை உரிமையாக்கிக் கொள்வர் (20:25)

52. பாவத்தை விட்டு ஓடுவது எதுபோல் நாம் ஓடவேண்டும்?

– பாம்பைக் கண்டு ஓடுவதுபோல பாவத்தை விட்டு ஓடிவிடு (21:2)

53. மூடர் சிரிப்பிற்கும் அறிவில் சிறந்தோர் சிரிப்பிற்கும் வித்தியாசம் என்ன?

– மூடர்கள் உரத்த குரல் எழுப்புவர், அறிவில் சிறந்தோர் அமைதியாய் புன்னகைப்பர் (21:20)

54. இறைப்பற்றில்லாதோர் எதிரியைச் சபிக்கும்போது எதைச் சபித்துக்கொள்கிறார்கள்?

– தங்களையே சபித்துக் கொள்வர் (21:27)

55. புறங்கூறுவோர் யாரை மாசுபடுத்திக்கொள்வர்?

– தங்களையே (21:28)

56. அறிவுத்திறன் கொண்ட மகள் யாரை அடைவாள்?

– கணவரை (22:3)

57. இறந்தோர்க்காகக் கொண்டாடப்படும் துக்கம் எத்தனை நாட்கள்?

– ஏழு நாள் (22:12)

58. அடிக்கடி ஆணையிடுபவர்கள் எதில் ஊறியவர்கள்?

– தீநெறியில் (23:11)

59. வீணான ஆணையிடுவோர் வீடு எதனால் நிரப்பப்படும்?

– பேரிடரால் நிரப்பப்படும் (23:11)

60. ஆண்டவரைப் பின்பற்றுவது எப்படிப்பட்டது?

– மாட்சியை எடுத்துரைக்கிறது (24:1)

61. ஞானம் தன்னைப் படைத்தவர் எங்கே இளைப்பாறினார் என்று சொல்லுகிறது?

– அன்புக்குரிய நகரில் (24:11)

62. ஆண்டவர் முன்னும் அழகுள்ளவை மூன்று யாது?

– உடன்பிறப்புகளிடையே காணப்படும் ஒற்றுமை, அடுத்திருப்பாரோடு ஏற்படும் நட்பு, தங்களுக்குள் ஒன்றி வாழும் கணவன் மனைவியர் (25:1)

63. மாட்சியும் அருளும் தரும் மரம் எது?

– தேவதாரு மரம் (24:16)

64. தீமைகளிலெல்லாம் கொடியது எது?

– பெண்ணிடமிருந்து வரும் தீமையே (25:13)

65. பெண்ணின் தீச்செயலுக்கு மிஞ்சியது எது?

– மற்ற எல்லாமே சிறிது (25:19)

66. மனைவியின் ஆதரவில் வாழ்க்கை நடத்தும் கணவர் நிலை யாது?

– அவளுடைய சினத்துக்கும் செருக்குக்கும் ஆளாகி பெரும் இகழ்ச்சி அடைவார் (25:22)

67. ஆண்டவரிடம் ஒருவன் உறுதியாய் நிலைத்திராவிட்டால் வரும் கேடு யாது?

– வீடு விரைவில் நிலைகுலைந்து விடும் (27:3)

68. கண்ணால் சாடை காட்டுபவர்கள் எதைச் செய்கின்றார்கள்?

– தீச்செயலுக்கு சூழ்ச்சி (27:22)

69. பழிவாங்க ஆசைப்படுகிறவனை யார் பழிவாங்குவார்?

– ஆண்டவரிடமிருந்து பழிக்குப்பழிபெறுவர் (28:1)

70. புறங்கூறுவோரும் இரட்டை நாக்குக் கொண்டோரும் யார்?

– சபிக்கப்பட்டவர்கள் (28:13)

71. நன்றி கெட்டவர்கள் யாரைக் கைவிட்டு விடுவார்கள்?

– தங்களை விடுவித்தவர்களை (29:16)

72. குற்றமில்லாது காணப்படும் செல்வம் பொன்னை நாடிப்போகாதவர் எப்படிப்பட்டவர்?

– பேறுபெற்றோர் (31:9)

73. கடவுளுடைய கட்டளைகளில் நிலைத்திராதவர்மேல் எது அடுத்திருக்கும்?

– அழிவு சாவு (28:6)

74. செயல்கள் எல்லாவற்றிலும் சுறுசுறுப்பாய் இருந்தால் எது உன்னை அணுகாது?

– நோய் (31:22)

75. திராட்சை ரசம் எதற்காகப் படைக்கப்பட்டது? எதற்காக அல்ல?

– மகிழ்வுக்காக, மனக்கசப்பிற்காக அல்ல (31:28–29)

76. அறிவுடையோர் எதைப் புறக்கணியார்?

– பிறருடைய கருத்துக்களை (32:18)

77. திருச்சட்டத்தை நம்புவோர் எதற்குப் பணிந்து நடப்பர்?

– கட்டளைகளுக்கு (32:24)

78. எள்ளி நகையாடும் நண்பர் எதைப் போன்றவர்கள்?

– கனைக்கும் பொலி குதிரைமீது ஏறிச்செல்பவர்கள் (33:6)

79. இறைப்பற்றுள்ளோர்க்கு முரணானோர் யார்?

– பாவிகள் (33:14)

80. அறிவிலிகளுக்குப் பறக்க இறக்கை தருவது எது?

– கனவுகள் (34:1)

81. ஆண்டவர்க்கு அஞ்சுபவர்கள் எதற்கு அஞ்சுவார்கள்?

– எதற்கும் நடுங்கவோ தயங்கவோ மாட்டார்கள் (34:14)

82. ஆண்டவர் எதை ஏற்கமாட்டார்?

– கையூட்டு கொடுக்க எண்ணுவதை (35:11)

83. எல்லா செயலாக்கத்திற்கும் முன் செல்லுகிறது எது?

– எண்ணித் திட்டமிடல் (37:16)

84. மிகுதியாக உண்பதால் வரும் விளைவு என்ன?

– நோய் உண்டாகிறது (37:30)

85. தண்டனைக்காகப் படைக்கப்பட்டவை யாவை?

– தீ, கல்மழை, பஞ்சம், சாவு (39:29)

86. ஆண்டவருடைய செயல்கள் எப்படிப்பட்டவை?

– நல்லவை (39:33)

87. கதிரவன் தோன்றி எழும்போதே எதை அறிவிக்கிறது?

– உன்னத இறைவனின் கைவேலைப்பாடு (நாள்) (43:2)

88. கடவுள் உறைபனியை நிலத்தின்மீது எவ்வாறு தெளிக்கிறார்?

– உப்பைப்போல (43:19)

89. கடவுள் யாருக்கு ஞானத்தை அருளியுள்ளார்?

– இறைப்பற்றுள்ளோருக்கு (43:33)

90. ஆண்டவருக்கு உகந்தவராக வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டவர் யார்?

– ஏனோக்கு (44:16)

91. பல மக்களினங்களுக்குக் குல முதுவராய்த் திகழ்ந்தவர் யார்?

– ஆபிரகாம் (44:19)

92. கடவுளுக்கும் மனிதருக்கும் அன்புக்குரியவர் யார்?

– மோசே (45:1)

93. மோசே ஆரோனுக்குக் கொடுத்த மாட்சியின் ஆடை எப்படிப்பட்டது?

– பூத்தையல் வேலைப்பாடு உடைய பொன், நீலம், கருஞ்சிவப்பு நிறங்கள் கொண்ட திருவுடை (45:10)

94. ஆண்டவரின் அன்புக்குரியவரான இறைவாக்கினர் யார்?

– சாமுவேல் (46:13)

95. யாருடைய கோத்திரத்தில் அடங்காத அரசு ஒன்று தோன்றியது?

– எப்ராயிமிலிருந்து (47:21)

96. சாலமோனுக்குப் பின் வந்த அறிவிலியும் மதி குறைந்தவனுமான அரசன் யார்?

– ரெகெபெயாம் (47:23)

97. இஸ்ரயேலைப் பாவம் செய்யத் தூண்டிய அரசன் யார்?

– நெபாத்து மகன் எரொபவாம் (47:24)

98. வானத்திலிருந்து நெருப்பு 3 முறை விழச் செய்த இறைவாக்கினர் யார்?

– எலியா (48:3)

99. இறந்த பிறகும் இறைவாக்கு உரைத்த உடல் யாது?

– எலிசா (48:13)

100. எந்த இறைவாக்கினர் காலத்தில் கதிரவன் பின்னோக்கிச் சென்றான்?

– எசாயா (48:23)

101. யூதாவின் அரசர்களில் யாரெல்லாம் பாவத்திற்கு மேல் பாவம் செய்யாதவர்கள்?

– தாவீது, எசேக்கியா, யோசியா (49:4)

102. தாயின் வயிற்றிலேயே இறைவாக்கினராகத் திருநிலைப்படுத்தப் பெற்றவர் யார்?

– எரேமியா (49:7)

103. பன்னிரண்டு இறைவாக்கினர்களின் எலும்புகள் கல்லறையிலிருந்து புத்துயிர் பெற்றெழுந்தன ஏன்?

– பற்றுறுதி கொண்ட நம்பிக்கையால் அவர்களை விடுவித்தார்கள் (49:10)

104. ஏனோக்கு போன்ற எவரும் மண்ணுலகின்மீது படைக்கப்படவில்லை ஏன்?

– அவர் நிலத்திலிருந்து மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார் (49:14)

105. யோசேப்பைப் போன்றவர் எவரும் பிறந்ததில்லை ஏன்?

– சகோதரர்களின் தலைவராகவும் மக்களின் ஊன்றுகோலாகவும் திகழ்ந்தார். அவருடைய எலும்புகளும் காப்பாற்றப்பட்டன (49:15)

106. கூர்மதியையும் அறிவாற்றலையும் தரும் நற்பயிற்சி அடங்கியுள்ள நூலை எழுதியது யார்?

– எலயாசாரின் மகனான சீராக்கின் மைந்தர் ஏசு (50:27)

பாரூக்கு

1. **பாரூக்கு இந்நூலை எந்த ஆண்டு எழுதி முடித்தார்?**

– கல்தேயர் எருசலேமைக் கைப்பற்றித் தீக்கிரையாக்கியபின் ஐந்தாம் ஆண்டில் ஐந்தாம் மாதத்தின் ஏழாம் நாள். (1:2)

2. **பாரூக்கு நூலை எழுதி எந்த நாட்டு அரசன் முன்பாக வாசித்தான்?**

– யோயாக்கிம் மகனும், யூதாவின் அரசனுமான எக்கோனியா. (1:3)

3. **யோசியாவின் மகனும் யூதாவின் அரசனுமான செதேக்கியாவால் செய்யப்பட்டவை எவை?**

– வெள்ளி கலன்கள் (1:9)

4. **மோசே வழியாக வாக்களித்த எவை எவைத் தொற்றிக்கொண்டன?**

– ஆண்டவர் தம் ஊழியராகிய மோசேயின் வாயிலாக நமக்கு தெரிவித்திருந்த துன்பங்களும், சாபங்களும் நம்மைத் தொற்றிக் கொண்டுள்ளன. (1:21)

5. **எவைகளை மக்கள் மீறி நடந்தனர்?**

– உம்முடைய நீதிநெறிகள் எல்லாவற்றையும் மீறி நடந்தோம். (2:12)

6. **இறைவாக்கினர் எந்த நாட்டு மன்னனுக்கு கீழ்ப்படிந்து வேலை செய்யச் சொன்னார்?**

– பாபிலோன் மன்னருக்கு. (2:21)

7. **மன்னர்களின் மூதாதையர்களின் எலும்புகள் எங்கே எறியப்பட்டன?**

– பகலின் வெயிலிலும், இரவின் குளிரிலும் (2:24)

8. **எந்த வீட்டாரின் தீச்செயல்களுக்காக கடவுளின் திருப்பெயரைப் புகழ்ந்தேற்றுவதற்கு கோயில் கட்டப்பட்டது?**

– இஸ்ரயேல் வீட்டாரும், யூதா வீட்டாரும் (2:26)

9. **இவர்களுக்கு நாம் ஆணையிட்டு உறுதியளித்த நாட்டுக்கு அவர்களை மீண்டும் அழைத்து வருவேன்.**

– ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு (2:34)

10. **ஆண்டவர் வழியில் வாழ்ந்திருந்தால் எதன் அடிப்படையில் வாழ்ந்திருப்பீர்கள்?**

– அமைதியோடு (3:13)

11. **மனிதர்கள் தங்கள் நம்பிக்கையை வைக்கும் பொன்னையும் —— யையும் குவித்து வைப்போர் எங்கே?**

– வெள்ளி (3:17)

12. பிந்திய தலைமுறையினர் எதனைக் கண்டனர்?

– ஒளியைக் கண்டனர் (3:20)

13. பிந்திய தலைமுறையினர் எதனை அறியவில்லை?

– மெய்யறிவின் வழியை (3:20)

14. பிந்திய தலைமுறைகளும், மக்களும், நல்லொழுக்க வழிகளை எந்த நாட்டில் கேள்விப்பட்டதில்லை?

– கானான் நாட்டில் (3:22)

15. எதைக் காணததால் இவர்கள் அழிந்தார்கள்?

– மெய்யறிவின் வழியை (3:27)

16. ஞானத்தை அறிந்தவர் எதன் வழியாக பூமியை நிரப்பினர்?

– கால்நடைகளால் (8:32)

17. தமக்குக் குறிக்கப்பட்ட இடங்களில் நின்று ——— ஒளி வீசி மகிழ்ந்தன.

– விண்மீன்கள் (3:34)

18. விண்மீன்களை அவர் அழைத்தார், அவை ——— என்றன?

– இதோ உள்ளோம் (3:37)

19. ஆண்டவர் எந்த ஊழியனுக்கு ஞானத்தைக் கையளித்தார்?

– யாக்கோபுக்கு (3:37)

20. எது கடவுளின் கட்டளைகளில் அடங்கிய நூல்?

– ஞானம் (4:2)

21. இஸ்ரயேலர்கள் எதனால் வேற்றினத்தாரிடம் கையளிக்கப்பட்டார்கள்?

– கடவுளின் சினத்தை மூட்டியதால் (4:6)

22. நான் ——— துன்புறுவதைக் கண்டு எவனும் மகிழாதிருக்கட்டும்?

– கைம்பெண் (4:12)

23. வேற்று மொழியினர் கொண்டிருந்த நெஞ்சம் யாது?

– கல் நெஞ்சம் (4:16)

24. எதற்குரிய சாக்கு உடையை அணிந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது?

– மன்றாட்டுக்குரிய (4:20)

25. பகைவன் தலை எப்படி மிதிக்கப்படுகின்றன?

– ஏறி மிதிக்கப்படும் (4:25)

26. எத்தனை மடங்கு ஆர்வத்துடன் கடவுளைத் தேடவேண்டும்?

– பன்மடங்கு (4:28)

27. எருசலேமுக்கு எந்தத் திசையில் அக மகிழ்ச்சி கடவுளால் அனுப்பப்படுகிறது?

– கீழ்த்திசை (4:36)

28. எருசலேமே உன் துன்ப ––– துயர ––– உரிந்து போடு,

– ஆடைகளையும், கோலத்தையும் (5:1)

29. கடவுள் எருசலேமுக்கு அளிக்கும் பெயர்கள் யாவை?

– நீதியாக ஊன்றிய அமைதி, இறைப்பற்றில் ஒளிரும் மாட்சி (5:4)

30. எந்த வார்த்தையால் கடவுள் நினைவு கூர்ந்ததற்காகக் குழந்தைகள் மகிழ்கின்றன?

– தூயவரின் சொல்லால் (5:5)

31. யூதர்கள் எத்தனை தலைமுறை பாபிலோனில் இருப்பர்?

– ஏழு தலைமுறை (6:2)

32. பாபிலோனின் தெய்வச் சிலையின் நாக்கு யாரால் செதுக்கப்பட்டது?

– கை வினைஞரால் (6:7)

33. பாபிலோன் தெய்வத்திற்கு எது இல்லை?

– உயிர் இல்லை (6:25)

34. பாபிலோன் தெய்வத்தை அனுமதிப்பவன் யார்?

– கல்தேயர்கள் (6:40)

35. பாபிலோன் தெய்வத்திற்கு முன்னால் யாரை நிறுத்துவர்?

– பேச முடியாதவனை (6:40)

36. பாபிலோனியரின் தெய்வத்தை யாரிடமிருந்து காத்துக்கொள்ள முடியாது?

– கள்வரிடமிருந்தும், கொள்ளையரிடமிருந்தும் (6:56)

1 மக்கபேயர்

1. அலெக்சாண்டர் யாருடைய மகன்?

– பிலிப்புவின் மகன் (1:1)

2. அலெக்சாண்டர் வென்ற பாரசீக அரசன் பெயர் என்ன?

– தாரியுஸ் (1:1)

3. அலெக்சாண்டர் தான் இறக்கப் போவதை அறிந்து யாரிடம் தன் நாட்டை பிரித்துக் கொடுத்தான்?

– அலுவலர்களிடம் பிரித்துக் கொடுத்தான் (1:6)

4. பெரிய அந்தியோக்கஸ் அரசன் எங்கு இருந்தவன்?

– உரோமையில் பிணைக் கைதியாக இருந்தவன் (1:11)

5. இஸ்ரயேலர் வேற்றினத்தாரின் எந்த வழக்கத்தை ஏற்படுத்தினார்கள்?

– எருசலேமில் உடற்பயிற்சி கூடம் ஏற்படுத்தினான் (1:4)

6. இஸ்ரயேலர் வேற்றினத்தாரோடு கலந்து எதற்குத் தங்களையே கையளித்தனர்?

– எல்லா வகைத் தீமைகளையும் செய்தார்கள் (1:15)

7. அந்தியோக்கு அரசனை எதிர்நிற்க முடியாமல் ஓடிய எகிப்து மன்னன் யார்?

– தாலமி (1:18)

8. அந்தியோக்கு அரசன் எருசலேம் ஆலயத்தை கொள்ளையடித்ததால் துக்கத்தில் மூழ்கிய குலம் எது?

– யாக்கோபு (1:28)

9. அந்தியோக்கு அரசனால் வரி வாங்க யூத நகரங்களுக்கு அனுப்பப்பட்ட தலைவன் எப்படி பேசினான்?

– அமைதிச் செய்தியுடன் வந்திருப்பதாக நயவஞ்சகனாக கூறினான். (1:30)

10. அந்தியோக்கு அரசானல் வரி வாங்க அனுப்பப்பட்டவர் எந்த நகரத்தைத் தங்கள் கோட்டையாக்கிக்கொண்டார்கள்?

– தாவீதின் நகரத்தை (1:33)

11. கடவுளின் திரு உறைவிடம் பாழடைந்த எதைப்போல் ஆனது?

– பாலை நிலம்போல் (1:39)

12. இஸ்ரயேலர் பலர் அந்தியோக்கிய மன்னனின் வார்த்தைப்படி நடக்க என்ன செய்தார்கள்?

– சிலைகளுக்கு பலியிட்டனர். ஓய்வு நாளை தீட்டுப்படுத்தினர் (1:43)

13. அந்தியோக்கு மன்னன் யூதர்களும் மற்றவர்களுடைய வழக்கங்களை அனுசரிக்கும்படி எருசலேமுக்கும் யூத நகரங்களுக்கும் எதைத் தூதர் வழியாக அனுப்பி வைத்தார்?

– மடல்களை (1:44)

14. மன்னன் புனித இடங்களையும் திரு உறைவிடத்தையும் தூய பொருள்களையும் என்ன செய்ய கட்டளையிட்டான்?

– கறைப்படுத்த வேண்டும் எனக் கட்டளையிட்டான் (1:46)

15. கடவுளுடைய பீடத்தின் மேல் நடுங்க வைக்கும் தீட்டை நிறுவிய ஆண்டு மாதம் நாள் எது?

– நூற்று நாற்பத்தைந்தாம் ஆண்டு, கிஸ்லேவு மாதம் பதினைந்தாம் நாள்.

16. தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்த பெண்களை மன்னனின் கட்டளைப்படி என்ன செய்தார்கள்?

– கொன்றார்கள் (1:59)

17. இஸ்ராயேலரில் பலர் எதை மீற மனமற்றவர்களாய் இருந்து கொலையுண்டார்கள்?

– தூய உடன்படிக்கையை மாசுபடுத்துவதை விடச் சாவதே சிறந்தது என கருதினர் (1:63)

18. மத்ததியா யாருடைய மகன்?

– யோவானின் மகன் (2:1)

19. மத்ததியா மகன் மக்கபேயுவின் மறு பெயர் என்ன?

– யூதா (2:4)

20. எந்த நகருக்கு ஓடிப்போனவர்களைப் பலியிடவும், கடவுளை புறக்கணிக்கவும் கட்டாயப்படுத்த மன்னனால் ஏற்படுத்தியவர்கள் எங்கு வந்தனர்?

– மோதயின் நகருக்கு (2:15)

21. மத்தத்தியாசும் அவர் மகன்களும் மன்னனின் கட்டளையைக் கடைப்பிடித்தால் என்ன பரிசுகள் கிடைக்கும் என்று வாக்களித்தனர்?

– மன்னரின் நண்பர்களாகவும், பொன், வெள்ளி மற்றும் பல்வேறு பரிசுகளாலும் நிரப்பப்படுவீர்கள் என்று வாக்களித்தனர் (2:18)

22. மன்னனின் கட்டளைப்படி பீடத்தின்மேல் சிலை பலியிட வந்த யூதனை மத்தத்தியா என்ன செய்தார்?

– பலிபீடத்தின் மீதே அவனைக் கொன்றார் (2:24)

23. நீதி நேர்மையைத் தேடியவர்கள் எங்கே சென்றார்கள்?

– பாலைநிலத்தில் தங்கி வாழ்ந்தனர் (2:29)

24. நீங்கள் எங்களை அநியாயமாய் கொலை செய்கிறீர்கள் என்பதற்கு எவை சாட்சியாய் இருக்கும் என்று குகையில் இருந்தவர்கள் கூறினார்கள்?

– வானமும் வையகமும் சான்றாக இருக்கும் (2:37)

25. எந்த நாளில் போர் செய்ததால் இஸ்ராயேலர் ஆயிரம் பேர்வரைத் தம் மந்தைகளோடு மாண்டனர்?

– ஓய்வு நாளில் போர் செய்ததால் (2:39)

26. நம் சகோதரர்கள் போல் மடியாதிருக்க என்ன செய்ய வேண்டும் என இஸ்ராயேலர் தீர்மானித்தனர்?

– ஓய்வு நாளில் யார் நம்மைத் தாக்கினாலும் அவர்களை எதிர்த்து நாமும் போர்புரிவோம் (2:41)

27. இஸ்ரயேலருள் வலிமையும் துணிவும் கொண்ட குழுவினர் யார்?

– கசிதேயர் (2:42)

28. மத்தத்தியா இறக்கும் காலம் நெருங்கியபோது தம் மைந்தர்களை நோக்கி இப்போது உறுதிப்படுத்தப்பட்டது என்று கூறுவது எதை?

– இறுமாப்பும் ஏளனமும் (2:49)

29. ஆபிரகாம் சோதிக்கப்பட்ட வேளையில் யாராய் நிலைகொண்டார்? யாராய் மதிக்கப்பட்டார்?

– பற்றுறுதி உள்ளவராய்க் காணப்பட்டார், இறைவனுக்கு ஏற்புடையவர் என மதிக்கப்பட்டார் (2:52)

30. கடவுள்மேல் பற்று மிக்கவராய் இருந்ததால் என்றுமுள குருத்துவத்தின் உடன்படிக்கையைப் பெற்றுக் கொண்டவர் யார்?

– பினகாசு (2:54)

31. திருச்சட்டத்தின்பால் பற்றார்வம் கொண்டிருந்ததால் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றவர் யார்?

– எலியா (2:58)

32. தீயவனுடைய நினைவு எங்கு திருப்பியவுடனே ஒழிந்து போகும்?

– தான் உண்டான புழுதிக்கே திரும்பி விடுவான் (2:63)

33. இளமை முதல் வலிமையும் துணிவும் கொண்டவனாக விளங்கியவன் யார்?

– யூதா மக்கபே (2:66)

34. மக்கபேயர் தம் செயல்களில் எதற்கு ஒப்பானார்?

– சிங்கத்திற்கு ஒப்பானார் (3:4)

35. அப்பொல்லோன் வேற்றினத்தாரைச் சேர்த்து போரிடுவதற்குப் பெரும் படையைக் கூட்டியது எங்கு?

– சமாரியாவில் (3:10)

36. வெற்றி கொள்வது படையின் எண்ணிக்கையை சார்ந்தது அல்ல பின் எதனால்?

– விண்ணக இறைவனிடமிருந்து வரும் வலிமையை சார்ந்தது. (3:19)

37. அந்தியோக்கு மன்னன் படைவீரர்களுக்கு எதை அளித்து எதற்கும் ஆயத்தமாய் இருக்கும்படி கட்டளையிட்டான்?

– ஓராண்டு ஊதியத்தை அளித்து (3:28)

38. அந்தியோக்கு மன்னன் எங்கு போகத் தீர்மானித்தான்?

– பாரசீக நாடு போக தீர்மானித்தான் (3:31)

39. எருசலேமில் எஞ்சியிருந்தவர்களை அழித்து அவர்களுடைய நாடெங்கும் யாரைக் குடியேற்ற அந்தியோக்கு ஆணையிட்டான்?

– அயல் நாட்டாரைக் குடியேற்ற ஆணை பிறப்பித்தான் (3:36)

40. லிசியா என்பவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட படைகள் யூதேயாவை அழிக்க எங்கு பாசறை அமைத்தார்கள்?

– எம்மாவுக்கு அருகே இருந்த சமவெளியை அடைந்து அங்கு பாசறை அமைத்தார்கள். (3:40)

41. எருசலேம் குடிகள் இல்லாமல் எதனைப் போல் இருநதது?

– பாலை நிலம் போல் (3:45)

42. இஸ்ரயேலர் முற்காலத்தில் வேண்டுதல் செய்யும் இடம் எங்கிருந்தது?

– மிஸ்பா (3:46)

43. ஆண்டவரே நீர் எங்களுக்கு உதவிபுரியாவிட்டால் நாங்கள் அவர்களை எவ்வாறு எதிர்த்து நிற்க முடியும் என்று சொல்லி எதனை உரத்து ஒலிக்க செய்தனர்?

– எக்காளம் முழக்கி (3:54)

44. ஐயாயிரம் காலாட் படையினரையும் தேர்ந்தெடுத்த ஆயிரம் குதிரைப் படையினரையும் சேர்த்து இரவு வேளையில் யூதர்களைத் தாக்கப் போனவன் யார்?

– கோர்கியா (4:1)

45. யூதாவும் அவருடைய சகோதரரும் திரு உறைவிடத்தைத் தூய்மைப்படுத்திப் புதுப்பிக்க எந்த மலையின் மீது ஏறினார்கள்?

– சீயோன் மலை மீது. (4:36)

46. தாங்கள் எழுப்பியிருந்த புதிய எரிபலி பீடத்தின்மீது பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட வேளை எது?

– விடியற்காலையில் (4:52)

47. கிலயாதில் இருந்த மக்கள் தங்கள் எல்லைகளுக்குள்ளாக இருந்த இஸ்ராயேலரை அழிக்க படை திரட்டியபோது எங்கே ஓடிப்போனார்கள்?

– தாதாமாவுக்கு தப்பியோடினர் (5:9)

48. கிழிந்த ஆடைகளோடு வந்து தங்களை அழிக்க நாடு முழுவதும் அன்னியர் வந்து நிறைந்திருக்கின்றனர் என்றவர்கள் யார்?

– கலிலேயா நாட்டு தூதுவர்கள் (5:14)

49. யூதாஸ் யூதாவைக் காப்பாற்ற எவர்களை படைகளோடு விட்டு சென்றார்?

– செக்கரியாவின் மகன் யோசேப்பையும் அசரியாவையும் விட்டு விட்டனர். (5:18)

50. யூதா எந்த நகரத்தை எதிர்த்துப் போரிட்டு ஆடவர் எல்லாரையும் கொன்று, கொள்ளையடித்து கொளுத்தி விட்டார்?

– அலேமாவை (5:35)

51. எதிரிகள் யூதாவால் முறியடிக்கப்பட்ட பிறகு தங்கள் படைக்கலங்களை எறிந்துவிட்டு எங்கு ஓடிபோனார்கள்?

– கர்னாயிமில் இருந்த கோவிலுக்கு (5:43)

52. யூதா யூதேயா நாடு செல்லும் வழியில் வலப்பக்கமோ இடப்பக்கமோ போக முடியாதபடி அமைந்திருந்த நகரம் எது?

– எபிரோன் (5:46)

53. நாமும் நமக்கு நல்ல பெயரைத் தேடிக்கொள்வோம், நாம் சென்று நம்மை சுற்றிலும் இருக்கும் பிற இனத்தாரை எதிர்த்துப் போர் செய்வோம் என்று சொன்னவர்கள் யார்?

– செக்கரியா மகன் யோசேப்பும் அசாரியாவும் (5:67,68)

54. கட்டளையின்றித் தங்கள் தீரச் செயல் புரிய விரும்பி போருக்குப் போய் மாண்டவர்கள் யார்?

– குருக்கள் (5:67)

55. பாரசீக நாட்டில் புகழ்பெற்றதும் வெள்ளி பொன் மிகுந்த நகரம் எது?

– எலிமாய் நாகர் (6:1)

56. எலிமா நகரத்தை கொள்ளையடிக்க முயன்று முடியாததால் பெரும் ஏமாற்றத்துடன் அந்தியோக்கு மன்னன் எங்கு திரும்பினான்?

– பாபிலோனுக்கு (6:4)

57. அந்தியோக்கு மன்னன் எங்கு இருந்தபோது அவனுடைய படைகள் அழிக்கப்பட்டு செய்தி அறிவிக்கப்பட்டது?

– பாரசீகத்தில் (6:5)

58. இந்த கேடுகள் எனக்கு வந்துள்ளன, இப்போது அயல் நாட்டில் துயர மிகுதியால் அழிந்து கொண்டிருக்கிறேன் என்று கூறியவன் யார்?

– அந்தியோக்கு அரசன் (6:13)

59. அந்தியோக்கு தன் பேரரசு முழுவதையும் தன் மகனையும் ஒப்படைத்த நண்பரில் ஒருவன் யார்?

– பிலிப்பு (6:14)

60. யானைகளை போருக்கு தூண்டி எழுப்ப எவற்றை குடிக்க கொடுத்தார்கள்?

– திராட்சை மதுவையும் முசுக்கட்டைப் பழச்சாற்றையும் (6:34)

61. வீரர்கள் அம்பாரியின்மேல் இருந்து கொண்டு போர் செய்த போது யாரும் உடனிருந்தனர்?

– இந்தியன் (பாகன்) யானையை நடத்த (6:37)

62. துணிவோடு பகைவர் படையின் நடுவே ஓடி யானையின் கால்களின் கீழ் நுழைந்து அதைக் கொன்று தானும் இறந்தவன் யார்?

– அவரான் என்னும் எலயாசர் (6:43–46)

63. யூதரோடு சமாதானம் செய்துகொள்ள அரசனுக்கு ஆலோசனை கூறியவன் யார்?

– லீசியா (6:59–60)

64. அந்தியோக்கு லீசியாவையும் அவர்களின் முகத்தில் நான் விழிக்க விரும்பவில்லை என்று கூறியவன் யார்?

– தெமேத்திரி (7:2–3)

65. தலைமைக் குருவாக ஆசை கொண்ட தலைவன் யார்?

– ஆல்கிம் (7:5)

66. யூதா செய்த கொடுமைகளைப் பார்வையிட மன்னனால் அனுப்பப்பட்டவன் யார்?

– பாக்கீது (7:8)

67. ஆல்கிமிடம் பாக்கீதிடமும் சென்று முதன்முதலில் சமாதானம் செய்து கொள்ள முயன்ற இஸ்ராயேல் மக்கள் யார்?

– நசிதேயர் (7:13)

68. பாக்கீது எருசலேமை விட்டு அகன்று ஆள்களை அனுப்பித் தன்னை விட்டு அகன்று தப்பியோடிப் போனவர்களை எங்கு போட்டான்?

– பெரும் பள்ளத்தில் எறிந்தான். (7:19)

69. தலைவர்களுள் ஒருவனும் இஸ்ரயேலை வெறுத்து பகைத்தவனுமானவன் யார்?

– நிக்கானோரை (7:26)

70. மக்களை பற்றியும் அவர்களது நலனைப் பற்றியும் கலந்து ஆய்வு செய்ய ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மன்றத்தின் உறுப்பினர் எத்தனை பேர்?

– முந்நூற்று இருபது. (8:15)

71. யாருடைய தலையையும் அவன் இறுமாப்போடு நீட்டிக் காட்டிய வலக்கையையும் துண்டித்து யெருசலேமுக்கு வெளியே தொங்கவிட்டான்?

– நிக்கானோர் (7:47)

72. இஸ்ரயேல் நாட்டை அடிமைப்படுத்திய கிரேக்கருடைய அடிமைத்தனத்தின்று தங்களை விடுவிக்கக் கேட்கும்படி தேர்ந்தெடுத்தவர்களை யூதா யாரிடம் அனுப்பினார்?

– உரோமையரிடம் (8:18)

73. சமாதானம் ஒப்பந்தம் ஆகியவற்றின் நினைவாக அவர்கள் எதில் எழுதி யெருசலேம் அனுப்பினார்கள்?

– வெண்கலத் தகடுகள் (8:22)

74. நிக்கானோரும் அவனது படைகளும் தோல்வியுற்றதை கேள்வியுற்ற தெமேத்திரியுஸ் பாக்கீதையும் ஆல்கிமையும் எந்த படைப்பிரிவோடு யூதேயா அனுப்பினான்?

– வலப்படை பிரிவோடு (9:1)

75. யோனத்தானும் சீமோனும் தங்கள் சகோதரரான யூதாவை எந்த நகரத்து கல்லறையில் அடக்கம் செய்தார்கள்?

– மோதாயின் நகரத்து கல்லறையில் (9:19)

76. இஸ்ராயேல் மக்களுக்கு பக்கீது என்ன துயர் வருவித்தான்?

– கடுந்துயர் (9:27)

77. யூதாவின் நண்பர்கள் இன்று உம்மையே எங்கள் தலைவராகவும் வழிகாட்டியாகவும் தேர்ந்து கொண்டோம் என்று யாரிடம் கூறினார்?

– யோனத்தானிடம் (9:28–30)

78. பாக்கீது தங்களை கொல்ல தேடுகிறான் என்பதை அறிந்து யோனத்தானும் அவர் சகோதரர் சீமோனும் ஓடிப்போய் எங்கு தங்கினார்கள்?

– ஆஸ்பார் குளத்து அருகே (9:33)

79. கடவுளின் திருஉறைவிடத்தின் உள் முற்றத்து மதில்களை இடித்து, தகர்க்கவும் செய்த ஆல்கிம் எந்த நோயால் தாக்கப்பட்டான்?

– பக்கவாதத்தால் தாக்குண்டான் (9:55)

80. யோனத்தான் தன்னிடம் அனுப்பப்பட்ட பிணைக் கைதிகளை யாரிடம் ஒப்புவித்தார்கள்?

– பெற்றோர்களிடம் (10:9)

81. அலக்சாண்டர் மன்னர் தம் சகோதரனாகிய யோனத்தானுக்கு —— கூறி எழுதுவது

– வாழ்த்துக் (10:18)

82. நூற்று அறுபதாம் ஆண்டு ஏழாம் மாதம் —— போது யோனத்தான் தலைமைக் குருவுக்குரிய திருஉடை அணிந்து கொண்டான்.

– கூடாரத் திருவிழாவின் (10:21)

83. சமாரியாவிலிருந்த பிரிந்து யூதேயாவோடு இணைந்த மூன்று மாவட்டங்களும் யூதேயரின் ஒரு பகுதியாகி எந்த தலைவர்க்கு கீழ் இருந்தது?

– தலைமைக் குரு (10:38)

84. உம் மகளை எனக்கு மணமுடித்துக் கொடும். நான் உம் மருமகனாய் இருப்பேன். உமது தகுதிக்கு ஏற்ற அன்பளிப்புகளை உமக்கும் அவளுக்கும் வழங்குவேன் என்று யார் யாரிடம் கூறியது?

– அலக்சாண்டர் எகிப்தின் மன்னன் தாலமிக்கு (10:54)

85. தாலமி மகள் பெயர் என்ன?

– கிளியோபத்ரா (10:58)

86. சமவெளி எங்கும் சிதறிப்போயிருந்த குதிரை வீரர்கள் அசோத்து நகருக்கு தப்பியோடி தங்களை காப்பாற்றிக் கொள்ள புகுந்து கொண்ட ஆலயம் எது?

– பெத்தாகோன் (10:83)

87. அலக்சாண்டருடைய தலையைக் கொய்த அரேபிய தலைவன் யார்?

– சப்தியேல் (11:17)

88. யூதாவையும் சமாரியாவின் மூன்று மாநிலங்களையும் வரி செலுத்துவதினின்று விலக்கினால் தான் மன்னனுக்கு என்ன கொடுப்பதாக யோனத்தான் கேட்டுக்கொண்டார்?

– பன்னிரண்டு டன் வெள்ளி கொடுப்பதாக (11:28)

89. சமாரியாவிலிருந்து பிரிக்கப்பட்ட நகரங்கள் எது?

– அபைரமா லிதா, இராமின் (11:34)

90. அலக்சாண்டரின் இளையமகன் அந்தியோக்கஸை வளர்த்து வந்த அரேபிய மன்னன் யார்?

– இமால்கு. (11:39)

91. யோனத்தான் தன் படைகளோடு எந்த ஏரி அருகே பாசறை அமைத்தார்?

– கெனசரேத்து ஏரி (11:67)

92. தலைமைக்குருவான யோனத்தானும் நாட்டின் ஆட்சிக்குழுவினரும் குருக்களும் மற்ற யூத மக்களும் தங்களின் சகோதரர்களான ––––– வாழ்த்துக் கூறி எழுதுவது.

– ஸ்பார்த்தர்களுக்கு (12:6)

93. ஸ்பார்த்தர்களும், யூதர்களும் யார்?

–ஸ்பார்த்தர்களும் யூதர்களும் சகோதரர்கள் என்பதும் ஆபிரகாமின் வழிமரபினர் என்பதும் ஆவணத்தில் காணப்படுகின்றன. (12:21)

94. யோனத்தான் திரும்பி சென்று அவர்களை முறியடித்து கொள்ளையடித்த அரேபியரின் வேறு பெயர் என்ன?

– சபதேயர் (12:31)

95. கிழக்கே பள்ளத்தாக்குக்கு மேல் இருந்த மதிலின் சுவர் விழுந்திருந்தமையால் அவர் அதைப் பழுது பார்த்தார் அது என்ன பெயரில் அழைக்கப்பட்டது?

– கப்பனாத்தா என்று அழைக்கப்பட்டது (12:37)

96. யோனத்தானையும் அவன் புதல்வர்களையும் கொன்றவன் யார் எந்த இடத்துக்கு அருகே?

– திரிபோதன், பாஸ்காமா அருகே. (13:23)

97. இஸ்ரயேல் மக்கள் தங்கள் ஆவணங்களிலும் ஒப்பந்தங்களிலும் பெரும் தலைமைக் குருவும், படைத்தளபதியும் யூதர்களின் தலைவருமான சீமோன் ஆட்சி செலுத்தினது எந்த ஆண்டு என்று எழுதத் தொடங்கினார்கள்?

– முதல் ஆண்டு (13:42)

98. எந்த நகரை துறைமுக பட்டினமாக்கினார் சீமோன்?

– யாப்பா நகர் (14:5)

99. உரோமையர்களோடு செய்திருந்த ஒப்பந்தத்தை உறுதி செய்ய ஆயிரம் மினா எடையுள்ள ஒரு பெரிய பொற் கேடயத்தோடு சீமோன் யாரை அனுப்பினார்?

– நூமேனியை (14:24)

100. அந்தியோக்கு மன்னனால், சீமோனிடம் சந்தித்துப் பேச அனுப்பப்பட்ட நண்பன் யார்?

– அத்த நோபி. (15:28)

101. சீமோன் எந்த இரு நகரங்களுக்காக நான்கு டன் வெள்ளி கொடுக்க ஒப்புக்கொண்டான்?

– யாப்பா கசரா. (15:35)

102. அந்தியோக்கு மன்னன் கடற்கரைப் பகுதிக்கு தலைவனாக ஏற்படுத்தியது யார்?

– கெந்தபாயை (15:38)

103. இஸ்ரயேலரின் பகைவர்களை எதிர்க்க எந்த இரு மைந்தர்களை சீமோன் அனுப்பினார்?

– யூதா யோவான் (16:2)

104. எதை முழக்க செய்தபோது கெந்தபாயும் அவனுடைய படை வீரர்களும் தப்பி ஓடினர்?

– எக்காளங்களை (16:8)

105. யோவான் எதுவரை சென்று பகைவர்களை துரத்தியடித்தான்?

– கிதரோன் வரை சென்று (16:9)

106. எர்கோ சமவெளிக்கு ஆளுநராக இருந்த தாலமி யாருடைய மருமகன்?

– தலைமைக் குருவின் மருமகன் (16:11–12)

107. சீமோனையும் அவருடைய மைந்தர் இருவரையும் வஞ்சகமாய் வரவேற்றுக் கொன்றவன் யார்? எங்கு?

– அபூபு மகன் தாலமி தான் கட்டியிருந்த கோட்டை தோக்கு என்னும் சிறு கோட்டைக்குள் (16:15–16)

108. சீமோனும் அவர் மைந்தர்களும் இறந்த செய்தியை தாலமி யாருக்கு எழுதி அனுப்பினான்?

– அந்தியோக்கு மன்னனுக்கு (16:18)

109. தாலமி யாரைக் கொல்வதற்கு சிலரைக் கசாராவுக்கு அனுப்பினார்?

– யோவானைக் கொல்வதற்கு (16:19)

110. யோவான் புரிந்த தீரச் செயல்கள், போர்கள், கட்டியெழுப்பிய மதில்கள் பற்றி எதில் எழுதப்பட்டிருக்கின்றன?

– குறிப்பேட்டில் வரையப்பட்டுள்ளன. (16:24)

2 மக்கபேயர்

1. கிஸ்லேவ் மாதத்தில் எந்த திரு நாளைக் கொண்டாடுகிறார்கள்?

   – கூடாரத் திருவிழாவை (1:9)

2. அந்தியோக்கும் அவன் நண்பரும் எந்த தேவதையின் கோவிலிலே அவர்களை வெட்டி வீழ்த்தினார்கள்?

   – நானயா (1:13)

3. பாரசீகத்திற்கு நாடு கடத்தப்பட்ட பொழுது குருக்கள் பலிபீடத்தினின்று எதனை எடுத்து ஒரு பாழ்கிணற்றில் மறைத்து வைத்தார்?

   – நெருப்பை எடுத்து (1:19)

4. தூய்மைப்பாடு என்று பொருள் கொள்ளும்படி நெகேமியா இட்ட பெயர் என்ன?

   – நெப்தார் (1:36)

5. நாடு கடத்தப்பட்டோர் முன்பே தங்களுக்கு ஆணையிட்ட நெருப்பை எடுத்துச் செல்ல எந்த இறைவாக்கினர் ஆணையிட்டதாகக் காணப்படுகிறது?

   – இறைவாக்கினரான எரேமியாஸ் (2:1)

6. கடவுளுக்கு ஆலயம் அர்ப்பணிக்க மன்றாடியது யார்?

   – சாலமோன் (2:8)

7. சீரோனை சேர்ந்த ——— ஐந்து தொகுதிகளில் விளக்கி உள்ள ஒரே நூலில் சுருக்கி தர முயல்வோம்

   – யாசோன் (2:24)

8. தலைமைக் குருவான ஓனியாவின் இறைப்பற்றையும் தீமை மீது அவர் கொண்டிருந்த வெறுப்பையும் முன்னிட்டு எந்த நகர் சமாதானத்தில் இருந்தது?

   – திருநகர் (3:1)

9. பலி ஒப்புக்கொடுக்கும் திருப்பணிக்குத் தேவையான எல்லாச் செலவுகளையும் தம் சொந்த வருமானத்தினின்று கொடுத்தவர் யார்?

   – ஆசியாவின் மன்னரான செலூக்கு.

10. பெனிசியா நாட்டின் ஆளுநராக இருந்த தர்சேயின் மகன் யார்?

    – அப்பொல்லான் (3:5)

11. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் விளையாட்டு விழா எந்த நகரில் கொண்டாடப்பட்டபோது மன்னனும் அங்கு இருந்தான்?

– தீர் நகரில் (4:18)

12. தன் சொந்த சகோதரனையே அகற்றிய யாசோன் வேறொருவனால் அகற்றப்பட்டு எவரிடம் ஓடிப்போனான்?

– அம்மோன் (4:26)

13. கோவிலுக்குக் சொந்தமான பொற்கலன்களைத் திருடி அந்திரோனிக்குக்கு அன்பளிப்பாக கொடுத்தது யார்?

– மெனலா (4:32)

14. மெனலாவின் மறைமுக ஆதரவினால் கோவில் பொருள்களைத் திருடித் தீட்டுப்படுத்தும் செயல்களை செய்தவன் யார்?

– லிசிமா (4:39)

15. கோவிலிலிருந்து அந்தியோக்கு எவ்வளவு வெள்ளியை எடுத்துச் சென்றான்?

– எழுபத்து இரண்டு டன் வெள்ளி (5:21)

16. பன்றி இறைச்சியை உண்ணும்படிக் கட்டாயப்படுத்தப்பட்ட தலை சிறந்த மறைநூல் அறிஞர் யார்?

– எலயாசர் (6:18)

17. உரோமையர்களுக்கு மன்னன் திறையாக செலுத்த வேண்டிய எண்பது டன் வெள்ளியை யாரை விற்று செலுத்தி விடுவதாக நிக்கானோர் திட்டமிட்டான்?

– யூதர்களை அடிமைகளாக விற்பதால் (8:10)

18. நிக்கானோரை எதிர்க்கு முன் திருநூல் யாரால் வாசிக்கப்பட்டது?

– எலயாசர் (8:23)

19. மாபெரும் கயவனான நிக்கானோர் யூதர்களை அடிமைகளாக விலைக்கு வாங்க எத்தனை வணிகர்களைக் கூட்டி வந்தான்?

– ஆயிரம் வணிகர்களை (8:34)

20. அக்காலத்தில் அந்தியோக்கு எந்த நாட்டினின்று இழிவுற்ற நிலையில் பின்வாங்கினான்?

– பாரசீகப் பகுதிகளிலிருந்து (9:1)

21. தான் துரோகி என்று அழைக்கப்பட்டதைக் கேட்டதால் தாலமி எப்படி தன் உயிரை மாய்த்துக் கொண்டான்?

– நஞ்சு உண்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டான். (10:13)

22. மக்கபேயும் அவருடன் இருந்த ஆள்களும், கடவுள் தங்கள் சார்பில் போரிடுமாறு மன்றாடி யாருடைய கோட்டையை தாக்கினார்கள்?

– இதுமேயருடைய கோட்டைகளை தாக்கினர். (10:16)

23. மன்னனுடைய பாதுகாவலனும் உறவினனும் ஆட்சி பொறுப்பினனும் யார்?

– லிசியா என்பவன் (11:1)

24. லிசியா தூதர்களை அனுப்பி எவற்றுக்கு இசையுமாறு அவர்களை தூண்டினான்?

– முறையாக உடன்பாட்டுக்கு இசையுமாறு (11:13–14)

25. மாபெரும் துரோகம் புரிந்த நகரத்தார் யார்?

– யாப்பா (12:3)

26. யோசுவா காலத்தில் இடிக்கும் கருவிகளும், படைப்பொறிகளுமின்றி எந்த நகரத்தை ஆண்டவர் விழச் செய்தார்?

– எரிக்கோவை (12:15)

27. தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்ள நயவஞ்சகமாய் அந்தியோக்கை மன்றாடியவன் யார்?

– மெனலா (13:3)

28. தெமேத்திரி வலிமைமிக்க தரைப்படையோடும் கப்பற்படையோடும் பயணம் செய்து எந்த துறைமுகத்தின் வழியாக வந்து முக்கிய நகரங்களை பிடித்துக்கொண்டான்?

– திரிப்பொலி துறைமுகத்தின் வழியாக (14:1)

29. செருக்கும் இறுமாப்பும் கொண்ட நிக்கானோர் யூதாவை வென்று அதன் நினைவாகக என்ன செய்ய் முடிவு செய்தான்?

– வெற்றிச் சின்னம் ஒன்றை எழுப்ப. (15:6)

30. யூதா அனைவரையும் கேடயம் ஈட்டி ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பை விட எதனால் அவர்களை போருக்கு ஆயத்தப்படுத்தினான்?

– ஊக்கமூட்டும் சொல் என்னும் படைக்கலத்தை (15:11)

31. எரேமியா கடவுளின் கொடையாகிய இதனைப் பெற்று உம்முடைய எதிரிகளை அடித்து நொறுக்குவாய் என்று யூதாவுக்கு கொடுத்தார்?

– இத்தூயவன் (15:16)

32. நிக்கானோர் மடிந்தானென்று அறிந்தமையால் உரத்த குரல் எழுப்பி ஆரவாரம் செய்து வல்லவரான இறைவனை எந்த மொழியில் போற்றினார்கள்?

– தங்கள் தாய் மொழியில் போற்றினார்கள். (15:29)

33. அரமேய மொழியில் மொர்தக்காயின் நாளுக்கு முந்தய நாள் என்று சொல்லப்பட்டது எந்த மாதத்தில் விழா கொண்டாட தீர்மானித்தனர்?

– அதார் என்ற பன்னிரண்டாம் மாதம் 13 ம் நாள் (13:36)

34. வாசகம் எப்படி இருக்க வேண்டும் என்பது தனது விருப்பமாக ஆசிரியர் கூறுகிறார்?

– நன்முறையிலும் கட்டுக்கோப்புடனும் (15:38.)



விவிலிய அன்னையே

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித பவுல் விவிலிய நிலையம்
பூந்தமல்லி, சென்னை-600 056